அறைவு 04 இயம் 04 August 22-28, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

ENGLISH FOR FOREIGN VISA
Contact
0770203201

HELLO MOBILE WORLD


122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

"எமது வெற்றி தடுக்கப்பட்டது...இருந்தாலும்"



# "மக்கள் ஆதரவு அளித்தனர்"

எமது வெற்றி தடுக்கப்பட்ட போதும் மக்கள் ஆதரவளித்ததால் தாம் வெற்றி பெற்றதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்டத்தில் 33,834 விருப்பு வாக்குகளால் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ள சம்பந்தன் 17



தாஜுடீனைக் கொலை செய்த அணி யார்?

பக்கம் 04

# 6 கோடி தேர்தல் நிதி??

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் செலவுகளுக்கென முக்கிய தமிழ்க் கட்சிக்கு சர்வதேச நிதியாக ரூபா. ஆறு கோடி கிடைத்ததாகச் செய்திகள் கசிந்துள்ளன.

இத்தொகையானது திருகோணமலை மாவட்டம் தவிர்ந்த தாயகப் பிரதேசத்தின் நான்கு தேர்தல் மாவட்டங்களுக்கும் தலா ரூபா. ஒருகோடி எனப் பிரிக்கப்பட்டதாகவும் எஞ்சிய இரண்டு கோடிகளும் திருகோணமலை மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்டிருந்ததாகவும் தெரிகின்றது.

இதேவேளை வேட்பாளர்கள் சிலர் தமது சொந்த நிதியில் இருந்து ஒவ்வொருவரும் சுமார் இரண்டு மில்லியன்களைச் செலவு செய்ததாகவும் தெரியவந்துள்ள போதும் இத்தகவல்களை உறுதிப்படுத்த 17



# "தனித்தேசம் அமைவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்"

பதவியேற்பில் பிரதமர்

தனித்தேசம் அமைவதை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று ஸ்ரீலங்காவின் புதிய பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்க அவர்கள் தெரிவித்துள்ளார்.

கடந்த 21ம் திகதி காலை 10.07 நிமிடத்திற்கு நான்காவது தடவையாகப் பிரதம மந்திரியாகப் பதவியேற்றுக்கொண்ட திரு. ரணில் விக்ரமசிங்க அவர்கள் தமது கன்னிப் பேச்சில் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

தமிழர்களுக்கான தீர்வாக "ஒரு நாடு, இரு தேசம்'' என்ற கோட்பாட்டை முன்வைத்து வடக்கு கிழக்கு எங்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி-அகில 17

# "தமிழர்கள் தேசிய இனம் என்பதைப் பாதுகாக்கும் எம் அரசியல் பயணம் தொடரும்"


"தமிழர்கள் ஒரு தேசிய இனமாக ஸ்ரீலங்காவிற்குள் வசிப்பதுதான் தமக்கு அச்சுறுத்தல் எனப் பெரும்பான்மையினர் நினைக்கின்றனர்.

அதனாலேயே போருக்குப் பின்னரான காலகட்டத்திலும் தமிழர்களின் தேசிய இனச் சொத்துக்களான தாயகப் பிரதேசம், மொழி, கலாசாரம் போன்றவற்றைச் சிதைக்கும் முயற்சிகள் மென்வலுப் போக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான சிதைப்புக்-களிலிருந்து தமிழினத்தின் இருப்பைக் காப்பாற்றும் எமது அரசியல் பயணம் தொடரும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்-டாளர் இரா.ஸ்ரீஞானேஸ்வரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலில் தமது கட்சிக்கு வாக்களித்து, ஒரு நாடு இரு தேசம் என்ற கொள்கையை ஆதரித்த மக்களுக்கு நன்றிகளைத் தெரிவித்த 17



இரா.ஸ்ரீஞானேஸ்வரன்



கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

# "சுயநிர்ணயத்துடன் கூடிய தீர்வுக்காக எவருடனும் இணைந்து பாடுபடத் தயார்"

சுயநிர்ணய அடிப்படையில் தேசம் அங்கீகரிக்கப்பட கூடிய சமஷ்டி தீர்வை எட்டுவதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு எடுக்கும் எந்த முயற்சிக்கும் தாம் ஒத்துழைப்பு வழங்க தயார் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் புதன் கிழமை மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

எம்மை பொறுத்தவரையில் தமிழ் தேசியம் தான் தமிழ் மக்களுக்கு ஒரு அர்த்தத்தை கொடுக்கின்றது எம்முடைய 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ, கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## மக்கள் ஆணையும் அவர்தம் எதிர்பார்ப்பும்!

தமிழ் மக்கள் மீண்டும் ஒரு முறை தமது குரல்களைப் பேசிவிட்டார்கள். கடந்த 17ம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழர்களின் அடுத்த ஐந்தாண்டுகாலத் தலைவிதியைத் தீர்மானிப்பதற்காக தமிழர் தாயகமெங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பெரும்பான்மைப் பலத்துடன் தேர்வு செய்துள்ளார்கள்.

2016ம் ஆண்டில் தமிழர்களுக்கான தீர்வொன்றை நிச்சயம் பெற்றுத் தருவோம் எனக் கூறியதுடன் 2016ம் ஆண்டுடன் நாம் எமது தீர்வு நோக்கிய அரசியல் பயணத்தையும் நிறைவு செய்துவிடுவோம் என்ற அறிவிப்பைத் தேர்தல் காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்திருந்தது.

அத்துடன் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர்களின் இனப்பிரச்சனைக்கான தீர்வாக சமஷ்டி ஆட்சிமுறையொன்றை பெற்றுகொள்வதே தமது இலக்கு என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

அதன்படி 2016ல் சமஷ்டி ஆட்சியைப் பெற்றுக்கொள்ளப் போதுமான பலத்தை தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்கியுள்ளனர்.

இவ்வாறு முன்வைக்கப்பட்ட தீர்வைப் பெற்றுக்கொண்டு ஏனைய ஸ்ரீலங்காவாழ் மக்களைப் போலவே தாமும் வாழ்வதற்கான எதிர்பார்ப்புக்களை வளர்த்துக்கொள்ளப் போகின்றனர்.

இந்த எதிர்பார்ப்பானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது மிகப் பெரும் சுமையாக இறங்கியுள்ளது.

இனவாதம் மிக்க ஆட்சியொன்று ஸ்ரீலங்காவில் முன்னெடுக்கப்பட்ட போருக்குப் பின்னரான காலப்பகுதியில் தமிழ் மக்கள் தமக்கான தீர்வு ஏதும் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு அற்றவர்களாகவே இருந்தனர். அக்காலப்பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதும் எவ்வித எதிர்பார்ப்புக்களையும் மக்கள் கொண்டிருக்கவில்லை.

ஆனால் ஜனவரி 8ம் திகதி இனவாதமற்ற நல்லாட்சியொன்றை ஸ்ரீலங்காவில் ஏற்படுத்தப் போவதாகக் கூறிக்கொண்டு முன்வந்த மைத்திரிபால ஸ்ரீசேன தலைமையிலான அணிக்குத் தமது நிபந்தனையற்ற ஆதரவைத் தமிழ் மக்கள் நல்க வேண்டும், அதன் பின்னர் தீர்வு தொடர்பாக இலகுவாக நாம் நகர முடியும் என்ற தோற்றப்பாட்டை உருவாக்கிய தமிழத் தேசியக் கூட்டமைப்பினர் நுறித்த சனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த வாக்குகளையும் புதிய சனாதிபதிக்குக் கேட்டு வழங்கியபோது தமிழர்களின் எதிர்பார்ப்பானது ஆரம்பமானது.

எனினும் அடுத்துவந்த ஆறு மாதங்களில் அந்த எதிர்பார்ப்பு எந்தளவிற்குப் பூர்த்தியானது என்பதையிட்டு தமிழ் மக்கள் திருப்திப்படவில்லை.

குறுகிய காலத்திற்குள் தமிழ் மக்களின் பல தசாப்தகாலப் பிரச்சனைக்குத் தீர்வு காண முயற்சிக்க முடியாது என்ற காரணம் கூறப்பட்டதை அடுத்து தமிழ் மக்கள் பொறுமை காத்த போதுதான் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்று முடிந்துள்ளது.

இந்நாடாளுமன்றத் தேர்தலில் புதிய சனாதிபதியுடன் இணைந்து தமிழ் மக்கள் ஜனவரி 8ம் திகதி வழங்கிய ஆணையின் படியும், ஆகஸ்ட் 17ல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்கிய ஆணையின் படியும் தீர்வு நோக்கிப் பயணிக்கப் போவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்தியுள்ளது.

தீர்வு நோக்கிய பயணமானது வெளிப்படையானதாகவும் தமிழர்கள் ஒரு தேசிய இனமாகத் தமது தாயகப் பிரதேசத்தில் வாழ்வதில் எவ்வித இடையூறுகளையும் மேற்கொள்ளாமல் இருக்க வேண்டும் என்பதும் அறிவுடையோர் அனைவரதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

பல தசாப்தங்களாகத் தீர்வு என அறிவிக்கப்பட்டவை தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதவையாகவே இருந்தன. அவ்வகைத் தீர்வு முயற்சிகள் தோல்வியும் அடைந்திருந்தன. சரியானதோர் தீர்வுக்கான எதிர்பார்ப்பே வாக்குகளின் ஊடே வெளிப்பட்டுள்ளது!

## ஆடுகளைக் கடத்தியவர்கள் கைது

அனுமதிப்பத்திரமின்றி ஆடுகளைக் கடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சியொன்று காவல்துறையின் நடவடிக்கையால் தடுக்கப்பட்டுள்ளது.

வாகனம் ஒன்றில் ஆடுகளை ஏற்றிக்கொண்டு சென்றதாகக் கூறப்படும் இரண்டு பேரை திருகோணமலை, சேருநுவர பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த வியாழக்கிழமை காவல்துறையினர் கைதுசெய்ததுடன், அந்த ஆடுகளையும் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

தோப்பூரிலிருந்து கொழும்புக்கு இந்த ஆடுகளை கொண்டு சென்றுகொண்டிருந்ததாக காவல்தறையினர் தெரிவித்தனர். வாகன சாரதி மற்றும் அவரின் உதவியாளருமே இதன்போது கைதுசெய்யப்பட்டனர். இவர்களிடம் விசாரணைகளை மேற்கொள்ளப்படுவதுடன் நீதிமன்றில் மன்நிலைப்படுத்தவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## ஹெரோயின் கடத்தியவர் கைது

திருகோணமலை, சீனக்குடா பிரதேசத்தில் ஹெரோயன் விற்பனை செய்த நபரொருவரை கடந்த சனிக்கிழமை (15) கைது செய்துள்ளதாக திருகோணமலை காவல்துறையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 14 மில்லிகிராம் ஹெரொய்ன் கைப்பற்றப்பட்டுள்ளதாக திருகோணமலை காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்நபர் நீண்ட காலமாக ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபட்டிருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகத் தெரிவித்த திருகோணமலை காவல்துறையினர் இவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளதாகவும் தெரிவித்தனர்.

## பெண்ணிடம் சேட்டை விட்டவர் விளக்கத் தடையில்!

திருகோணமலை, கந்தளாய் பிரதேசத்தில் தனிமையில் இருந்த பெண்ணிடம் சேட்டை செய்த சந்தேக நபரை செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதவான் நீதிமன்ற நீதிபதி ருவன் திஸாநாயக்க கடந்த வியாழக்கிழமை(20) உத்தரவிட்டார்.

குறித்த சந்தேக நபர், கந்தளாய் சீனிக்கம்மானைக் கிராமத்தில் தனிமையில் இருந்த பெண்ணின் கையைப்பிடித்து இழுத்ததாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிலேயே இத்தடை விதிக்கப் பட்டுள்ளது.

## தேசியப் பட்டியல் ஆசனத்தைத் துரைக்கு வழங்குக!

நடந்து முடிந்த இலங்கைப் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தமிழரசுக் கட்சியில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு 14,779 வாக்குகளைப் பெற்று இரண்டாம் நிலையில் இருக்கும் தமிழரசுக் கட்சியின் துணைத்தலைவர் க. துரைரெட்ணசிங்கத்திற்கு தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்ற உறுப்புரிமையை வழங்குமாறு திருகோணமலை மாவட்ட கல்விப்புலம் சார்ந்தோர், கட்சியின் மூத்த உறுப்பினர்கள், சங்கங்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் விடுத்த கோரிக்கையில் :

நீண்டகாலமாக தமிழரசுக்காக உழைத்தவரும் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர், சேருவில, திருகோணமலை மக்களினை பிரதிநிதித்துபடுத்துபவர் என்னும் அடிப்படையிலும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியிலும் இம்முறை தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குக் கிடைத்துள்ள இரண்டு மேலதிக பாராளுமன்ற ஆசனங்களில் ஒன்றினை ஒதுக்கி க. துரைரெட்ணசிங்கத்தினை பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்வதற்கு ஆவன செய்து உதவுமாறு மிகுந்த எதிர்பார்ப்புடன் வேண்டுகின்றோம் என திருகோணமலை மாவட்டத் தமிழ் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

## “ஒற்றுமையை ஏற்படுத்துவது எனது கடமை”

திருகோணமலை, கந்தளாய் பிரதேசத்தில் தனிமையில் இருந்த பெண்ணிடம் சேட்டை செய்த சந்தேக நபரை செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதவான் நீதிமன்ற நீதிபதி ருவன் திஸாநாயக்க கடந்த வியாழக்கிழமை(20) உத்தரவிட்டார்.

குறித்த சந்தேக நபர், கந்தளாய் சீனிக்கம்மானைக் கிராமத்தில் தனிமையில் இருந்த பெண்ணின் கையைப்பிடித்து இழுத்ததாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிலேயே இத்தடை விதிக்கப் பட்டுள்ளது.

## போக்குற்றத்தினை விசாரிக்க உள்ளக விசாரணைப் பொறிமுறை!!!

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஜெனீவா மனித உரிமைச் சபையின் சர்வதேச விசாரணைகளை தவிர்த்து உள்ளக விசாரணைகளை நடத்துவது என கூறப்பட்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போரில் வெற்றிகொண்ட படையினரை காட்டிக்கொடுக்கும் செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபடாது என்ற வாசகம் காணப்படுவதாகவும் அந்த தகவல்கள் கூறுகின்றன.

கொழும்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று கைச்சாத்திப்பட[illegible] வந்த புரிந்துணர்வு உடன்படிக்கை[illegible] பிரச்சினைக்காக தீர்வு பற்[illegible] குறிப்பிடப்படவில்லை என்று[illegible] கிழக்கு மாகாணத்திற்கான [illegible] நடவடிக்கைகள் [illegible] பேசப்பட்டுள்ளது என்றும் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.




## எதிர்கட்சித்தலைவராக சம்பந்தனை நியமிக்க! - செல்வம் கோரிக்கை

எதிர்க்கட்சித் தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை நியமிக்க வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்திருப்பதால் பதினாறு ஆசனங்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே நாடாளுமன்றத்தில் அடுத்த பெரும் கட்சியாக உள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்க வேண்டும் என செல்வம் தனது விவாதத்தை முன்வைத்துள்ளார்.

## திருகோணமலையில் திரளும் சர்வதேச உல்லாசப் பயணிகள்






சந்தோசமாகக் கடத்தும் உல்லாசப் [illegible]டன் திரிவதைக் காணலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
மட்டக்களப்புச் செய்திகள்

# மட்டக்களப்பு மக்களை ஏமாற்றிய

## பிரதமர் ரணில்



மட்டக்களப்பைச் சேர்ந்த சசிதரனுக்கு தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்குவதாக வாக்குறுதியளித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

ஆனால் அதனை நிறைவேற்றாது மட்டக்களப்பு தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் பலர் விசனம் தெரிவித்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விபரம் வெளியாகியுள்ள நிலையில் குறித்த பெயர் பட்டியலில் சசிதரனின் பெயர் உள்ளடக்கப்படாததை கண்டு அதிர்ச்சியடைந்த ஆதரவாளர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தங்களது விமர்சனத்தை வெளியிட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் உள்ள தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்து வேட்பாளர் ஒருவரை வெற்றியடையச் செய்தால் கடந்த 30 வருடகாலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தராக இருந்துவரும்

## வாக்களித்த அனைவருக்கும் நன்றி.

"நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக தேர்தல் களத்தில் நின்ற எனக்கு வாக்களித்து தமிழ்த் தேசியத்திற்கு உரமூட்டிய அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியை தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்" இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் நேற்று வெள்ளிக்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "நாடாளுமன்றத் தெரிவில் நான் தவறவிடப்பட்டமை எனது தமிழ்த் தேசிய உணர்விலோ அதற்கான செயற்பாட்டிலோ எந்தவித தளர்வையும் ஏற்படுத்தவில்லை. மாறாக அதை வலுப்படுத்தியுள்ளது. எமது மக்கள் தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவுசெய்யும் சிறந்த சந்தர்ப்பம் இம்முறை இருந்தது. இது தொடர்பாக எம்மால் தெளிவாக அறிவுறுத்தப்பட்டது. ஆனாலும், இந்த அரிய வாய்ப்பு நழுவவிடப்பட்டமை பெருமைக்குரிய விடயம் அல்ல என்பதை நாம் ஏற்றுக்கொண்டேயாகவேண்டும்" என்றார்.

## த.தே.கூ தன் தார்மீக கடமையை நிறைவேற்ற வேண்டும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கடமையை முழுமையாக நிறைவேற்ற வேண்டிய தார்மீக கடப்பாட்டிலுள்ளது என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பில் அதிக விருப்புவாக்குகளைப்பெற்று வெற்றிபெற்ற ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

துறைநீலாவணை பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகள் இணைந்து நடாத்திய வரவேற்பு நிகழ்வின் போது உரையாற்றிய அவர்,

பட்டிருப்பு தொகுதியில் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டுள்ளது என்று யாரும் கவலை கொள்ளத் தேவையில்லை. ரயில் தண்டவாளங்கள் இரண்டு சமாந்தரமாக இருப்பதைப் போன்று எம்முடைய இனப்பிரச்சினைக்கான தீர்வு தண்டவாளங்கள் போல் இருந்தால் எமது அடிப்படை பிரச்சனைகள், தேவைகள் என்பவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து அதற்குரிய அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

ஒரு காலத்தில் நாங்கள் ஒரு போராட்ட சக்தியினை நம்பியிருந்தோம். அந்த சக்தி வலுவிழக்கப்பட்டதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையாக தங்களது கடமையை நிறைவேற்ற வேண்டிய தார்மீக கடப்பாட்டிலுள்ளது எனத் தெரிவித்தார்.



## நீதி கோரி மறியல் போராட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரிவுக்குட்பட்ட வலையிறவு பாலத்தில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து பொதுமக்கள் பாலத்தினை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். விபத்து தொடர்பில் காவல்துறை பக்கச்சார்பாக நடந்து கொண்டுள்ளதாக தெரிவித்தே பொதுமக்கள் இந்த போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

நேற்று காலை 7.00 மணியளவில் மட்டக்களப்புக்கு வேலைக்கு சென்றுகொண்டிருந்த கன்னன்குடாவை சேர்ந்த 27வயதுடைய கே.சுதாகரன் என்ற இளைஞனை மண் ஏற்றிவந்து கொண்டிருந்த கன்டர் வாகனம் மோதியுள்ளது.

இதன்போது இளைஞன் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததுடன், சம்பவ இடத்துக்கு வந்த காவல்துறையினர் உடனடியாக விபத்தினை ஏற்படுத்திய வாகனத்தினை காவல் நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளனர்.

எனினும் உரிய விசாரணையினை மேற்கொள்ளாமல் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றதாக தெரிவித்து பொதுமக்கள் வலையிறவு பாலத்தினை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



## மீண்டும் குளறுபடியில் கணித வினாவிடை போட்டி



மட்டக்களப்பிலுள்ள பாடசாலையொன்றில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடத்தவிருந்த இந்தப் பரீட்சை உரிய நேரத்தில் ஆரம்பிக்கப்படாத காரணத்தினால் மாணவர்களுடன் ஆசியரும் பெற்றோரும் சிரமத்துக்கு உள்ளாகினர்.

பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் வராத காரணத்தினால் மாலை 4 மணியான பின்னும் பரீட்சை நடைபெறாத நிலையில் பெற்றோர் கடும் விசனத்தை தெரிவித்திருந்ததுடன், அங்கிருந்த அதிகாரிகளுடனும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பில் மாகாண கல்விப்பணிப்பாளர் என்.எம்.நிசாம் கருத்து தெரிவிக்கையில்,

"கடந்த ஜுன் மாதம் நடாத்தப்பட்டிருந்த நிலையில் குறித்த பரீட்சையில் அதிகளவில் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் சித்திபெற்றிருந்தனர். எனினும் அது தொடர்பில் பல தரப்பினராலும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் நான்கு பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டு அதுதொடர்பில் ஆராயப்பட்டு மீண்டும் பரீட்சை நடத்த தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில் அந்த பரீட்சையை மீண்டும் நடாத்தவும் அன்றைய பரீட்சை வினாத்தாளை அன்றைய தினமே தயாரித்து நடத்துவது எனவும் அதற்காக பிற்பகல் வேளையில் அந்த பரீட்சையை நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. முற்பகல் 11.30 மணியளவில் தமிழ்மொழி வினாத்தாள்கள் பூர்த்திசெய்யப்பட்டபோதிலும் ஏனைய மொழி வினாத்தாள்களை பூர்த்திசெய்வதில் காலதாமதம் ஏற்பட்டது. அதன் காரணமாக இந்த பரீட்சையில் ஆறாம் தரம் தவிர ஏனைய தரங்களுக்கான பரீட்சை தினத்தில் நடத்தப்பட்டது என்றார்.

## மட்டக்களப்பின் தேர்தல் முடிவு - சுருக்கம்



குழப்பத்தின் மத்தியில் இருந்து மட்டக்களப்பின் உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் 127185 வாக்குகளைப்பெற்று தமிழ் தேசிய கூட்டமைப்பு மூன்று ஆசனங்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 38477 வாக்குகளைப்பெற்று ஒரு ஆசனத்தினையும் ஐக்கிய தேசிய கட்சி 32359வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தினையும் பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு 32232 வாக்குகளைப்பெற்று 127 வாக்குகள் குறைவாக பெற்றதன் காரணமாக ஆசனத்தனத்தினை இழந்தது.

## 899 பேர் கைது

தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள 899 பேருக்கும் எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக காவல்துறை ஊடகப் பேச்சாளரும் பிரதி காவல் அத்தியட்சகருமான ருவன் குணசேகர தெரிவித்தார். தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்தில் இருந்து இதுவரை 899 பேர் காவல்துறையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புக்கள் மற்றும் தேர்தல் சட்ட விரோத செயற்பாடுகள் காரணமாக வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட் இவர்கள் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களுக்கமைய இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
தேசிய செய்திகள்

# தாஜுடீனின் கொலைக்கு "கோத்தா" வின் கொலைப்படையே காரணம்

## -கொழும்பு டெலிகிராப்-

றகர் விளையாட்டு வீரரான வசீம் தாஜுடீனின் கொலையை நடாத்தியவர்கள் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபாய ராசபக்சவின் கீழியங்கிய "கொலைப்படையினர்" தான் என நம்பத்தகு தகவல்களைத் தாம் பெற்றிருப்பதாக பிரபல்யமான செய்தி இணையத்தளமாக கொழும்ப டெலிகிராப் செய்தி வெளியிட்டுள்ளது.

யோசித்த ராசபக்சவுடன் இணைந்திருந்த றகர் விளையாட்டு குழுவினரின் படி தாஜுடீன் கொல்லப்பட்ட நாளன்று யோசித்தவும் தாஜுடீனும் கடும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதாகவும் அதன் பின்னர் அன்றைய இரவே யோசித்த கொத்தபாயவைத் தனியாகச் சந்தித்து தாஜுடீனை இல்லாதொழிக்க வேண்டும் எனக் கோரியதாகவும் இத் தளம் கூறியுள்ளது.

"ராசபக்ச சகோதரர்களை" அவமரியாதையாகப் பேசும் தாஜுடீன் அகற்றப்பட வேண்டும் என்ற அழுத்தத்தை மேலும் பல கடற்படை றகர் விளையாட்டு வீரர்ாகளும் யோசித்தவிற்குக் கொடுத்திருந்தனர். கடற்படை றகர் விளையாட்டுப்பிரிவிற்கு தாஜுடீனை உள்வாங்குவதற்குப் பலதடவைகள் மேற்கொள்ளப்பட்ட வேண்டு- கொளிற்குச் செவிசாய்க்காத தாஜுடீன் தான் எச்சந்தர்ப்பத்திலும் ராசபக்சாக்களுடன் தொடர்புகளைப் பேண விரும்பவில்லை எனத் தெரிவித்திருந்தார்.

எனினும் தனது மகனுக்கும் இக்கொலைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனத் தெரிவித்திருந்த மஹிந்த ராசபக்ச ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைக்கும் பட்சத்தில் இக்கொலை தொடாபான பக்கச் சார்பற்ற விசாரணைகள் நடத்தப்படும் என உறுதியளித்திருந்தார். அதே வேளை அக்காலத்தைய மந்திரிசபைப் பேச்சாளரான ராஜித சேனாரத்ன இக்கொலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது சனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த மூவருக்குத் தொடர்பிருப்பது கண்ட பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

தாஜுடின் கடத்தப்பட்ட வாகனமானது இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அக்காலத்தைய முதற் பெண்மணி சிராந்தி ராசபக்ச அவர்களின் தன்னார்வத் தொண்டமைப்பில் வழங்கப்பட்ட டிபெண்டர் ரக ஜீப் வண்டியொன்று என நம்பப் படுகின்றது.

இந்த வாகனத்தினைக் கைப்பற்றிய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் அவ்வாகனத்தின் வர்ணப் பூச்சு ஏன் மாற்றப்பட்டது என்பது தொடர்பாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவரிடமும், பணிப்பாளர் நாயகத்திடமும் தகவல்களைத் தனித்தனியகப் பெற்டறுள்ளனர் என அவ்விணையத் தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.



# போர்க்குற்றத்தை மறைக்கப் போகும் அமெரிக்க அறிக்கை

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வெளிவரவுள்ள போர்க்குற்றங்கள் தொடர்பான ஐக்கியநாடுகள் மனித உரிமைச் சபையின் அறிக்கையிலுள்ள குற்றச்சாட்டுக்களை அமெரிக்காவினால் வெளியிடப்படவுள்ள அறிக்கையொன்று காப்பாற்றிவிடும் என்ற செய்தி வெளியாகியுள்ளது.

மனித உரிமைச் சபையின் அறிக்கையில் இராணுவம். கடற்படை மற்றும் வான்படையினர் உட்பட நாற்பத்து மூன்று படையினரின் பெயர்கள் குறிக்கப்பட்டு அவர்கள் போர்க்குற்றங்களுடன் சம்பந்தப்பட்டிருப்பதுடன் மனித குல மாண்புக்கு எதிரான அத்து மீறல்களைப் புரிந்திருப்பதாக வெளிப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் நம்பத்தகு தகவல்களின் அடிப்படையில் அமெரிக்காவினால் வெளியிடவுள்ள அறிக்கையொன்று போரின் போது மக்களைப் பாதுகாக்கும் ஜெனீவாச் சமவாயத்தின் உடன்பாட்டின் இலக்கம் 4ன் படி பொதுமக்கள் மனிதக் கேடயங்களாக நான்கு தொடக்கம் ஆறு மாதங்கள் வரை விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப் பட்டதாகவும் அதனையடுத்து அவர்களை மீட்க இலங்கைப் படையினர் தமது சுயவிருப்பில் ஈடுபட்டதாகவும் அச் செயற்பாடானது போர்க்குற்றங்கள் என்ற வரையறைக்குட்பட்டதல்ல என்றும் வெளிளப்படுத்தவுள்ளதாக சட்டவாளர் பிரதிபா மஹநாமஹேவா வெளிப்படுத்தியுள்ளார்.

முன்னரும் அப்பாவிப் பலஸ்தீனியர்கள் முன்னூறு பேரை இஸ்ரேலியப் படைகள் கொலை செய்தமை தொடர்பாக அதி வந்தனைக்குரிய கொட்டார்ட் அவர்களால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை தூக்கியெறிந்ததாக தெரிவித்த மஹநாமஹேவா "ஜநா தனது அறிக்கைகள் தொடர்பான இரகசியத் தன்மையைப் பாதுகாக்க வேண்டும் என்றும் அவ்வாறில்லாதவிடத்து அவ்வறிக்கைகள் தப்பான பிரயோகங்களுக்கு வழிவகுத்து ஐநாவைச் சுய தெளிவுபடுத்தல் நிலைக்குத் தள்ளிவிடும்'' எனவும் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்ற சபாநாயகராக கரு ஜெயசூரிய

புதிய நாடாளுமன்றத்தின் சபாநாயகராக ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் செப்டம்பர் 1 ஆம் திகதி நடைபெறவுள்ள புதிய நாடாளுமன்றத்தின் முதல் அமர்வில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் இவரது பெயர் முன்மொழியப்பட-வுள்ளதாக தெரியவந்துள்ளது. ஐ.தே.கவின் தேசியப் பட்டியிலில் கரு ஜெயசூரியவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன் புதிய நாடாளுமன்றத்தின் முதல் உறுப்பினராக கரு ஜெயசூரிய பதவி-யேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தேசிய நல்லிணக்கத்திற்கான ஆதரவு தொடரும்

## ஆஸி வெளிவிவகார அமைச்சர்

இலங்கையின் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டிக் காப்பதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்குமென அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜுலி பிஸொப் தெரிவித்துள்ளார். இலங்கையின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்படி கூறியுள்ளார். "அமைதியான முறையில் கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலினூடாக மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்துள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிராந்திய மற்றும் சர்வதேச சவால்களை முறியடிப்பதற்கு, இரு நாட்டுக்குமிடையில் காணப்படும் வலுவான பிணைப்பினூடாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்ந்தும் சேவையாற்றக் காத்திருக்கிறோம். அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் வலுவான, நீண்டநாள் உறவு காணப்படுகிறது. அந்த உறவினூடாக வர்த்தக மற்றும் முதலீட்டு உதவிகளைத் தொடர்ந்தும் பரிமாறிக் கொள்ளவுள்ளோம். அத்தோடு தேசிய பாதுகாப்பு மற்றும் ஆட்கடத்தலைத் தடுப்பது போன்ற விவகாரங்களிலும் கூடிய கவனமொடுப்பது தொடர்பிலும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துடன் நெருங்கிச் செயற்படவுள்ளோம். அத்தோடு, இலங்கையின் தேசிய நல்லிணக்கத்தைக் கட்டிக் காப்பதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் பூரண ஒத்துழைப்பும் வழங்கும்" என அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜுலி பிஸொப் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்க் கிராமத்தைக் கைப்பற்ற முயற்சி

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட குருவில்வான் இசைமாள மோட்டை கிராமத்தில் 1972 ஆம் ஆண்டு தொடக்கம் வசித்துவரும் மக்களின் காணிகளை அபகரிக்க வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் மன்னார் பிரஜைகள் குழுவில் முறைப்பாடு.செய்துள்ளனர்.

மேலும் மக்கள் ஐபிசி தமிழ் தொடர்பிற்கு தெரிவித்ததாவது, தற்போது தமக்கு எதிராக வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தம்மை கிராமத்தில் இருந்து முற்றாக வெளியேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு-ள்ளதாகவும் விசாரணைகள் இடம் பெற்று வரும் நிலையில் கடந்த புதன்கிழமை மாலை கிராமத்திற்குள் வந்த வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் [illegible] "[illegible]வி சரணாலயம்" என பலகைகளை [illegible]ளதாகவும் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
உலகச் செய்திகள்

# நிறைவேற்று அதிகாரியாக ஓர் தமிழன்

தமிழரான சுந்தர் பிச்சை கூகுள் நிறுவனத்தின் புதிய பிரதம நிறைவேற்றதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். 43 வயதான பிச்சை சென்னையைச் சேர்ந்தவர். சென்னை பத்மா சேஷாத்ரி பால பவன் பள்ளியில் படித்த இவர் பின்னர் ஐ.ஐ.டி. கரக்பூரில் பொறியியல் பட்டமும், ஸ்டான்.'.போர்டு பல்கலைக்கழகத்தில் எம்.எஸ் பட்டமும், பென்சில்வேனியாவில் உள்ள வார்டன் கல்லூரியில் எம்.பி.ஏ. பட்டமும் பெற்றவர்.


2004ம் ஆண்டு கூகுள் நிறுவனத்தில் சேர்ந்தார். தற்போது தலைமை துணைத்தலைவராக இருக்கும் இவர், ஆண்ட்ராய்ட், கூகுள் குரோம், கூகுள் என்ஜினியரிங், ஆப்ஸ், ஜிமெயில், கூகுள் டோக்ஸ் உள்ளிட்ட பிரிவுகளைக் கவனித்து வந்தவர். 2008ம் ஆண்டு பிச்சை தலைமையிலான குழு தான் குரோம் பிரவுசரை உருவாக்கியது.

இந்நிலையில் கூகுள் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

பிச்சையின் நியமனம் மூலம் உலகின் சிறந்த இரண்டு நிறுவனங்களான மைக்ரோசொப்ட், கூகுள் ஆகியவற்றின் தலைமை பிரதம நிறைவேற்றதிகாரிகளாக இந்தியர்கள் பொறுப்பில் உள்ளனர்.




## நீர் ஆவியாகா இருக்க புதிய யுக்தி



லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ளது சில்மர் நீர்த்தேக்கம். இங்குள்ள நீர் வேகமாக ஆவியாகி வருகிறது. எனவே, இதனைத் தடுக்கும் வகையில் இந்த நீர்த்தேக்கம் முழுவதும் 9.6 கோடி கறுப்பு நிற பிளாஸ்டிக் பந்துகள் போடப்பட்டுள்ளன. இவ்வாறு கறுப்பு பந்துகள் கொட்டப்பட்டிருப்பதன் மூலம் ஓராண்டுக்கு 300 காலன் (1135 லிட்டர்) தண்ணீர் ஆவியாகாமல் தடுக்கப் படுகிறது. மேலும், அழுக்கு, ரசாயனம் போன்றவற்றில் இருந்தும் பாதுகாக்கப்படுகிறது என அதிகாரிகள் கூறுகின்றனர். அத்துடன் சூரியனில் இருந்து வெளிவரும் புற ஊதாக்கதிர்களையும் தண்ணீருக்குள் ஊடுருவ விடாமல் இந்தப் பந்துகள் தடுத்து விடுகின்றனவாம்.

## இணைவோரின் அவுஸ்திரேலிய பிரஜாவுரிமை நீக்கப்படும்

மத்திய கிழக்கிலுள்ள இஸ்லாமிய ஆயுதக் குழுக்களுடன் இணைவதற்காக, அவுஸ்திரேலியாவை விட்டு விமானம் மூலம் வெளியேற முயன்ற ஏழு இளைஞர்களைக் கைது செய்துள்ளதாக, அவுஸ்திரேலிய பிரதமர் டொனி அபொட் தெரிவித்தார். தற்போதைய நிலையில், குறைந்தது 70 அவுஸ்திரேலியர்கள் ஈராக்கிலும் சிரியாவிலும் ஆயுதக்குழுக்களுடன் இணைந்து போரிட்டு வருவதாகவும், அவுஸ்திரேலியாவிலுள்ள ஏறத்தாழ 100 பேர் இவர்களுக்கான இணைப்பாளர்களாகச் செயற்படுவதாகவும், பாராளுமன்றத்தில் வைத்து டொனி அபொட் குறிப்பிட்டார்.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்கள் ஆயுதக் குழுக்களில் இணைவது அண்மைக்காலமாக அதிகரித்துவரும் நிலையில், அதற்கெதிரான நடவடிக்கைகளில் அந்நாட்டு அரசாங்கமும் காவல்துறையினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

## 4 வருட ஆர்ப்பாட்டம் வெற்றியில்

பிரித்தானிய அரசாங்கம் ஈரானில் தனது தூதரகத்தை 4 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் திறக்கவுள்ளது. கடந்த 2011ஆம் ஆண்டு ஈரானில் ஏற்பட்ட குழப்பத்தை அடுத்து அந்நாட்டிலுள்ள தனது தூதரகத்தை பிரித்தானியா தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. அணு ஆய்வு தொடர்பாக பிரித்தானியாவின் அழுத்தங்களுக்கு மத்தியில் ஈரான் மீது தடை விதிக்கப்பட்டிருந்தது.

பின் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் அடிப்படையில் ஈரானின் அணுஆய்வு தொடர்பாக அண்மையில் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, ஜேர்மன், பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுக்கு இடையில் விசேட பேச்சு நடத்தப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே தெஹ்ரானிலுள்ள தனது தூதரகத்தை மீள்திறப்பதற்கு பிரித்தானியா நடவடிக்கை எடுத்திருப்பதாக அந்நாட்டு இராஜாங்கச் செயலாளர் பிலிப் ஹாமன்ட் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றியபோது தெரிவித்துள்ளார்.

## 3000 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்



பாகிஸ்தான் மற்றும் ஆப்கானை சேர்ந்த பழங்குடி இன தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தும் பாகிஸ்தான் பகுதிகளில் அந்நாட்டு ராணுவம் நடத்திய விமான தாக்குதலில் 43 பேர் கொல்லப்பட்டதாக தெரியவந்துள்ளது. இது பற்றி பாகிஸ்தான் ராணுவம் கூறும் போது "வடக்கு மற்றும் தெற்கு வாஜிரிஸ்தான் பகுதிகளின் ஷவால் பள்ளத்தாக்கு பகுதியில் பாகிஸ்தான் ராணுவத்தின் விமானங்கள் தொடர்ந்து குண்டுவீச்சு நடத்தின. இதில் தீவிரவாதிகளின் மறைவிடங்கள் அழிக்கப்பட்டன. மேலும் இத்தாக்குதலின் போது அங்கு பதுங்கியிருந்த 43 பயங்கரவாதிகள் உயிரிழந்தனர்" என தெரிவித்துள்ளது. மேலும் அப்பகுதியை சேர்ந்த 3000 தீவிரவாதிகளை இதுவரை கொன்றுள்ளதாக ராணுவம் தெரிவித்துள்ளது.

## பெண் குதிரை கற்பழிப்பு – தீவிர தேடுதலில் காவல்துறை

ஸ்கொட்லாந்தில் உள்ள அபெர்டீன்ஷைர் நகரை சேர்ந்த சோ ரைட் என்ற பெண்மணி வசித்து வருகிறார். குதிரைகள் மீது அதிக பிரியம் கொண்ட இவர், ஒரு பெண் குதிரையை கடந்த 18 ஆண்டுகளாக செல்லமாக வளர்த்து வந்துள்ளார். இந்நிலையில், கடந்த 17ம் திகதி இரவு வேளையில், அவரது பண்ணைக்கு நள்ளிரவு நேரத்தில் மர்ம நபர் ஒருவன் வந்து கட்டப்பட்டு இருந்த குதிரைக்கு பாலியல் ரீதியில் சித்திரவதை அளித்து, பின் குதிரையின் மார்பில் சரமாரியாக கத்தியால் குத்தி கொன்றுள்ளான்.

இந்த சம்பவம் தொடர்பாக பேசிய நகர பொலிசார், பெண் அளித்துள்ள புகாரை தொடர்ந்து குற்றவாளியை தேடி வருவதாகவும், குதிரையை கொடூரமாக கொன்று மற்ற விலங்குகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் அந்த மர்ம நபர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என உறுதிப்பட தெரிவித்துள்ளனர்..

## பெண்களுக்காக அமெரிக்காவில் அனுமதி

பெண்களுக்கான வயாக்ரா மாத்திரைக்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்[illegible] (எப்.டி.ஏ.). அனுமதி வழங்கி உள்ளது. பெண்களுக்கு பாலியல் ஆர்வத்தை தூண்டும் வகையில் ஜேர்மனியால் தயாரிக்கப்பட்ட வயாகரா மாத்திரை உரிமையை அமெரிக்க நிறுவனம் வாங்கி விட்டது.

தற்போது "பிளிபான்செரின்" என்ற பெயரில் அமெரிக்க நிறுவனம் ஒன்று தயாரித்துள்ளது. இந்த மாத்திரையால் பக்கவிளைவுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்று விமர்சனங்கள் எழுந்தபோதிலும், அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (எப்.டி.ஏ.) தற்போது இந்த மாத்திரைக்கு அனுமதி வழங்கியுள்ளது.

## வறுமையினால் வாடியோருக்கு 50 மில்லியன் டொலர்

கனடா நாட்டை சேர்ந்த தம்பதிகள் வறுமையில் போராடி வரும் நிலையில், பரிசு கூப்பன் மூலம் ஒரே நாளில் 50 மில்லியன் டொலர்களுக்கு அதிபதிகளாக மாறிய சம்பவம் அவர்களை உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் இருவர் திருமணம் செய்திருந்த நிலையிலும், போதிய வருமானம் இல்லாததால் தேனிலவிற்கு கூட செல்ல முடியாமல் வறுமையில் போராடி வந்துள்ளனர். இந்நிலையில், லோட்டோ மேக்ஸ் என்ற நிறுவனம் நடத்திய பரிசு போட்டியில் வாங்கிய கூப்பனில் 50 மில்லியன் டொலர் பரிசு கிடைத்துள்ளதாக லோட்டோ மேக்ஸ் நிறுவனத்தினர் அறிவித்தனர். பரிசு தொகையை பெற்ற தம்பதிகள், முதலில் இந்த பணத்தில் நாங்கள் தேனிலவிற்கு டோரண்டோ நகர் செல்ல திட்டமிட்டு இருப்பதாக உற்சாகமாக தெரிவித்தனர்.




## ஆட்கடத்துவோரை கட்டுப்படுத்த நடவடிக்கை

ஆட்கடத்தல்காரர்களை கட்டுப்படுத்தும் வகையில் கலாய் பிராந்தியத்தில் பிரித்தானியாவும் பிரான்ஸும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு நிலையமொன்றை நிறுவியுள்ளன. பிரான்ஸின் வட பிராந்தியம் மற்றும் கலாய் பிராந்தியத்திலுள்ள சுரங்க நுழைவாயில் பகுதியில் ஆட்கடத்தலில் ஈடுபடும் குற்றவாளிகளை கட்டுப்படுத்தும் வகையில் இந்த நிலையம் உருவாக்கப்பட்டுள்ளதாக பிரித்தானிய உள்விவகார அலுவகம் கூறியுள்ளது.

பிரான்ஸ் மற்றும் பிரித்தானியாவை சேர்ந்த தலா ஒரு சிரேஷ்ட உறுப்பினர்கள் இந்த நிலையத்தை தலைமை தாங்கி செயற்படுத்தவுள்ளதுடன், தமது அறிக்கைகளையும் அரசாங்கத்திற்கு சமர்பிக்கவுள்ளனர்.

தற்போது நீடிக்கும் சட்டவிரோத புகலிடப் பிரச்சினையை சமாளிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்படவுள்ள உடன்படிக்கையின் ஒரு பகுதியாக இந்த நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

# வீணையடி நீ எனக்கு…



29

– கவிஞர் வி.மைக்கல் கொலின்–

–கானல் நீர்
வெளிக் காட்டில்
காலத் தெருவினூடே
என் இருப்பைத் தேடும்
சுயானுபவத்தில் நான்
விடிதல் வேண்டி
தினம்
உன் ஞாபக கற்களில்
கால் இடறி . .
சுட்டெரிக்கும்
பால் வெளியில்
கிழிபட்டுத் தொங்கும்
கனவுகளைச் சுமந்து
யாத்திரை போகும் இவன்
கண்ணீர்த் துளிகள் வழிகின்றன
ஸகீ …
நீண்ட பாதையின்
இடைநடுவே
இடம் மாறிப் போனாயோ..?–

— பிரபஞ்சப் பிரியன் —

இது வரை நான் அனுபவிக்காத இனிய உணர்வுகள் இது. இதுதான் காதலென்றால். ரதன் நான் உங்களை காதலிக்கத் தொடங்கி விட்டேன்.

கண்டதும் காதல் என்று இலக்கியத்தில் படித்திருக்கிறேன். ஆனால் அது வாழ்க்கையிலும் சாத்தியமாகும் என்பது இதுதானோ? என்று தொடர்ந்த வரிகள் ஒவ்வொரு பக்கத்திலும் கிட்டத்தட்ட ஒரு நாட் குறிப்பை போன்றே எழுதப் பட்டிருந்தது. இடை இடையே சில காதல் கவிதைகள் அதில் ரதனுடைய சில கவிதைகளும் எழுதப்பட்டிருந்தன

அதைப் படிக்கப் படிக்க நிவேதாவுக்கு தலையைச் சுற்றுவதைப் போலவே இருந்தது. தன்னை போலவே விமலாவும் ரதனின் கவிதைகளை ரசிக்கும் ஒருத்தி என்பதை அவளால் ஏற்றுக்கொள்ள முடிந்தாலும். தன்னைப் போலவே அவளும் ரதனை நேசிக்கும், காதலிக்கும் ஒருத்தி என்பதை



நிவேதாவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அதுவும் அந்த கொப்பியின் கடைசிப் பக்கத்தில் எழுதியிருந்த அந்த வரிகள் அவளை மிகவும் பாதித்தது.

“அன்பே
உன்னைச் சந்திக்காமலேயே
என் காதல் தீயை
வளர்த்துக்கொண்டேன்
இந்த தீயை அணைக்கும்
தண்ணீர்
நீ மட்டுமே
நீ தண்ணீராக வருவாயா
என் வாழ்வின் தாகம்
தீர்ப்பாயா……?
உனக்காகவே என்றும்
காத்திருக்கும்
இவள்”

அந்த வரிகள் நிவேதாவை என்னமோ செய்தது.

தினமும் ரதனைக் கண்டும் கதைத்தும் தன காதலை வளர்த்துக் கொண்டதை விட, ரதனுடன் கதைக்காமல் அவனை சந்திக்காமல் அவள் எந்தளவுக்கு அவனை விரும்பி இருக்கிறாள் என்பதை நினைக்க விமலா மேல் கொஞ்சம் பொறாமையாகவும் இருந்தது. அதே வேளை இன்னுமொரு பெண்ணாலும் தனது ரதன் நேசிக்கப் பட்டிருப்பதை நினைக்கவும் அந்த ரதனின் காதலியாகவும், அன்புக் குரியவளாகவும் தான் இருப்பதை நினைக்க அவளுக்கு பெருமையாகவும் இருந்தது. இது நாள் வரை விமலா தனது காதலை ரதனிடம் தெரிவிக்காமலேயே இருந்திருக்கிறாள் என்பது புரிந்தது.தானும் ரதனும் காதலிப்பது சண்முகம் மாமாவுக்கும், கமலா மாமிக்கும் ஓரளவு தெரிந்தாலும் விமலாவுக்கு அது தெரிந்திருக்க நியாயமில்லை என்றே நினைத்தாள். தானும் ரதனும் ஒரே ஊரவர்கள் என்ற நிலையிலும் பல்கலை கழக நண்பர்கள் என்றும் மட்டுமே விமலா நினைத்திருக்க வேண்டும்.அதுவும் அவளது எழுத்தில் இருந்து அவள் ரதனை அவர்கள் வீட்டுக்கு வந்த நாளிலிருந்தே காதலிக்கத் தொடங்கியது தெரிந்தது.

நிவேதா அந்த கொப்பியை மூடி பழைய படி அது இருந்த இடத்திலேயே வைக்கவும் விமலா உள்ளே வரவும் சரியாக இருந்தது. “நிவேதாக்கா நீங்க போய் குளிச்சிட்டு வெளிக்கிடுங்க” என்றவள் “ரதனையும் வெளிக்கிட சொல்லுங்க என்ன………” என்றாள். அதில் ரதன் என்பதை சற்று அழுத்தமாகச் சொன்னாள். என்றுமில்லாதவாறு அவள் ரதனைப் பற்றி கதைப்பதாக நிவேதாவுக்கு தெரிந்தது.ஆனால் அவள் விமலாவின் கொப்பியை தான் படித்ததாக காட்டிக் கொள்ளவில்லை. “விமலா அதற்குள் வந்திட்டியா……நான் போய் குளிச்சிட்டு வாரன் ரதன் இப்ப வெளிக்கிட்டு இருக்கும் என்று நினைக்கிறன். எதுக்கும் சொல்லிவிடுகிறேன்” என்றவள் பாத்ரூமை நோக்கிச் சென்றாள். நிவேதா போன உடன் தனது மேசைக்கு வந்த விமலா அதிலிருந்த

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல் காவியம்.**

அந்த கொப்பியை எடுத்து மேசைக்குப் பக்கத்தில் இருந்த தனது கபட்டுக்குள் வைத்துப் பூட்டினாள். ‘

தனது ஊர்வலம் முடிந்து மீண்டும் கோயில் வாசலுக்கு வந்து ஆடியபடியே பக்தர்களுக்கு காட்சியளித்த சாமி சப்பரம் மீண்டும் கோயிலுக்குள் கொண்டு செல்லப் பட்டது.

விமலாவின் அந்த கொப்பியை வாசித்ததிலிருந்து குழம்பிப் போயிருந்த நிவேதா…… ஆழ்ந்த சிந்தனையின் பின் ஒரு முடிவுக்கு வந்து விட்டாள் என்பதை அவளது முகம் தெளிவானதிலிருந்து தெரிந்தது

சாமி உள்ளே போகும் வரை அதிலேயே மனசு ஒன்றிப் போய் இருந்த பக்தர் கூட்டத்தில் சிலர் சாமியுடன் கோயிலுக்குள் செல்ல பலர் தமது வேண்டுதல் முடிந்த திருப்தியில் கடைத்தெருக்களுக்குச் சென்று தமக்குத் தேவையான பொருட்களை வாங்கத் தொடங்கினர்.

“நிவேதா…. நாமும் கடைப் பக்கம் போவமா…..?” என்று கேட்ட ரதனுக்கு தனது தலையசைப்பின் மூலம் பதிலளித்த நிவேதா….. ”மாமி கடைக்கு போவம் என்ன” என்றாள் ஐவரும் ஆலய வளவிலிருந்து விலகி கடைப் பக்கம் சென்றனர். பெண்களுக்கு பொதுவாக தம்மை அலங்கரித்துக் கொள்வதில் அலாதிப்பிரியம் உண்டு. அதற்கு எந்த பெண்ணும் விதிவிலக்கல்லவே…..

நிவேதாவும், விமலாவும், கமலா மாமியும் கூட அதிகமாக தமக்குத் தேவையான அலங்காரப் பொருட்களை வாங்கவே அதிகம் ஆர்வம் காட்டினர்.

ரதன் நிவேதா விரும்பிக் கேட்ட தலைக்குக் குத்தும் சிலைற்றிலிருந்து சாரி ப்ருச் வரை ஒவ்வொன்றாக வாங்கிக் கொடுத்தான். சண்முகம் மாமாவும் தனது ஆசைப் படி நிவேதாவுக்கு ஒரு அழகிய கரடிப்பொம்மை ஒன்றை வாங்கிக்கொடுத்தார்.

நிவேதாவும்….. தனது செலவில் விமலாவுக்கு பிளாஸ்டிக் பூச்சாடி ஒன்றை வாங்கிக் கொடுத்தாள்.

ரதனும் , சண்முகம் மாமாவும் தமக்கென ஒன்றுமே வாங்கிக்கொள்ளவில்லை அவர்களுக்குத் தேவையான பொருட்களும் அங்கு பெரிதாக இருக்கவில்லை. நிவேதா எவ்வளவு சொல்லியும் ரதன் ஒன்றுமே வாங்கவில்லை கடைசியில் நிவேதா ஒரு அழகிய பேர்ஸ் ஒன்றை வாங்கி அவனுக்குக் கொடுத்தாள்.

விமலா தனது தந்தையிடம் சொல்லி ரதனுக்கு ஒரு கைக்கடிகாரத்தை வாங்கி பரிசளித்தாள். அதனை ரதனுக்கு கொடுக்கும் போது “ரதன்…… அண்ணன்……… இந்த கடிகாரத்தைதான் நீங்க எப்பவும் கட்டிக்கணும்……” அவள் விளையாட்டாகச் சொல்லிக் கொடுத்தாலும் அதனை அன்பின் தன்மைத்

தன்மை நிவேதாவுக்கு மட்டுமே தெரிந்தது

தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு மாமாங்கம் பிரதான வீதியில் இறங்கி வரும் போது ரதன் அங்கு நின்று கொண்டிருந்த ஐஸ்க்ரீம் வேனில் ஐஸ்கிறீம்கள் வாங்கி வந்து அனைவருக்கும் கொடுத்தான்.

விமலாவின் பிடிவாதத்தின் காரணமாக சண்முகம் மாமா அனைவரையும் கூட்டிக்கொண்டு மோட்டார் சைக்கிள் ஓடும் சாகசத்தைப் பார்ப்பதற்குரிய நுழைவுச் சீட்டை பெற்று வந்தார்.

வரிசையில் நின்ற படி தமக்குரிய முறை வந்ததும் அந்த மோட்டார் சைக்கிள் சாகசத்தைக் காண்பதற்கென அவர்கள் மேலே ஏறினர். பலகைகளினால் ஒரு கூம்பு போன்ற வடிவில் உயரமாக அமைக்கப் பட்டிருந்த அந்த பலகைக் கட்டடத்தினைச் சுற்றி அனைவரும் நின்றனர். ரதன், ரதனுக்கு மறுபக்கத்தே நிவேதா, மறுபக்கத்தே விமலா அதற்கடுத்ததாக கமலா மாமி, சண்முகம் மாமா என ஒருவர் மீது ஒருவர் நெருக்குப் பட்டுக் கொண்டிருந்தனர்.

மோட்டார் சைக்கிள் ஓடும் வீரன் வந்து மோட்டார் சைக்கிளை 'ஸ்டாட்' செய்து கீழேயிருந்து மேலே வட்டமடித்த படி சுற்றி சுற்றி வந்தான்…… அந்த ஓட்டத்தில் அந்த பலகை கட்டிடம் அதிர்ந்து விழுந்து விடுவதை போல் இருந்தது. விமலா பயத்தில் ரதனின் கரத்தினை அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

அவள் உண்மையில் பயத்தில் பிடித்தாளா அல்லது………. தனது விருப்பத்தைதெரிவிக்கும் முகமாக பிடித்தாளா என்பதை அவளை கவனித்துக் கொண்டிருந்த நிவேதாவால் உணர முடியவில்லை. ரதனும் அதனை ஒரு தற்செயல் நிகழ்வாகவே எடுத்துக்கொண்டான்.

மாமாங்க திருவிழா முடிந்து மீண்டும் பல்கலைக்கழகம் வந்ததிலிருந்து நிவேதா ரதனைச் சந்திக்கும் போதெல்லாம் அவள் மீண்டும் மீண்டும் விமலா தொடர்பாகவே…. ரதனிடம் கதைத்தாள்.

அன்றிரவு திருவிழாவிலிருந்து வீட்டிற்கு வந்த அனைவரும்…. வெகு சீக்கிரத்திலேயே உறங்கி போயினர். மறுநாள் தீர்த்தோற்சவத் திரு விழா…..

சண்முகம் மாமாவும், கமலா மாமியும் தாங்கள் போகாமல் ரதனையும் ,நிவேதாவையும் விமலாவையும் , போகச் சொன்னதால் …….. தீர்த்தோற்சவம் பார்க்க அவர்கள் மூவருமே சென்றனர்.

பலமுறை அங்கு விமலா ரதனுடன் நெருங்கிப் பழக சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொண்டாலும் ரதன் அதனை தவிர்த்தே வந்தான். அது நிவேதாவுக்கும் புரிந்தது.

திருவிழா முடிந்து மறுநாள் கம்பசுக்கு புறப்பட்டு வரும் போது அவர்களை வழியனுப்பி வைக்கையில் விமலாவின் கண்கள் கலங்கியிருந்ததை நிவேதா கவனித்தாள்.

பஸ்ஸில் வைத்துதான் ரதனும் நிவேதாவும் அந்த கடிதத்தை பார்க்க முடிந்தது சோதனைச் சாவடி ஒன்றில் தனது பேக்கைக் காட்டுவதற்கென தயார் படுத்திய ரதன் அதனுள் ஒரு வெள்ளைத் தாள் இருப்பதை கண்டு எடுத்துத் திறந்து பார்த்தான். அது ஒரு கடிதம் என தெரிந்தது.

சோதனையை முடித்து விட்டு மீண்டும் பஸ்ஸில் ஏறிக்கொண்ட ரதன் அந்த கடிதத்தை விரித்து படித்தான்.

என்றும் என் இனிய ரதனுக்கு, எனத் தொடங்கியிருந்த அந்த கடிதம் கவிதை வடிவில் தனது மனதை வெளிக்காட்டியிருந்தது. ரதன் மேல் தனக்குள்ள காதலை வெகு இயல்பாக, அதேவேளை ஆழமான முறையில் வெளிப்படுத்தியிருந்த அந்தக்கடிதத்தின் முடிவில் உங்கள் நினைவில் வாழும் விமலா என முடிந்திருந்தது.

ரதனுக்கு அக்கடிதத்தைப் பார்த்ததும் அதிர்ச்சியாக இருந்தது அதனை நிவேதாவிடம் கொடுத்தான், அக்கடிதத்தை எதிர்பார்த்ததைப் போலவே நிவேதா அதனை வாங்கி வாசித்தாள்.

**வாசகர்களே! கடந்த ஆறு மாதங்களாக உங்கள் மலைமுரசு தாங்கி வந்த “வீணையடி நீ எனக்கு” எனும் குறுநாவல் விரைவில் நூலுருவில் வெளிவர உள்ளது. அந்நூலில் தங்களின் மனப்பதிவுகள் வரவிரும்பின் மலைமுரசு அலுவலகத்திற்கு தங்கள் கருத்துக்களை அனுப்பிவையுங்கள்.**

மேவும்.. … ..

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொடிமெனிக்கே...

பொடிமெனிக்கே...

இங்கொன்று
அங்கொன்றாய்
உதிரம் சொட்டிக்
கிடக்க . . .
இறப்பின் எண்ணிக்கையை
உரத்துச் சொல்லும்
வானொலிச் செய்தியுடன்
விடிகிறது எம்
வாழ்க்கை

உங்களில் இருவர்
எங்களில் இருவர்
எதுமறியா அப்பாவிகளோ
எண்ணிக் கணக்கிலர்

நேற்றும்
இன்றும்
நாளையும் என்றேகிப்
பிறக்கும்
நாட்களில் எல்லாம் . .
மனிதர்களும் . . .
மரணங்களும். . .

ஒப்பாரியினூடே
ஒழுகும் விழிநீரில்
உனக்கும் எனக்குமென்ன
பேதமுண்டு. . . .
உணவின்றிப்
பிணத்தின் மேல்
ஓய்ந்து விழுந்தழுது . . .
பயனென்ன கண்டோம் . .
பொடி மெனிக்கே ?

விழி திறந்து
உற்றுப்பார்

வானிடையே . . .

எச்சத்தை
எழும்பை
மிச்சத்தையுண்ணும்
கருங்காக்கைக் கூட்டம்
கோலோச்சும் . . .

உன் புண்ணைச்
சுரண்டிப்
பெரிதாக்கும் . . .
படைசேர்க்கும்
உன்னவனையும்
போருக்கிழுத்துப் பின்
பலியாக்கும் . .

பொடிமெனிக்கே. . . .

நீயும் நானும்
திருவோடேந்தித்
தெருத் தெருவாய்
பிச்சையெடுக்கக்
இச்சையுருவுங்
கருங்காக்கைக் கூட்டம்

இங்கு கோலோச்சும் . . . .

வெண்கொடி தாங்கி
வெளியே வா . . . .
சோதரி
ஆயுதம் தாங்கியோர் முன்
அணிவகுப்போம் - நாம் . .

அள்ளிச் சென்ற
செல்லக் குழந்தைகளை
மீட்டு வரும் மட்டும் . .

காணாமற் போன
அயலவனைக் - கண்
காணும் மட்டும் . . .

எலும்போடு தோலொட்டி
உருக்குழைந்து - எம்
உயிர்
உடல்விட்டுப்
பிரியும் மட்டும் . . .

வெண்கொடி தாங்கி
அவர்களின் முன்
அணிவகுப்போம் . . .

வா
சோதரி.

- மாயன் -

## காதல்

நான் மண்ணில்
வாழும் நாட்களை - விட
உன் மனதில்
வாழும் நாட்கள்
அதிகமாக இருந்திட - வேண்டும்

பிரசாந்த் வனிதா
நாவற்சோலை



## வரம் தா!!

பள்ளத்தோட்டம் சஞ்சு

அன்பே!
உனை நினைத்து!
எனை இழந்து!
உருகுகிறேன் மெழுகாக!
உடல் தனை தந்துவிட்டு!
ஏன் உறவை பிரித்து விட்டாய்!
தவமிருப்பேன் உனக்காக!
தருவாயா வரமெனக்கு!

## அம்மா!!

அ.கௌரிதாசன்,
ஒரு கவிதை எழுதிவிட நூலிலிருந்து...



மண்ணக வாழ்வி லென்னை
மகனென ஈன்றெ டுத்து
அன்பெனும் கரையே யில்லா
ஆழியில் நீறு மாட்டி,
துன்பமே அணுகா வண்ணம்
தூய்மையாய் அரவ ணைத்த
அன்னையே மண்ணை நீத்து
அரனடி சேர்த்திட்டாயா?

பஞ்சணை போட்டு வைத்தாய்
பகலிரா கண்வி ழித்தாய்
விஞ்சிடும் பாசம் மேவ
வினைபல புரிந்தாய் நாளும்!
தங்கமே! முத்தே! எந்தன்
தளிரெனக் கையி லேந்திக்
கொஞ்சிய வுன்னை இந்தக்
குவலயத் தெங்கு காண்பே?

படித்திட பள்ளி சேர்த்தாய்!
பரிவுடன் பேணிக் காத்தாய்!
கடித்திடல் எறும்பு கூட,
கலங்குவாய், துடித்துப் போவாய்!
அடியவன் கண்ணீர் விட்டு
அழுதிடும் நிலையைத் தந்தே,
நெடிதுயில் கொண்டாய்! என்தன்
நெஞ்சமோ தாங்கு தில்லை!

ஏழ்மையோ சேரா வண்ணம்
ஏற்றமாய் அடியேன் வாழ்வில்
தாழ்வின்றி உயர்ச்சி யோடு
தரணியில் தலைநி மிர்ந்து
வாழ்ந்திட வைத்த வுன்னை
வாழ்வினில் எங்கு காண்பேன்?
பாழ்மனம் கிடந்து இங்கு
படுந்துயர் அறிவாய் "அம்மா"!

# கவிமுரசு

## சாதனைகள் படைத்தால் சரி

(சேனையூரான்)

ஆருடம் பிழைத்துப் போச்சு,
அதிகாரம் கை மாறிப் போச்சு,
போரார்வ வெற்றி யெல்லாம்
புஸ்வாண மாச்சுதின்று:

மார்தட்டி மக்கள் முன்னே
மகிந்தய்யா சொன்னதெல்லாம்
தேர்தல் தோல் வியினால்
திசை மாறிப் போச்சுதய்யா,

நீதி, சட்டம் ஒழுங்கு செயலுக்கு
நேர்கோடு வரையப்பட்டு
வீதி அபிவிருத்திகளில், முன்னர்
மேயப்பட்ட ஊழல்களுக்கு
நீதி விசாரணைகள் மூலம்
நேர்மையான விடைகள் காண
பாதை திறக்கப்பட்டின்று
சாதனைகள் நடக்குதய்யா,

கறை படிந்தோர் நீதியின் முன்
கைகட்டி நிற்க வேண்டும்,
தப்புக்கள் செய்தவர்கள்
தண்டிக்கப் படவேண்டும்,
செப்படி வித்தைகளை முன்பு போல்
செய்யாமல் இவ்வாட்சி
நல்லாட்சி புரியுமானால்
இவ்வாட்சி செல்வாக்கை பெறுமுண்மை!



## தமிழ் மக்களது உணர்களை நன்றியோடு மதிக்கவேணும்

– சமூக தீபம் கலைமாமணி கலாபூஷணம் சிவஸ்ரீ அ.அரசரெத்தினம் –

நரம்பில்லாத நாவல், எதையும்
வரம்புமீறி பேசலாகா
தரமற்ற பேச்சுக்களால்
தரங்கெட்ட பெயரே சூழும்,

பொருந்தாத பொய்யுரைகள்
வரந்தர போவதில்லை
நிரந்தரம் உண்மையன்றோ
அந்தரம் பொய்மை, தீதே

பொல்லாத கதைகள் வேண்டாம்
நல்லாட்சி யுகத்தினிலே
நல்லாட்சி நடப்பதற்கு
நட்புறவு நிலைக்கவேண்டும்!

வீராப்பும் வெற்றிப் பேச்சும்
சுக்குநூறாக்கிப் போன கதை
நீரின் மேல் எழுத்து அல்ல
கல்லின் மேல் பொறித்த கதை!

தமிழ் பேசும் மக்களால், தான்
நல்லாட்சி வெற்றியாச்சு
பொல்லாப்பு பேச்சை விட்டு
தமிழ் பேசும் மக்களது
உணர்வுகளை மதிக்க வேணும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா அமைதி காக்கும் படைகள் - துர்தேவதை

ஐ.நா. அமைதி காக்கும் படைகளின் நடத்தை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் அகநிலை அறிக்கை கசிந்துள்ள நிலையில், அமைதி காப்பதன் பெயரில் இப்படைகள் உலகெங்கும் செய்யும் அநியாயங்கள் மீண்டும் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. இவை ஐ.நா. அமைதி காக்கும் படைகளின் தேவையும் நோக்கங்களும் பற்றிய கேள்விகளை மீண்டுமொருமுறை எழுப்பியுள்ளன.

தற்போது உலகெங்கிலும் 16 நாடுகளில் 125,666 பேர் ஐ.நா. அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஊடகங்கட்குக் கசிந்த அறிக்கை, ஐ.நா. படைகள் உணவு, உடை, பணம், ஆபரணங்கள், வாசனைப் பொருட்கள், அலைபேசிகள் போன்றவற்றைக் கொடுத்துப் பெண்களையும் சிறுமியரையும் பாலியல் தேவைகட்குப் பயன்படுத்தி-யுள்ளனர் எனத் தெரிவிக்கிறது. ஹெயிட்டியில் 229 பெண்கள் தங்களது அன்றாட உணவுக்கும் மருத்துவத் தேவைகட்கும் பிரதியாக ஐ.நா. படைகளின் பாலியல் தேவைகட்குப் பயன்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட பெண்கள்- அது குறித்துக் ஹெயிட்டியில் உள்ள ஐ.நா. அலுவலகத்திடம் முறையிட்டும், அலுவலகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததோடு பாதிக்கப்பட்டவர்கட்கு எந்த உதவியும் வழங்கவில்லை. தனது அனுபவத்தைப் பகிர்ந்த சிறுமியொருத்தி "சிறுவர்கள் அமைதி காக்கும் படைவீரர்களின் முகாம்கட்கு வெளியே காத்திருப்பது வழமை. சில படைவீரர்கள் பாணும் வேறெதாவது உணவுப் பொருட்களும் தருவார்கள். அவ்வாறுதான் நானும் நின்றுகொண்டிருந்தேன்.

அமைதி காக்கும் படை வீரரொருவர் என்னை அழைத்தார். எனக்கு உண்ண எதாவது தரப்போகிறார் என நினைத்தபடி உள்ளே சென்றேன். அவர் என்னை உள்ளே இழுத்து என் வாயைப் பொத்தி என்னை வன்புணர்வுக்கு உட்படுத்தினார்" என்று சொல்லியிருக்கிறாள்.

உணவுக்காகவும் மருந்து-க்காகவும் தவம் கிடக்கும் மனிதர்களிற் பசியாற எவ்வளவு குரூர மனம் வேண்டும். ஐ.நா. அறிக்கையானது கொங்கோ, லைபீரியா, ஹெயிட்டி, தென் சூடான் ஆகிய நாடுகளிற் கடமையில் உள்ள ஐ.நா. அமைதி காக்கும் படைகளாலேயே அதிகளவான பாலியல் ரீதியான குற்றங்கள் இழைக்கப்பட்டதாகச் சொல்கிறது.




ஐ.நா. அமைதி காக்கும் படைகள் அத்துமீறல்களில் ஈடுபடுவது பற்றிய செய்திகள் வெளியாவது இது முதல்முறையன்று. ஆனால், பாரிய குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளபோதும் அது தொடர்பில் நம்பிக்கையான விசாரணைகள் எதனையும் ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ளவில்லை என்பதுதான் இதில் முக்கியமானது. அத்தோடு இவ் அறிக்கையானது அதன் தீவிரத்தையும் குரூரத்தையும் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

எல்லாவற்றிலும் மேலாக ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனிதஉரிமைகள் அவை, இவ் விடயத்தைக் கண்டுங் காணாமல் விட்டமையே கவனிப்புக்குரியது. உலகெங்கும் மனித உரிமைகளைக் கண்காணித்து மீறல்களைக் கண்டிக்கும் அமைப்புத் தனது உள்வீட்டு விவகாரத்தை மூடிமறைத்துள்ளது. இவ்வமைப்பிடந் தான் நாங்கள் நீதி வேண்டி நிற்கிறோம் என்கிறபோது அந்நீதியின் தன்மையை அளவிடல் கடினமல்ல. 2013 டிசெம்பரில் மத்திய ஆபிரிக்கக் குடியரசின் ஜனாதிபதி, கிளர்ச்சியாளர்களால் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டதைத் தொடர்ந்து பிரான்ஸ் துருப்புகள் அமைதி காத்தல் என்ற போர்வையில் அங்கு தலையிட்டன. 2013 டிசெம்பருக்கும் 2014 யூனுக்குமிடையில் 14 பிரெஞ்சுப் படையினரும் சாட், ஈக்குவெட்டோரியல் கினி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 5 படைவீரர்களும் உணவையும் பணத்தையும் காட்டிச் சிறுவர்களைப் பாலியல் தேவைகட்குப் பயன்படுத்தியமை அறிக்கையிடப்பட்டது.

சிறுவர்களை நேர்கண்ட ஐ.நா. சிறுவர் நிதியத்தினதும் (யுனிசெப்) மனித உரிமைகட்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினதும் அதிகாரிகள், சிறுவர்களை ஐ.நா. அமைதி காக்கும் படைகள் துஷ்பிரயோகம் செய்தமை பற்றியும் தொடர்பிலும் அவர்களது மனித உரிமை மீறல்கள் பற்றியும் அறிக்கையொன்றை மனித உரிமைகட்கான ஐ.நா. உயர் ஸ்தானிகர் அலுவலகத்துக்குச் சமர்ப்பித்தனர்.

ஆனால், அதைப் பற்றி ஐ.நா: நடவடிக்கை எதையும் எடுக்காததால் உயர் நிலை ஐ.நா. அதிகாரியான அண்டேஸ் கொம்பாஸ் என்பவர் அதை ஊடகங்கட்கு வெளியிட்டார். அதற்காக ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசேன் அவ்வதிகாரியைப் பதவிநீக்கியுள்ளார். அண்டேஸ் கொம்பாஸின் பதவிநீக்கம் ஐ.நா.வின் உறுப்பு நாடுகளால் விமர்சிக்கப்பட்ட போது, இவ்வறிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் பொறுப்பான ஐ.நா. மனித உரிமைகட்கான துணை உயர்ஸ்தானிகர் "நலமின்மை" என்ற காரணங் காட்டிப் பதவிவிலகினார்.

இவ்வறிக்கை தொடர்பில் அவர் வெளியிட்ட அக்நிலைக் கடிதமொன்று ஊடகங்கட்குக் கசிந்துள்ளது. இதில் "நேரமின்மை மற்றும் நிதியின்மை ஆகிய காரணங்கட்காக இவ்வறிக்கை தொடர்பில்" எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது [illegible] அம்பல[illegible] மனித உரிமைகள் விடயத்தில் ஐ.நா. எவ்வாறு நடக்கிறது என்பதை இது தெளிவுறுத்துகிறது.

ஐ.நா.வின் மனித உரிமைகள் அக்கறைகள் பற்றிய பல்வேறு கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன. மனித உரிமைகளும் அமைதி காத்தலுமே ஐ.நாவின் அடிப்படையானதும் தலையாயது-மான பணிகளாகப் பார்க்கப்படுகின்றன. இந்நிலையில் அமைதி காத்தலிலேயே மனித உரிமைகள் மீறப்படுவதை என்னவென்பது. ஐ.நாவும் அதன் அமைதி காக்கும் படைகளும் காக்கும் தேவதைகளாகக் காணப்படுகின்றன.

ஆனால், அதன் வரலாறு இரத்தம் தோய்ந்தது. 1948ஆம் ஆண்டுமுதல் இயங்கிவரும் இவ் அமைதி காக்கும் படைகள் "நீலத் தொப்பிக்காரர்கள்"என அழைக்கப்படுகிறார்கள். கடந்த ஆறு தசாப்தங்களில் பல்வேறு அநியாயங்கட்குச் சாட்சியாக இந்த நீலத் தொப்பிக்காரர்கள் இருந்திருக்கிறார்கள்.

ஐ.நா.வின் படி, அமைதி காக்கும் படைகள் "ஒரு நாட்டில் நிலையான அமைதியை உருவாக்க" அனுப்பப்படுகின்றன. இதுவரை 61 அமைதி காக்கும் பணிகட்காக ஐ.நா. அமைதி காக்கும் படைகள் அனுப்பப்பட்டுள்ளன. அதில் அவை அமைதியைக் காத்தனவா என்ற வினா இன்னமும் பதிலின்றி இருக்கிறது. முதலாவது அமைதி காக்கும் பணி 1948ஆம் ஆண்டு அரபு - இஸ்ரேல் யுத்தத்தின் விளைவால் ஏற்பட்டது. இன்றுவரை இப்பணி தொடர்கிறது.

அதேவேளை, இஸ்ரேல் தனது அடாவடித்தனங்களை ஐ.நா. படைகளின் கண்காணிப்பின் கீழ் நிகழ்த்திக் கொண்டே இருக்கிறது. கேட்பாரில்லை. ஐ.நா. அமைதி காக்கும் படைகள் என்றவுடன் இயல்பாக நினைவுக்கு வருபவர் பற்றிஸ் லுமும்பா. இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்த பின்னணியில் ஆபிரிக்காவில் எழுந்த கொலனியாதிக்கத்திலிருந்து விடுதலை என்ற உணர்வின் குறியீடாகத் திகழ்பவரான லுமும்பா, கொங்கோவின் விடுதலைக்காக இடையறாது போராடி 1960இல் பெல்ஜியத்தின் ஆதிக்கத்திலிருந்து கொங்கோவை விடுவித்துச் சுதந்திர கொங்கோ குடியரசின் முதலாவது தலைவராகவும் விளங்கியவர்.

பெல்ஜியத்திடம் இருந்து விடுதலை பெற்று ஐந்து மாதங்களில் மேற்குலகின் சதிப் புரட்சியின் பின் கைதுசெய்யப்பட்டு 1961 ஜனவரி மாதம் 17ஆம் திகதி, அமெரிக்காவினதும் பெல்ஜியத்தினதும் ஆதரவுடன், ஐ.நா. அமைதி காக்கும் படைகளிடம் கைதியாக இருந்தபோதே லுமும்பா சுட்டுக் கொல்லப்பட்டார். தேசிய ஜனநாயகப் புரட்சியை கொங்கோவில் அறிமுகம் செய்ய முயன்ற பற்றிஸ் லுமும்பாவின் முடிவு உலகம் ஒரு ஜனநாயகமான மக்கள் எழுச்சிக்கு எத்தகைய பின்விளைவுகளை ஆற்றும் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

அத்தோடு ஐ.நா. அமைதி காக்கும் படைகள் எவ்வாறு நடக்கும் என்பதற்கான சான்றுமாகும் லுமும்பாவின் கொலை, அவர் கொங்கோவின் இயற்கை வளங்களை அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முனைந்ததோடு அமெரிக்காவினதும் பெல்ஜியத்தினதும் கைப்பொம்மையாக இருக்க மறுத்ததன் விளைவாகும். "மனிதத்துவத்துக்கு எதிராக நிகழும் குற்றங்கள் எங்கு நடந்தாலும் அதைக் கண்டித்து நீதிவழங்க முயலும்" என்று பெருமை பேசும் ஐ.நா.வுக்கு ஜனநாயகம் பற்றியோ, மனித உரிமை பற்றியோ பேச ஒரு தார்மீக உரிமையும் கிடையாது என்பதை மீள நிரூபித்த நிகழ்வு லுமும்பாவின் கொலை. அது மனித உரிமைகள் பற்றிய மேற்குலகின் மாயையை மட்டுமல்லாது ஆபிரிக்க விடுதலையின் பொய்யான தோற்றத்தையும் தோலுரித்துக் காட்டியது. ஐ.நா. அமைதி காக்கும் படைகள் பற்றியும் அது எவ்வாறான முகமூடியைச் சூடுகிறது என்பது பற்றியும் கைதியாக இருந்தபோது லுமும்பா எழுதிய வரிகள் இவை: "மூன்றாமுலகு மீதான 'மேற்குலக ஆதிக்க வெறியை நீலத் தொப்பியால் எதுவும் செய்யமுடியாது.

கொலனிகளை எவ்வாறாவது பேணுவதன் மூலமே நாகரிகத்தின் வரலாறு கட்டமைக்கப்படுகிறது என நினைப்பவர்கள் அதை நீலத் தொப்பியின் உதவியோடு அடைய நினைக்கிறார்கள்." இப் பின்புலத்தில் ஐ.நா. அமைதி காக்கும் படைகட்குக் கொடுக்கப்பட்டுள்ள சிறப்பு விடுபாட்டு உரிமையை நீக்கக் கோரி நீலக் கோவை இயக்கம் தொடர்ச்சியாகப் போராடி வருகிறது. ஐ.நா.வைப் பொறுத்தவரையில் ஐ.நா. அமைதி காக்கும் படையில் பணியாற்றும் படைவீரர்கட்குச் சிறப்பு விடுபாட்டுரிமை கிடையாது. ஆனால், ஐ.நா. அமைதி காக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் அல்லாதோருக்கும் ஐ.நா. அலுவலர்கட்குமே சிறப்பு விடுபாட்டுரிமை உண்டு.

ஆனால், நீலக்கோவை இயக்கம் அதிர்ச்சித் தகவல்களைத் தருகிறது. 2014ஆம் ஆண்டு தகவல்களின்படி ஐ.நா. அமைதி காக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்-களில் பாலியல் குற்றமிழைத்தவர்களை அவ்வியக்கம் வகைப்படுத்தியுள்ளது. அதன்படி, 31சதவீத இராணுவத்தினரும் 69சதவீதம் சிறப்பு விடுபாட்டுரிமை-யுள்ளவர்களும் குற்றமிழைத்துள்ளனர். அதில் 35 சதவீதம் பேர் ஐ.நா. அலுவலர்கள். அண்மைய நிகழ்வுகள் சில முக்கிய விடயங்களைக் கோடிட்டு நிறுவுகின்றன.

முதலாவதாக, ஓர் அமைப்பாக ஐ.நா. தோற்றுள்ளது. இரண்டாவதாக அமைப்புக்குள் நடக்கும் தவறுகளைத் திருத்தவோ தடுக்கவோ இயலாத நிலையில், உலகின் பொது அமைப்பாக நடக்கும் தகைமை அதற்கு இல்லை. கசிந்த அறிக்கையும் அதற்கான எதிர்வினைகளும் செல்லரித்துப் போன ஓர் அதிகார மையத்தின் முடிவைக் கட்டியங் கூறுகின்றன. உலக அரசியலின் திசைவழியில் அதிகாரங்கள் நிறுவப்படும் வழிமுறைகள் பல. சில அதிகாரத்தின் வலியால் நிறுவப்படுகின்றன. சில அமைதியெனும் வழிமுறையால் நிலைபெறுகின்றன.

தேவதைகளை எதிர்பார்த்துக் காத்திருந்தவர்கள் நாங்கள். அந்த நம்பிக்கையின் எச்சங்கள் இன்னும் எம்மிடம் ஒட்டிக்கொண்டுள்ளன. அவை துர்தேவதைகள் என்பதை உணர்வதற்குக் காலங் கனிந்துள்ளது.

**சீ.ஞாலசீர்த்தி**

- www.tamilmirror.com -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 67

# போதுமென்ற மனம்

(வி.என்.சந்திரகாந்தி)



இறைவன் எமக்கு பொன்னான வாழ்வை அளித்துள்ளான். அதனை திருப்திகரமாக வாழ்ந்து முடிப்பதே எமது இலட்சியமாக இருத்தல் வேண்டும். அதற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய அதி உயர் மனப்பாங்கே, போதுமென்ற மனம் ஆகும். போதுமென்ற மனப்பாங்கை நாம் வரித்துக்கொண்டு விட்டால் வாழ்க்கையின் எந்த ஒரு இக்கட்டான நிலைமையிலும் நாம் தடுமாற வேண்டி நேரிடாது.

புத்தர் பல காலம் நிஷ்டையிலிருந்து 'ஆசைதான் துன்பத்துக்கு காரணம்' என்று அறிந்து சொன்னார். இந்துமத துறவிகள் அத்தனை பேருமே ஆசையைத் துறந்ததன் மூலமே பேரின்ப வாழ்வை பெற்றனர். நாமெல்லாம் இல்வாழ்க்கையில் இருந்து கொண்டு அந்த அளவுக்கு போக வேண்டியதில்லை. ஆனால் இருப்பதை வைத்துக்கொண்டு திருப்தி அடையும் மனப்பாங்கை வளர்த்துக் கொள்வது அவசியத்தின் மேல் அவசியம் அல்லவா?

மனிதன் அப்படி அபரிமிதமாக எவ்வெவற்றிற்கு ஆசைப்படுகின்றான் என்று பார்ப்போம். மூன்றே மூன்று ஆசைகள் தான் அவனைப் பேயாய்படுத்துகின்றன. அவை மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை! வாழ்க்கைக்கு சுவையூட்டுவதற்கு இந்த ஆசைகள் அனைத்துமே அவசியம்தான். ஆனால் அதற்கு எல்லை வகுத்துக்கொள்ள நாம் தான் அறிந்திருக்க வேண்டும்.

மண்மீது அதிக ஆசை கொண்டவர்களின் வரலாறுகளை நாம் அறிந்திருக்கின்றோம். தன்னைச் சுற்றி வளைத்த எதிரிகளிடம் சிக்கிக் கொள்ளக் கூடாதென்பதற்காக நெப்போலியன் தனது குதிரைமேல் அமர்ந்தபடி அதன் கண்களைக்கட்டி மலையிலிருந்து குதிக்க பணித்து தற்கொலை செய்து கொண்டான். சர்வாதிகாரி ஹிட்லர் தனது அளவற்ற மண்மோகம் காரணமாகவே தனது இன்னுயிரை இழந்தான். அசோகச் சக்கரவர்த்தி கலிங்கத்துப் போரில் மக்களின் துயரங்களுக்கு முன்னால் தான் மண் மீது கொண்ட ஆசை துச்சம் என்பதை உணர்ந்தான். இவை வரலாறுகளாக இருக்கலாம். ஆனால் இன்றும் கூட பல நாடுகள் தமது எல்லையை பெரிதாக்கிக் கொள்ளவே முயல்கின்றன.

தனிமனிதர்களாகிய நாம் மட்டும் அதற்கு விதிவிலக்காகவா இருக்கின்றோம். எமது உழைப்பின் மூலம் எங்கெங்கு நில புலன்களை வாங்கிப்போட முடியுமோ அவற்றையெல்லாம் வாங்கிப்போடுகின்றோம். அதனால் காணிகளின் விலை பன்மடங்காக அதிகரிக்கின்றது. ஏழைமக்களோ ஒரு குடிசை போடக்கூட நிலமில்லாமல் அவதியுறும் நிலை ஏற்படுகின்றது.

ஆனால் சொந்த பந்தங்களுக்குள்ளேயே நிலத்தின் மீதான அதீத பற்று அடி பிடி சண்டை என வளர்ந்து உறவுகள் முறிவடையும் நிலைக்கு போய் விடுகின்றது. எமது உயிர் வாழ்க்கைக்கு ஒரு எல்லை உண்டு. ஆனால் நிலம் நீடித்திருப்பது. நாளைக்கே இறந்துவிடக்கூடிய நாம் எமது இறப்பின் பின் பல கைகள் மாறக்கூடிய காணிக்கு உரிமை பாராட்டுவதென்பது பெரும் நகைப்புக்குரிய விடயமேயல்லவா?

நாம் சற்று சிந்திக்க வேண்டும். எத்தனை மக்கள் கோயில் மடங்களிலும் சேரிகளிலும் திருப்தியான வாழ்க்கை வாழ்கின்றார்கள் என்று. எமது கொடுமைகள் தாங்க மாட்டாது நாம் வாழும் இப் பூமித்தாய் தனது ஈர்ப்பு சக்தியை இழந்து எம்மை தூக்கி எறிந்துவிடக்கூடிய ஒரு காலம் வந்தால் இந்த காணிகள் பற்றி உரிமை கொண்டாட யார் இருக்கப்போகின்றோம்?

மண்ணாசைக்கு அடுத்தபடியாக இடம்பிடிப்பது பெண்ஆசையாகும். வீட்டை நிறைப்பவள் பெண் ஆவாள். ஆனால் இன்று பரிதாபம் பெண் இணைய தளங்களை நிறைக்கின்றாள். இனி சினிமா, பெண்கள் மீதான மோகத்தை தூண்டும் கலைப்படைப்பாக வளர்ச்சியடைந்துள்ளது. இவையெல்லாம் பெண்கள் மீதான குற்றச் செயல்களுக்கு வழிவகுக்கின்றன.

அன்பு, பாசம், இரக்கம், ஈகை, தயைவு ஆகிய நற்பண்புகளால் அவள் நிறைந்துள்ளாள். கணவனையும், குழந்தைகளையும் மட்டுமன்றி குடும்பத்தில் உள்ள மூத்தவர்களையும் அன்பு பாராட்டி பராமரிக்கும் தன்மை அவளிடமுண்டு. ஆனால் இன்று தத்தம் மனைவிமாரே போதும் என்ற மனநிலையிலிருந்து நீங்கி குற்றச் செயல்கள் புரிவதால் ஆயுட்கால சிறைத்தண்டனை மட்டுமன்றி மரணதண்டனைக்கு உள்ளாகும் அபாயத்தையும் அவர்கள் எதிர்நோக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

பெண்கள் விடயத்தில் விவாகமாகாத இளைஞர்களின் நிலை இன்று மிகவும் மோசமாக உள்ளது. கல்வி, உயர்கல்வி, தொழில் வாய்ப்பு இவற்றில் ஆர்வத்துடன் இருக்க வேண்டிய இளைஞர்கள் முகநூல் உட்பட ஏனைய பல இணையதளங்களுக்கு அடிமையாவதுடன் போதைப்பொருள் பாவனைக்கும் பெண்மோகத்துக்கும் ஆட்படுகின்றார்கள். பெற்றோர்களின் கட்டுப்பாட்டிலிருந்து நீங்குகிறார்கள். எத்தனை எத்தனை பெண்கள் பண வசதி இன்மை காரணமாக தமது இல் வாழ்க்கையை அமைக்க வழி இல்லாமல் இருக்கின்றார்கள். அவர்களில் பலர் நல்ல கல்வி அறிவும், நல்லொழுக்கமும் உடையவர்கள்தான். எமது இளைஞர்கள் அவர்களுக்கு வாழ்க்கை அளிக்க ஏன் முன்வரக்கூடாது?

எமது இளைஞர்களோ என்ன செய்கின்றார்கள்? பெண்களுக்கு பொய் வாக்குறுதிகள் அளிக்கின்றார்கள். மயக்க மருந்துகள் கொடுக்கின்றார்கள். பல பெருமைகள் மிக்க பெண்களின் ஆசைகளை நிராசையாக்குகின்றார்கள். அவர்களை தற்கொலை செய்யும் நிலைக்கு ஆளாக்குகின்றார்கள். போதுமென்ற மனதுடன் தனது மனைவியுடன் இணைந்து அவளை தாயாகவும், தெய்வமாகவும் மதிக்க தெரிந்தவன் மட்டுமே மனிதன்!



பெண் ஆசைக்கு அடுத்தபடியாக இடம் பிடிப்பது பொன்னாசையாகும். வாழ்க்கையை நல்லபடியாக நடாத்துவதற்கு பணம் அவசியமானதேயாகும். ஆனால் அந்த பணத்தேவைக்கும் ஒரு அளவை குறித்து வைத்துக்கொண்டு நாம் செயல்பட வேண்டும். எவரையாவது ஏமாற்றி சம்பாதித்த பணம் மன அமைதியை தராது. சிலர் மற்றவர்களுக்கு துரோகம் செய்து சம்பாதித்தலில் கண்ணும் கருத்துமாக இருப்பர். பலர் கட்சி மாறுவதற்கு பணத்தை பெற்றுக்கொண்டு தான் சார்ந்த கட்சியிலிருந்து மாறிவிடுவர். இன்னும் சிலர் உயர் பதவிகளை பெறுவதற்காக பணத்தை வீசி எறிவர்.

இப்படியெல்லாம் சம்பாதித்த பின்னர் கூட பொன்னாசை தீராதவர்கள் பலர் உண்டு. அவர்கள் சிக்கனமாக செலவு செய்ய அறியாதவர்கள் ஆவர். சிக்கனமாக செலவு செய்யாதவன் என்ன செய்வான்? முதலில் களவெடுப்பான்..... பின்னர் வீடுடைத்து கொள்ளையடிப்பான்..... ஈற்றில் கொலையும் செய்வான்.

போதுமென்ற மனம் இல்லாதவர்கள் சூதாட்டத்தில் ஈடுபடுவதும் உண்டு. அதிக ஆசை நாசத்தையே உண்டு பண்ணும் என்பதற்கு சூதாட்டம் ஒரு நல்ல உதாரணம்.

சேமிப்பு பழக்கத்தை நாம் எமது பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். எமது செலவுகளை பிற்போடுவதே சேமிப்பாகும்! எத்தனை ஏழைகள் கட்டுப்பாடுடன் செலவு செய்து கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்கின்றார்கள்.

பண விடயத்தில் கட்டாயம் போதுமென்ற மனம் இருத்தல் வேண்டும். அதிக பணம் சேர்த்துவிட்ட ஒருவன் முதலில் தெய்வம் மீதான நம்பிக்கையை துறக்கின்றான். அகங்காரம் அவனை ஆட்கொள்கின்றது. பணிவின்மையும் மேலோங்குகின்றது. பெற்றோர் மீது அன்பும் அக்கறையும் குறைகின்றது. குரு பக்தி என்பது அற்றுப்போகின்றது. மனைவி பிள்ளைகள் மீதான கரிசனை குறைந்து போகின்றது. நண்பர்களாய் இருப்பவர்களையும் நல்லவர்ளையும் பகைக்கும் குணம் ஏற்படுகின்றது. அகந்தை தற்பெருமை வளர்கின்றது. நன்றி உணர்வு அற்றுப்போகின்றது. மனம் துரோகம் செய்ய நினைக்கின்றது. .

எமக்கு பொருளாசை இருக்கலாம். அனால் அது அளவுக்கு அதிகமாக இருக்கக் கூடாது. எமது பொருளை பாதுகாக்கும் மனப்பாங்கு மற்றவர்கள் பொருள் மீதும் இருக்க வேண்டும்.

எனது உறவினர் ஒருவர் கிராமத்தில் உள்ள நிலபுலன்களையெல்லாம் தனதாக்கும் முயற்சியில் ஈடுபட்டு பல சதிகளை செய்தார். பிள்ளைகள் புலம்பெயர்ந்து சென்ற நிலையில் அப்பாவிகளான உறவினர்களும் அவரது பேராசையை புரிந்து கொண்டு தமது காணிகளையும் கைவிட்டு நகர்புறங்களுக்கு சென்று அனைத்து சௌகரியங்களுடனும் வாழ்கை அமைத்துக்கொண்டனர். ஆனால் அவரோ தனது மனைவியுடன் எந்த ஒரு அடிப்படை வசதியுமற்ற அந்த கிராமத்தில் காணிகளுக்கு காவலாக வாழ்ந்து வருகின்றார்!

# பிரிந்தது ஓர் உயிர்!!

சஞ்சயன் செல்வமாணிக்கம்

அவன் எனக்கு அறிமுகமாகியது 2008ம் ஆண்டு யூலைமாதம் என்றே நினைவில் இருக்கிறது. என்னைப் போல் அவனும் குறும்பன்.

காலம் எம்மை பலமாய் இணைத்துப்போட்டது. நான் எங்கு சென்றாலும் அதிகமாக என்னுடனே வருவான். நானின்றி அவன் எங்கும் சென்றது கிடையாது. எனது சுமைகளை எதுவித முகச்சுளிப்பின்றியும் தாங்கிக்கொள்ளும் பெரிய மனது அவனிடமிருந்தது. நானும் அவனின் சுமைகளை சுமந்து திரிந்திருக்கிறேன். என்னைக் கண்டவர்கள் அனைவரும் அவனையும் நிச்சயமாகக் கண்டிருப்பார்கள். அவ்வளவு ஒற்றுமை எம்மிடையே இருந்தது. நாம் இணைந்து வெளிநாட்டுப் பயணங்களும் செய்திருக்கிறோம். நான் களைத்துப்போகும் போதெல்லாம் அன்புடன், தோளில் கைபோட்டு எதையாவது உண் அல்லது குடி என்று கூறும் நண்பன் அவன். இன்று என்னை தெம்பூட்டும் நண்பனை இழந்திருக்கிறேன். வாழ்க்கை என்பது நிலையில்லாதது என்பதை வாழ்க்கை மீண்டும் எனக்கு கற்பித்திருக்கிறது. மரணத்தைப் போன்றதோரு ஒரு சிறந்த ஆசான் எதுவுமில்லை. அது, தன்னை பல மனிதர்களின் மனதில் ஆழமாகப் பதிந்து போகிறது. என் நண்பனின் பிரிவும் அப்படியானதே.

நான் அவனை முதன் முதலில் சந்தித்தபோது மிகவும் திடகாத்திரமான உடம்புடன் தான் இருந்தான். காலப்போக்கில் சில பல நோய்கள் அவன் உடல்நிலையை பலவீனமாக்கின. மருந்து மாத்திரைகளில் நாட்டமற்ற மனிதன் அவன்.

அவன் எப்போதுமே ஆழமான மௌனத்தைக் கடைப்பிடிப்பவன். என்னைப் போல் அலட்டித்திரியும் குணம் அவனிடமில்லை. அவனுக்குள் பலதும் இருக்கும். முக்கியமாய் புத்தகங்களை தன்னுடன் எப்போதும் வைத்திருப்பான். இறுதியாய் அவன் வைத்திருந்த புத்தகம் புஸ்பராணியின் "அகாலம்". அவன் காலமும் அத்துடன் அகாலமாகியது தான் வேதனை.

ஒரு நாள் ஒரு நண்பன் தலையிடிக்கிறது என்றான். இந்தா என்று குளிசையை நீட்டினான். இன்னொரு நாள் ஒரு நண்பர் எழுதுவதற்காக பேனை தேடினார், அதுவும் அவனிடமிருந்தது. குடை, நீர், கணணி இப்படி எதையும் தன்னோடு கொண்டலையும் அற்புதமான ஜீவன் அது.

முடியாது என்று அவனிடம் இருந்து வார்த்தை வெளிப்பட்டது இல்லை. எதையும் தன்னை வருத்தியென்றாலும் செய்யும் குணம் நான் அவனை சந்தித்த முதல்நாளில் இருந்தே அவனிடம் இருந்தது.

ஒரு வருடத்திற்கு முன் அவனுடம்பில் ஏற்பட்ட சில காயங்கள் அவனது உடலை பலமாய் பாதித்தது. ஒரு காயம் ஆறுவதற்கு முன் மறுகாயம், அது ஆறுவதற்கு முன் இன்னொன்று என்று விதி அவனுடன் விளையாடிக்கொண்டே இருந்தது. அவனின் கட்டுமஸ்தான உடலும் காலப்போக்கில் வலுவிழந்து அவனை முன்பைப்போல் சுகதேகியாய் நடமாட முடியாது முடக்கிப்போட்டது. இருப்பினும் என்னுடன் அலைந்து திரிந்தான்.

நானும் என்னாலானதைச் செய்து பார்த்தேன். விதி சில முடிவுகளை எடுக்கும் போது நான் அல்ல யார் எதைச் செய்தாலும் அது விதியின் படியே செல்லும் என்று நான் கடந்துவந்தபாதை எனக்கு அறிவித்திருக்கிறது. நண்பனின் வாழ்க்கையிலும் அப்படியே நடந்தது.

நண்பனும் நானும் இரண்டு நாட்களுக்கு முன் ஒஸ்லோவின் வீதியொன்றில் நடந்து கொண்டிருந்து போது எனது ஒரு பக்கத்து தோளில் கையை ஊன்றியபடியே வந்து-கொண்டிருந்தான். அவனின் சுகயீனத்தின் கனத்தை நான் எனது தோளில் உணர்ந்தேன்.

கண்ணிமைக்கும் நேரத்தில் தோளில் இருந்து அவன் கை சறுக்கியதை உணர்ந்து திரும்பிப்பார்த்தேன். மூச்சுப் பேச்சற்று வீதியில் கிடந்தான். அள்ளியெடுத்து அணைத்துக்கொண்டேன் அவனை. உடல் குளிர்ந்தது போலிருந்தது. எம்மைக் கடந்து சென்றவர்கள் பரிதாபத்துடன் என்னைப் பார்த்தார்கள்.

அவனைத்தூக்க சிலர் உதவினர். நெஞ்சோடு அணைத்தபடியே அருகில் இருந்த கடைத் தொகுதிக்குள் அவனைக் கொண்டு போனேன். பலரும் என்னைத் திரும்பிப் பார்த்தார்கள். உதவிக்கு எவரும் வரவில்லை.

அருகில் இருந்த கடைக்குள் அவனைக்கிடத்தினேன். அக் கடையில் அமர்ந்திருந்த அழகி நட்புடன் புன்னகைத்தாள். ஏதும் உதவி வேண்டுமா என்றாள். ஆம் என்று தலையாட்டினேன். அருகில் உட்கார்ந்து நண்பனை பரிசோதித்தாள். மௌனமாய் நிமிர்ந்து பின்பு உதட்டைப் பிதுக்கினாள்.

உனது தோள்பை (rucksack) இனி பாவிக்க முடியாதளவுக்கு கிழிந்துவிட்டது. இதனால் இனி எதுவித பிரயோசனமும் இல்லை என்றாள். அத்துடன் பயப்படாதே, அங்கே பல புதிய தோள்பைகள் இருக்கின்றன என்றாள்.

அவள் காட்டிய திசையில் சென்று, நான் எனது புதிய நண்பனை தேடத்தொடங்கினேன். எனது பழைய தோள் பையின் ஆத்மா சாந்தியடையக் கடவதாக!

நீங்கள் என்னை கொல்லாமலும் இருக்கக் கடவதாக!.

**இன்றைய நாளும் நல்லதே ...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சினிமுரசு

## திரை விமர்சனம்

ராஜேஸின் இயக்கத்தில்

## "வாசுவும் சரவணனும் ஒண்ணா படிச்சவங்க"

ஆர்யா, தமன்னா, சந்தானம் நடிக்கும்



சரக்கு, நண்பர்கள், காதல், மோதல், பின் சந்தானத்தின் மூலம் தீர்வு. இது தான் இவர் படத்தின் வழக்கமான பார்முலா. இதை தன் முந்தைய படத்தில் மிஸ் செய்த ஒரே காரணத்தால் கொஞ்சம் தடுமாறினார். தற்போது பிடித்து விட்டார், ஆர்யா, சந்தானம் திக் ப்ரண்ட்ஸ். இருவரும் ஜாலியாக ஊர் சுற்றி வந்த நேரத்தில் சந்தானத்திற்கு, பானுவுடன் திருமணம் நிச்சயமாகின்றது. திருமணத்திற்கு பிறகு ஆர்யா செய்யும் சேட்டைகள் பிடிக்காமல், அவருடைய நட்பை மனைவி கட் செய்ய சொல்ல, சந்தானம், ஆர்யா காதலித்தால் நம்மை தொந்தரவு செய்ய மாட்டான் என்று தமன்னாவை இவருக்கு கோர்த்து விடுகிறார். ஒரு கட்டத்தில் தமன்னாவும் சந்தானம் நட்பை ஆர்யாவிடம் கட் செய்ய சொல்ல, கடைசியில் மனைவிகளுக்காக இவர்கள் நட்பு பிரிந்ததா? இல்லை நட்பு தான் முக்கியம் என கடைசி வரை இருந்தார்களா? என்பது தான் மீதிக்கதை.

ஆர்யாவிடம் சார் நீங்க என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள், நாங்கள் கேமரா வைத்து Shoot செய்து கொள்கிறோம் என சொல்லி விட்டார் போல ராஜேஷ். தனக்கு எது எது எல்லாம் வராதோ, அதையெல்லாம் ப்ளஸாக்கி சிக்ஸர் அடிக்கின்றார். சந்தானம் சார் எங்க போனீங்க இத்தனை நாளா? சந்தானத்தின் சரக்கு ராஜேஸ் தான் போல, இந்த கவுண்டரை கவனித்தால், அந்த கவுண்டர் மறந்து விடுகின்றது. அந்த அளவிற்கு பின்னி பெடல் எடுத்து விடுகிறார். ஒரு நாள் நீ என் இடத்துல இருந்து பாரு, எத்தன கவுண்டர், எத்தன மாடுலேஷன் என சந்தானம் பேசும் காட்சியில் நான் தாண்ட காமெடி கிங் என்று சொல்லாமல் யாருக்கோ சொல்கிறார்.

அதிலும் குறிப்பாக வித்யூ லேகா குடும்பத்தை கலாய்க்க செல்லும் இடத்தில் சந்தானத்தின் டாப் 10 காமெடியில் இடம்பெறும் காட்சி. தமன்னா பாகுபலியில் பார்த்த வீரமங்கை இதில், கண்டேன் காதலை ஸ்டைலில் துறுதுறுவென அசத்தியுள்ளார்.

ஆர்யா, சந்தானம் கெமிஸ்ட்ரி, இன்னும் 10 படங்கள் நடிக்கலாம். முகம் சுழிக்காத படியான காட்சியமைப்புகள்.

மொத்தத்தில் ராஜேஸ் நமக்கு இது தான் 'பாஸ்' சரி என்று ஆர்யா + சந்தானத்தை ஒண்ணா நடிக்க வைத்து விட்ட இடத்தை பிடித்து விட்டார்.



விஜய் சந்தரின் இயக்கத்தில் வெளியான "வாலு" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......



## நடிகை ரோஜா கைது

நகரி தொகுதி எம்.எல்.ஏ.வான நடிகை ரோஜா, தன் கட்சி தொண்டர்களுடன் நகரி நகராட்சி அலுவலகம் முன் ஊர்வலம் மற்றும் வீதி மறியல் போராட்டம் நடத்த திட்டமிட்டிருந்தார். ஆனால் சித்தூர் காவல்துறையினர் நகரியில் 144 தடை உத்தரவு பிறப்பித்தனர். இதை தொடர்ந்து, தடையை மீறி போராட்டம் நடத்துவதற்காக ரோஜா, திருப்பதியில் இருந்து தனது கட்சி எம்.எல்.ஏ.க்களான பாஸ்கர் ரெட்டி, ராமசந்திரா ரெட்டி, ஈஸ்வரி, திப்பாரெட்டி ஆகியோருடன் நகரிக்கு புறப்பட்டு வந்துள்ளார். அவர் செல்லும் வழியில் சத்திரவாடா என்ற இடத்தில் காத்திருந்த காவல்துறையினர் ரோஜாவை கைது செய்து புத்தூர் காவல் நிலையத்துக்கு அழைத்து சென்றுள்ளனர்.

## அரபில் ஐஸ்வர்யா

நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஐஸ்வர்யா ராய் நடித்துள்ள படம், ஜாஸ்பா. சஞ்சய் குப்தா இயக்கியிருக்கும் இந்தப் படத்தில் இர்பான் கான் முக்கிய வேடத்தில் நடித்துள்ளார். இந்திப் படங்கள் அரபு நாடுகளில் இந்தி மொழியில் வெளியாவது வாடிக்கை. ஆனால் ஜாஸ்பாவை அரபு மொழியில் மொழிமாற்றம் செய்து சவுதி அரேபியா நாடுகளில் வெளியிடுகின்றனர்.

## சூர்யா ஓய்வு

சூர்யா தற்போது 24 என்ற படத்தில் நடித்து வருகிறார். அது மட்டுமில்லாமல் பாண்டிராஜ் இயக்கத்தில் ஹைக்கூ என்ற படத்தை தயாரித்தும் வருகிறார். இப்படத்தின் இசை வெளியீட்டு விழா இம்மாதம் கடைசியில் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், சில நாட்கள் சூர்யா படப்பிடிப்பிற்கு ஓய்வளிக்கவுள்ளாராம். வேறு எதற்கும் இல்லை ஹைக்கூ படத்தின் ப்ரோமோஷன் வேலைக்காக தானாம்.

## 5 கோடியும் காணாது

தில்வாலே திரைப்படத்தின் வெளியீட்டுக்குப் பிறகு, சம்பளத்தை அதிகரிக்க திட்டமிட்டுள்ளார். திரையுலக ரசிகர்களின் யாக திகழ்ந்த நடிகை நீண்ட இடைவெளிக்கு மறுபிரவேசம் இந்த திரைப்படத்தில், கு ஜோடியாக கஜோலுக்கு 5 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஒருபெரிய விடயமாக

தனது கஜோல் பொலிவூட் கனவுக்கன்னி கஜோல், பிறகு, செய்துள்ளார். ஷாருக்கானுக நடித்துள்ள இந்திய ரூபாய் சம்பள உயர்வு இருக்காது என தெரிவிக்கப்படுகிறது.

## அஜித்தை வேணாம் என்ற தயாரிப்பாளர்

தமிழ் சினிமாவின் அனைத்து தயாரிப்பாளர்களும் அஜித் கால்ஷிட் எப்போது கிடைக்கும் என ஆவலுடன் காத்திருக்கின்றனர். ஆனால், சமீபத்தில் ஒரு தயாரிப்பாளர் வந்த வாய்ப்பை மறுத்துவிட்டாராம். ஏனெனில் கே.வி.ஆனந்த் கல்பாத்தி அகோரம் தயாரிப்பில் ஒரு படத்தை இயக்குவதாக இருந்ததாம். இப்படத்தின் கதை அஜித்திற்கு மிகவும் பிடித்தும் போய்விட, பிரச்சனை ப்ரோமோஷன் ரூபத்தில் வந்தது. தயாரிப்பாளர் அஜித்தை நம்பி தான் இவ்வளவு பணத்தை போடுகிறேன், அவர் ப்ரோமோஷனுக்கு வந்தால் தான் தயாரிப்பேன் என்று கூற, இதை அஜித் மறுத்துள்ளார். அவரும் அஜித் வேண்டாம் என்று கே.வி.ஆனந்திடம் கூறிவிட்டாராம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

## MOBILE

### S6 Galaxy

அப்பிள் நிறுவனத்திற்கு போட்டியாக ஸ்மார்ட் கைப்பேசிகளை அறிமுகம் செய்து வரும் சாம்சங் நிறுவனம் Samsung Galaxy S6 Edge Plus எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்யவுள்ளது. இக் கைப்பேசியானது 5.7 அங்குல அளவு, 2560 x 1440 Pixel Resolution உடைய Quad HD Super AMOLED தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன், Samsung's Octa Core Exynos 7420 Processor, பிரதான நினைவகமாக 4GB RAM, 32GB அல்லது 64GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டுள்ளது. இவை தவிர 16 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 5மெகாபிக்சல் வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### அன்ரொயிட் மாஷ்மலோ

ANDROID MARSHMALLOW

கூகுள் நிறுவனத்தின் அன்ரோயிட் இயங்குதளமானது தற்போது அதிகளவான மொபைல் சாதனங்களில் பயன்படுத்தப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ள அன்ரோயிட் 6.0 பதிப்பிற்கு Android Marshmallow அல்லது Android M (அன்ரோயிட் மாஸ்மலோ) என பெயரிட்டுள்ளது. தற்போது சோதனையில் இருக்கும் இவ் இயங்குதளப் பதிப்பில் பல்வேறு புதிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், முன்னைய பதிப்பில் காணப்பட்ட தவறுகளும் நீக்கப்பட்டுவருகின்றன.

## OTHER

### வளி மாசடைவதைத் தடுக்க காபன் பைபர் உற்பத்தி



பாரம் குறைந்ததும் உறுதியானதுமான பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்வதற்கு உதவும் கார்பன் பைபரினை வளியிலுள்ள காபனீரொக்சைட்டினைப் பயன்படுத்தி உற்பத்தி செய்ய முடியும் என அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சூரிய சக்தியில் இயங்கும் முறைமை ஒன்றினுள் உள்ள மின்வாய்களுக்கு இடையில் கார்பன் பைபர் துணிக்கைகள் மெதுவாக உருவாகி வருவதாகவும், இது ஒரு மணிநேரத்தில் 10 கிராம்கள் வரை உற்பத்தி செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். அத்துடன் இதன் மூலம் காபனீரொக்சைட்டினால் வளி மாசடைவதையும் குறைக்க முடியும் என குறித்த விஞ்ஞானிகள் குழு தெரிவித்துள்ளது.

### வாக் கார்

ஜப்பானில் கோகோ மோட்டார்ஸ் என்ற நிறுவனம் பேட்டரியில் இயங்கும் வாக் கார் (Walk Car) ஒன்றை கண்டுபிடித்துள்ளது. பேட்டரியில் இயங்கும் இந்த கார் ஒரு மணி நேரத்தில் 6 கிலோ மீற்றர் வரை செல்லும். பார்ப்பதற்கு மடிக்கணனி வடிவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த வாக் காரில்



நான்கு சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் நாம் நடந்து செல்லும் வசதிக்கேற்ப இதனை திருப்பிக்கொள்ளலாம்.

### ப்ரவுசர்களில் புக் மார்க்



பெரும்பாலான நேரங்களில் நீங்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட பல இணையதளப் பக்கங்களைத் (டேப்கள்) திறந்து வைத்திருக்கலாம். இன்னொன்று பல நேரங்களில் இந்தப் பக்கங்களை அனைத்தையும் அப்படியே சேமித்து வைப்பதற்கான எளிதான வழி இருக்கிறது. பயர்பாக்ஸ் பிரவுசரைப் பயன்படுத்துபவர் என்றால் இப்போது பார்த்துக்கொண்டிருக்கும் இணையப் பக்கங்கள் அனைத்தையும் சேமிக்க விரும்பினால், ஏதேனும் ஒரு பக்கத்தில் மவுசில் வலப்பக்கம் கிளிக் செய்தால் வரும் மெனு கட்டங்களில் புக்மார்க் ஆல் டேப்ஸ் என்பதை கிளிக் செய்தால் அனைத்துப் பக்கங்களும் சேமிக்கப்பட்டுவிடும். இதற்கெனத் தனிப்பெயரும் கொடுக்கலாம். குரோம் பிரவுசரிலும் இதே போன்ற வசதி இருக்கிறது.

### விண்டோஸ் 10றக்கான ஸ்டிக்



விண்டோஸ் 10 இயங்குதளத்தினைக் கொண்ட USB Compute Stick ஒன்றினை இன்டெல் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

இதன் பெறுமதி 150 டொலர்கள் வரை இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. Intel Atom Z3735F Bay Trail Quad-Core Processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 32GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினையும் கொண்டுள்ள இச் சாதனத்தில் Micro USB Port, USB 2.0 Port, HDMI, MicroSD slot, WiFi and Bluetooth 4.0 என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேபோன்றே முன்னர் விண்டோஸ் 8.1 இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்ட USB Compute Stick அறிமுகம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### இலத்திரனியல் கைப்பட்டி



இலத்திரனியல் சாதன உற்பத்திக்கு பெயர் பெற்ற சோனி நிறுவனம் SmartBand 2 எனும் அதி நவீன இலத்திரனியல் கைப்பட்டி ஒன்றினை அறிமுகம் செய்யவுள்ளது.

இதில் இதயத்துடிப்பு வீதத்தை அறிந்துகொள்ளும் விசேட சென்சார் பொருத்தப்பட்டுள்ளதுடன், குரல்வழி அழைப்புக்கள், குறுஞ்செய்திகள், மின்னஞ்சல்கள் என்பவற்றினை அனுப்பும் வசதியும் தரப்பட்டுள்ளது.

இவை தவிர மேலும் பல புதிய அம்சங்கள் உள்ளடக்கியதாக உருவாக்கப்-பட்டுள்ள இக் கைப்பட்டியின் விலையானது 119 பவுண்ட்ஸ்கள் ஆக இருப்பதுடன், சுமார் 60 நாடுகளில் அடுத்த மாதம் அறிமுகம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### GOOGLE MAPS - NIGHT MODE

கூகுளின் Google Maps சேவையில் Night Mode எனும் புதிய வசதியினை உட்புகுத்தியுள்ளது. முதன் முறையாக iOS சாதனங்களுக்கான அப்பிளிக்கேனில் இந்த வசதி தரப்பட்டுள்ளது. இவ்வசதியானது இரவு நேரங்களில் இலகுவான முறையிலும், துல்லியமாகவும் Google Maps சேவையைப் பயன்படுத்துவதற்கு உதவுகின்றது.

இவை தவிர இடங்களைப் பெயரிடுதல், தேடல்களுக்கான ஆலோசனைகள், போஸ்ட் செய்யப்பட்ட புகைப்படங்களுக்கான தலைப்புக்களை எடிட் செய்தல் போன்றவற்றுடன் மேலும் சில தவறுகள் நீக்கப்பட்டதாக இப்புதிய பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

## கணனி பற்றி கண்ணோட்டம் - அதன் வரலாறும், ஏற்பட்ட மாற்றங்களும்


அதேவேளை பிள்ளைகளின் உயர்ந்தபட்ச இயலுமைகளை விருத்தி செய்து உயரிய வாழ்க்கை முறைக்கு ஈடுபடுத்தவும், சமூகத்துக்கு பயன்மிக்க வழிகாட்டல்களை வழங்கவும், மற்றும் அதற்கு தேவையான அடித்தளத்தை இடுவது தொடர்பாகவும் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை தொடர்ந்தும் வலுவூட்டி தேசிய தொழில்சார் தகைமையுடன் இணைந்த க.பொ.த (உ.த) தொழில்நுட்ப பாடவிதானம் 250 பாடசாலைகள் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமையானது இந்நாட்டின் கல்வியில் திருப்பு முனையாக அமைந்துள்ளமை முக்கிய அம்சமாகும்.

மேலும், நவீன அறிவு மற்றும் திறமைகளைப் போன்று அறிவு பண்பினை போசிக்க கூடியவாறு இளம் சந்ததியினரை உருவாக்கவும், இது தொடர்பாக ஆர்வத்துடன் சகல பக்கத்தோற்றங்கள் ஊடாகவும் கல்வி செயற்பாடுகளை முன்னெடுத்து சிறந்த சமூகத்தை உருவாக்க பங்களிப்பு செய்வதில் கல்வி அமைச்சு தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை முக்கியமாகும்.

ஆதலால்தான் மகிந்த சிந்தனையின் செயல்வடிவம் இந்நாட்டின் கல்வித்துறையிலும் அதிசயிக்கத்ததாக அமைய வேண்டும் என்று கூறப்படுகின்றது.

அந்தவகையில் "இலவசக் கல்விக்காக எமது பிள்ளைகளுக்குள்ள உரிமையை எந்த வகையிலும் இல்லாதொழிக்கமாட்டேன். நாடு பூராவுமுள்ள சகல மகா வித்தியாலயங்கள் மற்றும் மத்திய மகா வித்தியாலயங்களுக்குத் தேவையான உயர்தர விஞ்ஞானக்கூடம், சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் கற்கும் அமைப்பைக் கொண்ட மொழிநிலையம், கணனி நிலையம், நூலகம், விளையாட்டரங்கம் உட்பட்டதாகச் சகல வசதிகளையும் பெற்றுக் கொண்டு பூரணமான பாடசாலைகளாக அவற்றை உயர்நிலைக்கு கொண்டு வருவேன் (மகிந்த சிந்தனை- 2005 - பக்கம் 72)

பாடசாலைக் கல்வி முறையானது எதிர்வரும் அபிவிருத்தித் தசாப்தத்தின் பொருட்டாகவன்றி பல நூற்றாண்டுகள் தொலைதூரம் செல்லக் கூடியவாறே நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.



தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....



அதாவது 1939 தொடங்கி 1941 இன் ஆரம்பம் முதல் 2 ம் உலக யுத்தம் சூடு பிடிக்கவில்லை என்றும், ஆங்காங்கே சண்டைகள் நடந்ததாகவும், ஆனால் பெரும்பாலான வீரர்கள் ஓய்விலேயே களத்தில் இருந்தார்களாம். அந்த காலப்பகுதியை ஆய்வாளர்கள் "போலிப்போர் " (Phoney War) என்று குறிப்பிடுகிறார்கள். அச்சமயம் அமேரிக்கா- பிரிட்டனுக்கு ஆயுத வழங்கல் செய்ததும், அந்த கப்பல்களை தேடி ஜெர்மன் நீர் மூழ்கிகள் தாக்கியளித்ததும் நடந்த வண்ணமே இருந்திருக்கிறது. ஆயுதக் கப்பல்கள் தாக்கி அழிக்கப்பட்டால் உண்டாகிற வேதனை நமக்கு புரியாததும் அல்ல. அமெரிக்காவின் நுழைவு, போரின் திசையையும் கதியையும் மாற்றியது என்றே சொல்கிறார்கள்.

இதே போன்று கடந்த காலங்களில் தமிழரின் ஆயுதப் போர் வரலாற்றிற்குள்ளும் இப்படியான நிலைமைகள் இருந்ததாக பல இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். கட்டமைக்கப்பட்ட கடும் கட்டுக் கோப்புகள் உடைய படையணிகளை தமிழர் தரப்புக் கொண்டிருந்தனர். அதிலும் சில படையணிகள் களத்தில் நிக்கிறதாம் என்று செய்தி வந்தாலே அங்கே முன்னரங்கில் நிற்பவர்களுக்கு ஒரு உத்வேகம் கிடைத்ததாகவும் சொல்லியிருக்கிறார்கள். அதனைவிட எதிரிகளுக்கு அந்த செய்தி கிடைத்தால் வயிற்றைக் கலக்குவதாகவும் சொல்லுவார்கள். அவ்வளவு ஏன்? சில தளபதிகள் வந்து நிக்கிறாங்கள் என்றாலே எதிரிகளுக்கு அந்த நிலைமைதானாம். இவற்றை நான் சொல்லவில்லை. யாரோ சொன்னார்கள்.

இந்த இரண்டாம் யுத்த காலப் பகுதிக்குள் சம்பந்தப்பட்ட அனைத்து நாடுகளும் தனித்தும் கூட்டுச் சேர்ந்தும் ஏறக்குறைய 500 குறையாத இராணுவ நடவடிக்கைகளை (military operations) செய்திருக்கிறது.. அதிலும் அமேரிக்கா ஜப்பானுடன் மிகவும் மூர்க்கமாகவும், பலமாகவும் போரிட்டிருக்கிறது. தென் கிழக்காசிய நாடுகள், மற்றும் வளங்கள் நிறைந்த அமேரிக்கா ஆளுகைக்குள் இருந்த பசுபிக் சமுத்திரம் எங்கும் பரவிக் கிடக்கும் பல தீவுக் கூட்டங்களை பாதுகாக்கவும், அங்கே அமைக்கப் பட்டிருந்த கண்காணிப்பு நிலைகளுடன் இராணுவ தளங்கள் களஞ்சியங்களை பாதுகாக்கவும் போரிட்டிருக்கிறது. கடல் வான் தரை என அனைத்து வளங்களையும் அமேரிக்கா ஒருங்கிணைத்தே போராடியது. அதிலும் ஜப்பானிய ஜேர்மனிய நாசகார நீர்மூழ்கிகள் மிகவும் பயங்கரமாக சேதங்களை அமெரிக்காவிற்கு உருவாக்கியது. ஜேர்மனிய U -boat என்கிற நீர்மூழ்கிகள் அமெரிக்க ரடாரிலே தட்டுப் பட்டால் அமெரிக்க வீரர்களுக்கு வயிற்றில் புளியை கரைப்பதாக சொன்னார்களாம். ஜப்பானிய சிறிய போர்க்கப்பல்களை பார்த்து பிசாசுப்-படகுகள் என்ற இந்த அமேரிக்கா கலங்கித்தான் போயிருக்கிறது.

இந்த உலகப்போரின் தீவிரத்தை உணர்ந்து கொள்ள ஒரு ஒப்பீடு ஒன்றை சுட்டிக் காட்டலாம். அதாவது கார் தயாரிப்பிலும் விற்பனையிலும் அப்பொழுதும் கொடிகட்டிப் பறந்தது அமெரிக்காதான். ஆனால் போர் தாங்கிகளை வடிவமைத்து போரில் தாக்குதல் வழிமுறைகளையும் உருவாக்கியது ஜெர்மனிதான். அன்றைய நாளில் அமெரிக்காவில் ஒரு நாளைக்கு எத்தனை கார் தயாரிக்கப் பட்டதோ, அதே எண்ணிக்கையில் ஜெர்மனியில் போர் தாங்கிகள் உற்பத்தி செய்யப் பட்டதாக வராலாறுகள் சொல்கிறது. உலகப்-போரில் ஜெர்மன் வென்றிருந்தால்...? என்ற கேள்வியே புரியவைக்கும் அந்தப் போரின் தீவிரத்தை...

ஒரு நாட்டின் அல்லது ஏதோ ஒன்றின் வரலாறை சொல்லும் பொழுது, அது யாரோ ஒருவரின் அல்லது சிலரின் வரலாறாகவே அது மாறிப் போய் விடுகிறது... ஏனென்றால் அந்த நேரம் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் ரூஸ்வெல்ட் என்றாலும் முப்படை ஒருங்கிணைப்பு மற்றும் படை நடவடிக்கைகள் தொடங்கி கீழ்மட்ட படை விசாரணைகள் வரை ஆயிரம் கைகள் கொண்டு செய்து முடித்தவர் General of the Army. George Catlett Marshall, Jr. (1880 - 1959) முதலாம் உலகப்போர் கண்டு, பின்னர் இரண்டாம் உலகப்போரிலும் ஆளுமையை நிலை நிறுத்தியவர். அத்துடன் நோபல் பரிசும் வென்றவர். ஐந்து நட்சத்திர அதிகாரியாக Field marshal தரத்தில் இருந்தவர்... இறுதிவரை அமெரிக்க இராணுவத்திற்காகவே பணியாற்றியவர். மேலும் அந்த இரண்டாம் உலக யுத்தத்தினால் அதிகரித்த அமெரிக்க காலாட்படை பயிட்சிகளுக்காக அவர் உருவாக்கிய முகாம்கள், பயிற்சி நெறிகள், தந்திரோபாயங்கள் என்று ஏராளமாக உள்ளன. அதிலும் அவர் உருவாக்கிய நூலான "Infantry in Battle" என்கிற நூல் இன்றளவும் அமெரிக்க இராணுவத்தால் பின்பற்றுகிற ஒரு வழிகாட்டல் நூலாக இருக்கிறது என்கிற ஒரு விடயமே போதும் அவருடைய ஆளுமைகளை பறைசாற்ற...

என்னதான் மத்தியில் அரசு உறுதி என்றாலும் போர் என்று வரும் பொழுது தளபதி அங்கே முக்கியமா-கிறான். தமிழர் தரப்பில் அப்படி உதாரணங்கள் பல இருந்தாலும், எதிரியை கூட சமனாக மதிக்கும் பண்பு எம்முடையது என்பதால், இங்கே நாம் சரத் பொன்சேகா அவர்களை எடுத்துக் காட்டலாம். இலங்கை இராணுவத்தின் கதாநாயகன். மிகச்சிறந்த இராணுவப் போர் வீரன். போர் இறுக்கம் என்றால், அவனது படை பின் வாங்குகிறது என்றால் களத்தின் முன்னணிக்கு போய் இறங்கக் கூடியவன். அங்கே நின்று படை வழிநடத்தக் கூடிய இராணுவ வல்லாளன். தமிழர்களுக்கு எதிரான இறுதி யுத்தத்தில் இலங்கை அரசுக்குக் கிடைத்த மிகப்பெரிய வரம் சரத் பொன்சேகா என்றால் மிகையில்லை. உலக நாடுகள் ஆயிரம் உதவிகளை செய்திருந்தாலும் சரத் பொன்சேகாவின் உறுதியும் வழிநடத்தலும் தான் அவர்களுக்கு வெற்றி தேடித் தந்தது. (புரியும் என்று நினைக்கிறேன்...)

பொதுவாக தமிழர்களுக்கு 2ம் உலகப்போரின் பல விடயங்கள் தெரிய வந்ததே கடந்த தமிழர் போராட்டத்தின் வழிதான். உலக யுத்தத்தில் இடம்பெற்ற பல சம்பவங்கள் தமிழர் போரியலுடன் ஒப்பிடப்படுகிறது. பல தமிழர்களின் தாக்குதல்கள் அவை சார்ந்த வடிவில் இருந்ததாக சொல்கிறார்கள். உதாரணமாக Operation Torch, Operation Overlord, Operation Cobra, Operation Normandy, Stalingrad, ஹிட்லரின் மின்னல் வேகத் தாக்குதல் முறை, பதுங்கு குழிகள் அமைக்கும் முறை, திகைப்புத் தாக்குதல், பதுங்கிச் சுடுதல் போன்ற உலகப்போர் சம்பவங்களுடன் ஒப்பிட்டு தாயகத்தில் ஆகாய கடல் வெளிச்சமர், ஆணியிறவுச் சமர், முல்லைச் சமர், இத்தாவில் தரையிறக்கம், ஜெயசிக்குறு எதிர்ச் சமர், கட்டுநாயகா, அனுராதபுரம்..




விந்தியா சாகரன்

முகப்பக்கத்திலிருந்து...

## விநோதங்கள்

### புத்தகம் வாசிப்பவரா? இலவசமாக பயணிக்கலாம்!!



ரொமானியா நாட்டின் ஒரு நகரத்தில் புத்தகம் வாசிப்பவர்களை பேரூந்தில் இலவசமாக பயணம் செய்ய அனுமதித்த போக்குவரத்-துத்துறையின் செயல் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. ரொமானியா நாட்டை சேர்ந்தவர் விக்டர் மிரொன். புத்தக காதலரான இவர், மக்களிடையே புத்தகம் வாசிக்கும் பழக்கம் குறைந்து வருவதால் மக்களிடையே வாசிக்கும் பழக்கத்தை மீண்டும் அதிகரிக்க முயற்சி ஒன்று மேற்கொண்டார். அதன்படி கடந்த யூன் மாதத்தில் ஒரு வார காலத்துக்கு பேரூந்துகளில் புத்தகம் வாசிப்பவர்கள் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். நல்ல வரவேற்பை பெற்றதையடுத்து இதை ஆண்டு முழுவதும் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### விண்கல்லால் ஆபத்தா???



பூமி மீது விண்கல் மோதவுள்ளதாக வெளியான செய்திகளுக்கு நாசா முற்றுப்புள்ளி வைத்துள்ளது. வருகிற செப்டம்பர் மாதம் 15- 28 ஆகிய திகதிகளுக்குள் மிகப்பெரிய விண்கல் ஒன்று பூமியின் மீது மோதவிருப்பதாகவும், இதனால் மிகப்பெரும் சேதம் ஏற்படும் எனவும் செய்திகள் வெளியாகின.

இந்த செய்திக்கு நாசா ஆராய்ச்சியாளர்கள் மறுப்பு தெரிவித்துள்ளதுடன், இன்னும் நூறு ஆண்டுகளுக்கு பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் விண்கலோ அல்லது வால்நட்சத்திரமோ பூமி மீது விழுவதற்கான வாய்ப்பு 0.01 சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பார்த்தெழுத விடாததால் அமளிதுமளி

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்திலுள்ள கல்லூரியொன்றின் மாணவர்கள், பரீட்சையின் போது மோசடி செய்வதற்கு அனுமதி வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பரீட்சையைப் புறக்கணித்துள்ளனர். இம்முறை பரீட்சைக்கான ஏமாற்றுவதற்கான வழிவகைகளைச் செய்துதராமைக்காக மாணவர்கள் பரீட்சையைப் புறக்கணித்தது மாத்திரமன்றி, தங்கள் உடல்களில் வெட்டுக்களை ஏற்படுத்தி தங்கள் எதிர்ப்பை வெளியிட்டனர். இதன் அடுத்த கட்டமாக, மாணவொருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்ய முயன்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பின் நிலைமையை அடக்குவதற்காக காவல்துறையினரின் உதவி நாடப்பட்டுள்ளது.

- அமெரிக்காவின் அட்லாண்ட நகரில் கடந்த 18 ஆம் திகதி தொடர் மழை காரணமாக வானிலை சற்று பாதிக்கப்பட்டது. பின் வானிலை சீரடைந்தபின்னர் ஓடுதளத்தில் இருந்து விமானங்கள் ஒவ்வொன்றாக பயணிக்க ஆரம்பித்தன. மற்றொரு விமானத்தில் அமர்ந்திருந்த ஜாக் பெர்கின்ஸ் என்ற பயணி தனது கமெராவில் படம் பிடித்துக் கொண்டிருந்த வேளை டெல்டா ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான ஒரு விமானத்தின் வால் பகுதியில் எதிர்பாராத விதமாக ஒரு பிரமாண்ட மின்னல் தாக்கியதை மிகவும் தத்ரூபமாக படம்பிடித்துள்ளார்.




இப்படியும் நடக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் வெற்றி சொல்லும் செய்தி

அரசியல் அலசல்

ஓரணியில் அணி திரள்வதன் மூலம் பலமான அரசியல் சக்தியாக தம்மை முன்னிறுத்துவது தொடர்பில் தமிழ் மக்கள் மீண்டும் தமது உறுதிப்பாட்டினை பொதுத் தேர்தலினூடும் வெளிப்படுத்தி-யிருக்கின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி அதனையே காட்டுகின்றது. தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் எனும் நிலைப்பாட்டினை பருமட்டாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது ஏற்றி வைப்பதற்கும் அது காரணமாக அமைந்திருக்கின்றது. வடக்கு- கிழக்கில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி என்பது ஏற்கெனவே எதிர்பார்க்கப்பட்டதுதான். எனினும், யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் கட்சியாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விளங்கும் என்று சற்று எதிர்பார்க்கப்பட்டது. அதாவது, தமிழ்த் தேசிய வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் குறிப்பிட்டளவு பகிர்ந்து கொள்ளும் என்று கருதப்பட்டது.

ஆயுதப் போராட்டத்தினை முன்னெடுத்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகளை சர்வதேச ஒத்துழைப்போடு இலங்கை அரசாங்கம் அகற்றிய காலம் தொட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை தாம் ஒருங்கிணை-வதற்கான புள்ளியாக தமிழ் மக்கள் கருதி வந்திருக்கின்றார்கள்.

கடந்த ஆறு ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியலு-ரிமைகளுக்கான போராட்டங்கள் மற்றும் இறுதி மோதல்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் சரியான முன்நகர்வுகளைக் கொண்டிருக்க-வில்லை. அப்படியான நிலையிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியை பதிவு செய்திருக்கின்றது.

தமிழ்த் தேசிய அரசியல் சூழலில் விமர்சனங்களைத் தாண்டி, வெற்றிகளை அரசியல் தலைமைகளும், ஆயுதப் போராட்டத் தலைமைகளும் பெற்று வந்திருக்கின்றன. அது, மக்களின் பெரும் அபிமானம் மற்றும் இனமான உணர்வுகளின் போக்கில் நிகழ்ந்தப்பட்டு வந்திருக்கின்றது.

தந்தை செல்வநாயகத்தை அரசியலின் பெரும் வீச்சாகவும் தலைவர் பிரபாகரனை ஆயுதப் போராட்டத்தின் முழு நம்பிக்கையாகவும் கொள்வதற்கும் அதுவே அடிப்படையாக இருந்தது. இப்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னால் ஒருங்கிணை-வதும் அதன் போக்கிலானது. ஆனால், அது, செல்வநாயகம்- பிரபாகரன் ஆகியோரின் இடங்களை குறைநிரப்பு-வதற்கானதேயன்றி இறுதியானது அல்ல.

தமிழ்த் தேசிய அரசியலில், இரு கட்சி அரசியலின் அவசியம் தொடர்ந்தும் உணரப்பட்டு வருகின்ற நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வருகை குறிப்பிட்டளவான நம்பிக்கையை சில தரப்பினருக்கு வழங்கியிருந்தது. ஆனால், அந்த நம்பிக்கை என்பது மிதக்கும் நிலை எனும் அளவில் இருந்ததேயன்றி சாதாரண தமிழ் மக்களின் மனங்களை வெற்றி கொள்வதற்கான திட்டங்களையோ-முனைப்புக்களையோ கொண்டிருக்கவில்லை என்பதை தேர்தல் முடிவுகள் பிரதிபலித்திருக்கின்றன.

பொதுத் தேர்தல் காலம் தமிழ்த் தேசிய அரசியல் களத்தில் இரு பெரும் பிரிவுகளை ஏற்படுத்தியிருந்தது. தாயகத்திலுள்ள (புலம்) மக்கள் ஒரு கூறாகவும், புலம்பெயர் தமிழ் மக்கள் இன்னொரு கூறாகவும் இருந்து கொண்டு களமாற்றுகின்ற நிலையை அது தோற்றுவித்திருந்தது. அது, தேர்தல் கால பிரசாரங்கள்-பரபரப்புக்களைத் தோற்றுவதற்கு காரணமாக இருந்தன என்பன உண்மை. ஆனால், அது, பெரும் பலன்களை வழங்கவில்லை. மாறாக, இடைவெளியின் அளவினை (குறிப்பாக, இரண்டு தரப்புக்கும் இடையில் ஈகோ ரீதியினா இடைவெளியை) அதிகப்படுத்தி-யிருந்தது.

இன்னொரு பக்கம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தன்னுடைய அரசியல் வரலாற்றில் எதிர்கொள்ளும் இரண்டாவது தேர்தல் இது. 2010ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டு சுமார் 7,000 வாக்குகளை பெற்ற பின்னர் கடந்த ஐந்து ஆண்டுகளில் வேறு எந்த தேர்தல்களையும் சந்திக்கவில்லை. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், இரண்டு மாகாண சபைத் தேர்தல்கள் (கிழக்கு, வடக்கு), ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட தொடர்ந்து வந்த தேர்தல்களில் பங்கெடுக்காமல் புறக்கணித்திருந்தது.





இது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெரும் தோல்விக்கு காரணமாகியிருக்கின்றது. ஏனெனில், தமிழ் மக்கள் கடந்த காலத்தில் தேர்தல்களை தமது அரசியல் போராட்டத்தின் குறியீட்டு வடிவங்களா-கவும் கையாண்டு வந்திருக்கின்றார்கள். அப்படியான நிலையில், தேர்தல் புறக்கணிப்பு நிலைப்பாடுகளின் போக்கில் நகர்ந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மீது ஒருவிதமான வெறுப்பு அல்லது அதிருப்தி எழுவது இயல்பானது.

2010ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 7,000 வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இம்முறை 15,000 வாக்குகளைப் பெற்றமை முன்னேற்றகரமானது என்று சில தரப்பினர் கருதுவதற்கு இடமுண்டு. ஆனால், 15,000 வாக்குகள் என்பது முன்னணி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட 45,000களோடு ஒப்பிடுகையில் 30,000 குறைவாகும். இதற்கு, மக்களின் நம்பிக்கையை வெற்றி கொள்வதற்கான சாத்தியங்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவறவிட்டிருக்கின்றது என்பதோடு, தமது செயற்றிட்டங்கள் தொடர்பிலான தெளிவூட்டல்களை துணிச்சலாக- தெளிவாக செய்ய முடியாமல் போனதும் காரணமாகும்.

வழக்கமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான விமர்சனங்களை மாத்திரம் முதன்மை அரசியல் நிலைப்பாடு மாதிரி கருதி களமாற்றியதும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரை தமிழ் மக்கள் மத்தியிலிருந்து அகற்ற அல்லது விலக்க வைக்க காரணமாகியிருக்-கின்றது. அது, என்ன வகையான மனநிலை என்றால், “என் வீட்டுப் பிள்ளையை நான் அடிப்பேன். அடுத்தவன் அடிக்க முடியாது” என்கிற வகையானது.

தமிழ் மக்களின் அரசியலுரிமைப் போராட்டங்களின் ஆணிவேரும்- அத்திவாரமும் தாயகத்திலுள்ள தமிழ் மக்களே. அவர்களை பிரதானப்படுத்தியே போராட்டங்களும் முனைப்புக்களும் கட்டமைக்கப்பட வேண்டும். அது, தாயகத்திலுள்ள மக்களின் பெரும் ஒத்துழைப்போடு நிகழ்த்தப்பட வேண்டியது. அதுதான், போராட்டத்தினை தொடர்ச்சியாக தக்க வைக்கவும் உதவும்.

ஆனால், தமிழ்த் தேசிய அரசியலின் போக்கில் புலம்பெயர் சமூகம் சிலவேளை தீர்மானங்களை மேற்கொள்ளும் சக்தியாக தன்மை பிரதானப்படுத்த முனைகின்ற போது, தாயக- புலம்பெயர் தரப்புக்களுக்-கிடையில் முரண்பாடுகள் பெருமளவில் வெளிப்படுகின்றது. அது, ஒத்திசைந்து இயங்க வேண்டிய தருணங்களை புறந்தள்ள வைத்து, ஒருதரப்பினை இன்னொரு தரப்பு ஒருவித ஈகோவோடு எதிர்கொள்ளும் சூழலை தோற்று-வித்திருக்கின்றது. அது, இந்தப் பொதுத் தேர்தலிலும் பிரதிபலித்தது.

தமிழ்த் தேசியத்துக்கான அர்ப்பணிப்புள்ள தரப்புக்கள் அனைத்தும் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, தாயகத்திலுள்ள மக்களே ஆதாரங்கள். அவர்களின் மனங்களை நெருக்கமாக படிப்பது முக்கியமானது. அவர்களை மீறிய அல்லது அவர்களை புறந்தள்ளிய அரசியல் நிலைப்பாடுகள் என்பது பெரும் சிக்கலை ஏற்படுத்தும். அது, தாயகத்திலுள்ளவர்களுக்கும்- புலம்பெயர் தேசத்திலுள்ளவர்-களுக்குமான இடைவெளியை இன்னும் அதிகரிக்கும். அது, என்றைக்குமே நல்லதல்ல. அது, யதார்த்த கள நிலைவரங்களை உணர்ந்து கொள்வதை தவிர்க்க வைக்கும். அது, பாரிய பாதிப்புக்களை வழங்கும்.

மாற்றம் பற்றிய கோசம் என்பது மக்களின் மனங்களிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். அதனை, தலைவர்களும், அமைப்புக்களும் ஒருங்கிணைத்து பிரதிபலிக்க வேண்டும்.

ஆனால், இந்தப் பொதுத் தேர்தலில் மாற்றம் எனும் சொல்லாடல் தாயகத்திலுள்ள மக்களிடமிருந்து ஆரம்பிக்கவில்லை. மாறாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் புலம்பெயர் அமைப்புக்கள், ஊடகங்க-ளிலிருந்து எழுந்தவை. அவற்றை உள்வாங்கி பிரதிபலிப்பதற்கான அவசியத்தினை மக்கள் கொண்டிருக்க-வில்லை.

அது, மாற்றம் எனும் கோசத்தினை எந்தவித கரிசனையுமின்றி தூக்கியேறிய வைத்திருக்கின்றது. “ஆயுதப் போராட்டத்தின் மூலம் இறுதி இலக்கினை அடைய முடியாது என்பது தமிழ் மக்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், ஆயுதப் போராட்டத்துக்கான புலிகளின் அர்ப்பணிப்பை என்றைக்கும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்பதற்காகவே தமிழ் மக்கள் ஆதரவளித்து வந்தார்கள். அதற்காக, அவர்களினால் பூகோள அரசியலைப் புரிந்து கொள்ள முடியாது என்று அர்த்தமல்ல. மாறாக, புலிகள் மீது கொண்டிருந்த கட்டுப்படுத்த முடியாத அபிமானத்தை இன்னொரு தரப்பு மீது கொள்வதற்கும் தமிழ் மக்கள் தயாராக இல்லை. அப்படியான நிலையில், தங்களை நேரடியாக புலிப் பிரதிநிதிகள் என்று முன்வைக்கும் தரப்புக்களை பிணத்தின் மீது அரசியல் செய்யும் தரப்பாகவே மக்கள் நோக்குவார்கள். அப்படியான நிலையும் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யதார்த்த களம் உணர்ந்த அரசியல் முனைப்புக்கு பெரும் வெற்றியைக் கொடுக்கும்.

அதுதான், எம்.ஏ.சுமந்திரன் நேரடியாக யாழ்ப்பாணத்தில் போட்டியிடுவதற்கும் காரணமாகும். அவர் வெற்றி பெறுவார்...” என்கிற விடயத்தை அரசியல் ஊடாடலொன்றின் போது தமிழ்த் தேசிய அரசியலில் தொடர்ச்சியாக இயங்கும் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இந்தப் பொதுத் தேர்தலின் முடிவுகளைப் பார்க்கின்ற போதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைபெறுகைக்கான நீட்சிக்கும் அதுதான் காரணமாக அமைந்திருக்கின்றது என்று கொள்ள வேண்டியிருக்கின்றது. முரண்பாடுகளின் போக்கில் பிரிந்து செல்லாமல் இணக்கமான புள்ளிகளை கவனத்திற் கொண்டு செயற்படுவது தமிழ்த் தேசிய அரசியலுக்கு அவசியமானது. அது, புலம்-புலம்பெயர் சமூக இடைவெளியை அகற்ற வேண்டும். அது, எதிர்கால வெற்றிகளுக்கு முக்கியமானது.


-- புருசோத்தமன் --

www.tamilmirror.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனைவியை தீண்டாமை!!!!



நபி(ச) அவர்கள் தமது மனைவியரை ஒரு மாத காலம் ஈழா செய்துள்ளார்கள் என்பது நபிமொழிகளில் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

காலம் முழுவதும் உன்னைத் தீண்ட மாட்டேன் என ஒரு கணவர் மனைவி குறித்து சத்தியம் செய்ய உரிமை அற்றவர். அப்படிச் செய்தாலும் நான்கு மாதங்களுக்குள் அவளுடன் சேர்ந்து விட வேண்டும் அல்லது பிரிந்துவிட வேண்டும்.

நான்கு மாதங்களுக்குள் சத்தியம் செய்தவர் அந்த சத்தியத்தை அவர் முறிக்க நாடினால் முறிக்கலாம். உதாரணமாக, ஒரு மாத காலம் உன்னைத் தீண்டமாட்டேன் என சத்தியம் செய்தவர் மறு நாளே மனைவியுடன் இல்லறத்தில் ஈடுபடலாம். ஆனால், சத்தியத்தை முறித்ததற்காக பரிகாரம் காண வேண்டும். இந்த வசனம் பெண்கள் அடம்பிடிக்கும் போது அவர்களை அடக்குவதை அனுமதியளிக்கும் அதே வேளை பெண்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமையையும் தடுக்கின்றது. இந்த வசனத்தை வைத்து சில தலைவர்கள் தவறாக குடும்பங்களைப் பிரிப்பதுண்டு. நான்கு மாதங்களுக்குள் வாழ்வு கொடுக்காவிட்டால் அதையே விவாகரத்தாக அறிவிக்கும் கடமை ஜமாஅத்துக்கு உண்டு எனக் கூறி நான்கு மாதங்களுக்குள் சேராவிட்டால் அதுவே தலாக்தான் என பிரித்துவிட முற்படுகின்றனர். இது தவறாகும். நான்கு மாதம் சேராவிட்டால் அதுவே தலாக்தான் என்றால், அடுத்த வசனத்தில், 'அவர்கள் விவாகரத்துச் செய்வதையே தீர்மானமாகக் கொண்டால்...' என அல்லாஹ் கூற வேண்டிய தேவை இல்லை.

எனவே, இது போன்ற நிலையில் பெண் ஜமாஅத்திடம் நான்கு மாதம் தாண்டிவிட்டால் முறையிடலாம். அப்படி முறையிட்டால் இருவரையும் அழைத்து ஜமாஅத் விசாரித்து சேர்ந்து கொள்ளும்படி கணவனுக்கு அறிவுரை கூற வேண்டும். அவன் நான்கு மாதங்களை விட அதிகமாக ஒதுக்கி வைக்கும் உரிமை இல்லை என்பதை உணர்ந்து சேர்ந்து வாழ நினைத்தால் சேர்ந்து வாழலாம். அல்லது அதில் விருப்பம் இல்லையென்றால் தலாக் சொல்லலாம்.

தொடரும் .. ..

– இஸ்மையில் –

# திருச்சபையின் வரலாறு

கடந்தவாற தொடர்ச்சி .. ..

இதன் மூலம் வேதபோதனைகளை மீறிய ஒரு நிலைக்கு சபைத்தலைமையை இக்னேஸியஸ் உயர்த்தியதைப் பார்க்கிறோம். சபை வரலாற்றின் ஆரம்பத்தில் இருந்தே பிரஸ்பிட்டர், பிசப் ஆகிய வார்த்தைகள் சபையின் மூப்பர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளாகவே இருந்துள்ளன. இதில் பிசப் என்ற வார்த்தைக்கு மூப்பர் என்றே பொருள். உண்மையில் King James Version மொழி பெயர்ப்பில் 1 தீமோத்தேயு 3:1 இல் பயன்படுத்தப்பட்டுள்ள இந்த ஆங்கில வார்த்தைக்கு மேற்பார்வையாளன் என்பதே பொருள். இதை ஆங்கிலத்தில் "பிசப்" என்று மொழி பெயர்த்திருக்கிறார். ஆனால், இன்று "பிசப்" என்ற வார்த்தை மிகவும் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது. பிசப், மூப்பரைவிடப் பெரிய சபைத்தலைவராகக் கருதப்படுகிறார். இது வேதத்தில் காணப்படும் போதனையல்ல. வேதத்தைப் பொறுத்தளவில் பிசப்பும், மூப்பரும் ஒரே பதவிகள்.

இக்னேஸியஸின் காலத்தில் அந்தியோகியாவிலும் கிழக்கில் வேறு சில இடங்களிலும் ஒரு மூப்பர் மற்ற மூப்பர்களுக்கெல்லாம் தலைமை தாங்கி அவர்கள் மேல் அதிகாரம் செலுத்தும் முறை ஏற்பட்டுவிட்டது. வேதம் மூப்பர்களில் சிலர் முழு நேர ஊழியத்திற்கு அழைக்கப்படுகிறார்கள் என்றும், அவர்கள் மற்ற மூப்பர்களைவிட அதிக நேரத்தைப் பிரசங்கிப்பதிலும் போதிப்பதிலும் செலவிடுவார்கள் என்றும் போதிக்கிறதே தவிர ஏனைய மூப்பர்களைவிட இவர்கள் கூடுதல் அதிகாரம் கொண்டவர்களாக இருப்பார்கள் என்று போதிக்கவில்லை. வேதபோதனைகளுக்கு முரணாக ஒரு மூப்பர் "பிசப்பாக" சகல அதிகாரம் கொண்டவராக இருக்கும் முறை இக்னேஸியஸ் காலத்திலேயே தோன்றிவிட்டது.

ஸ்மிர்னா சபையைச் சேர்ந்த பொலிகார்ப் (Polycarp) - இரண்டாம் நூற்றாண்டில் பிரசித்தம் பெற்ற கிறிஸ்தவராகவும், கிறிஸ்துவுக்காக மரணத்தைத் தழுவியவர்களில் ஒருவருமாக இருந்தார். அப்போஸ்தலனான யோவானின் சீடனான பொலிகார்ப் கி. பி. 156 இல் உயிரோடு எரிக்கப்பட்டபோது அவருக்கு 86 வயதாக இருந்தது. யோவான் இறந்தபோது பொலிகார்ப்பிற்கு 30 வயதாக இருந்திருக்கலாம். பொலிகார்ப்பின் சீடரான ஐரேனியஸ் (Irenaeus), பொலிகார்ப் அடிக்கடி யோவானைப் பற்றி பேசுவார் என்று கூறுகிறார். பொலிகார்ப் கிறிஸ்துவில் உறுதியான விசுவாசமுள்ளவராகவும், நல்ல இருதயத்தைக் கொண்டவராகவும் இருந்தார்.

தொடரும் .. ..

www.bible.me

# அழுதுதான் பாருங்களேன்

மனிதர்களில் சிலருக்கு அழுவது பிடிக்காது. ஆனால் பலரோ எதற்கெடுத்தாலும் அழுவதை பழக்கமாக கொண்டிருப்பார்கள். ஆனால், இந்த அழுகை கூட மனிதர்களுக்கு சில ஆரோக்கிய நன்மைகளை கொடுக்கிறது.

**அழுவதால் என்ன நன்மை?**



1. கண்களில் இருந்து கண்ணீர் வெளியாகும்போது, இமைகள் மற்றும் கண் விழிகள் சுத்தமாவதோடு மட்டுமல்லாமல் பார்வையும் தெளிவாகிறது.

2. கண்ணீரில் லைசோசோம் (Lysozyme) உள்ளதால், அது கண்ணில் இருக்கும் 90-95% பாக்டீரியாக்களை அழிக்கிறது.

3. நாம் தோல்வியால் துவண்டிருக்கும்போது மனம்விட்டு அழுதால், மனதில் உள்ள எதிர்மறை எண்ணங்கள் கண்ணீராக வெளியேறிவிடுகிறது.

4. மனிதர்களின் மனநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் மாங்கனீஸ் சத்து அழுவதன் மூலம் குறைகிறது.

5. இரத்த அழுத்தத்தை சீராக்குகிறது.

6. கண்ணீரில் உள்ள திரவம் சருமத்தில் பட்டு நச்சுக்களை அகற்றி சருமத்தை பாதுகாக்கிறது.

7. அழுகை வரும்போது அழுதுவிடுங்கள், ஒருபோதும் அதனை அடக்கிவைக்காதீர்கள், அது உங்களுக்கு மன அழுத்தம் வருவதற்கு காரணமாகும்.

# சிரியுங்கோவன்.. ..



*பல் டாக்டர பார்க்கப் போனியே! என்னாச்சு!*

காட்டல்லடா. திரும்பி வந்துட்டன்

*ஏன்டா??*

ஏன்னா. அங்க லேடி டாக்டர் தான் இருந்தா. நாம எந்த பொண்ணு கிட்டயும் பல்ல காட்ட கூடாதுன்னு வந்துட்டன்.




# பிறந்த எண் பலன்கள் 8

நீங்கள் 8,17,26 தேதிகளில் பிறந்திருந்தால் கடமை உணர்ச்சியும், பொறுப்பும் மிகுதியுடையவராக காணப்படுவீர்கள். போராட்ட உணர்வு மிக்கவர்கள். எவ்விடயத்திலும் நிதானமாக செயல்ப்பட்டு வெற்றியை அடைவீர்கள். தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும், மீண்டும் தர்மம் வெல்லும் என்பதற்கு ஏற்ப சோகங்களையும், சோதனைகளையும், கொடுத்த பின்பே சுகங்கள் கிட்டும். நீங்கள் தனி மறைமுக எதிர்ப்புகளை தவிடுபொடியாக்கி விடுவீர்கள். ரகசிய தொழில்களில் ஆர்வம் உண்டு. மற்றவரின் நலனுக்கு தன்னையே அர்ப்பணிப்பவர் நீங்கள். குடும்பத்தில் நிம்மதி கிடைக்கும் போது தொழிலில் பிரச்சனையும். தொழிலில் நிம்மதி என்கிற போது குடும்பத்தில் பிரச்சனையும் உண்டாகும். உங்கள் பெயரை சரியாக அமைத்து செய்தொழில், வியாபாரம், பதவிகளில் பெயரும் புகழும் பெற்றிருங்கள்.

# இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : மனக் குழப்பம் நீங்கி தெளிவு பிறக்கும். நண்பர்களின் உதவி கிடைக்கும். தடை விலகி முன்னேற்றப் பாதையில் வெற்றி நடை போடுவீர்கள்.

**ரிஷபம்** : குடும்பத்தில் சுபநிகழ்ச்சி சிறப்பாக நடந்தேறும். உறவினருடன் இணக்கம் உண்டாகும். புத்திரரை கண்டித்து, குறைகளை சரி செய்வீர்கள்.

**மிதுனம்** : புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள் சமூக அந்தஸ்து உயரும். சேமிப்பு, அத்தியாவசிய செலவுக்குப் பயன்படும்.

**கடகம்** : வருமானம் புதிய வழியில் கிடைக்கும். இயன்ற உதவியை பிறருக்குச் செய்ய முயல்வீர்கள். விருந்து, விழாவில் அடிக்கடி பங்கேற்பீர்கள்.

**சிம்மம்** : உறவினர்களிடம் இணக்கம் உண்டாகும். நீண்ட நாள் எதிர்பார்ப்பும் இனிதே நிறைவேறும். வாகன பராமரிப்புச் செலவு அதிகரிக்கும்.

**கன்னி** :கொடுத்த வாக்குறுதியை, எப்பாடுபட்டாவது நிறைவேற்றுவீர்கள். உடன் பிறந்தவர்கள் பாசமுடன் நடந்து கொள்வர்.

**துலாம்** : மனதில் நேர்மை குணம் நிறைந்திருக்கும். கருத்து வேறுபாடு மறைந்து, குடும்ப ஒற்றுமை சிறக்கும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி கூடும்.

**விருச்சிகம்** :சிறிய முயற்சியிலும் கூட பெரிய பலன் காண்பீர்கள். அறிமுகம் இல்லாதவருக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரரின் வாழ்வுக்கு உறுதுணை புரிவீர்கள்.

**தனுசு** :மற்றவரின் எண்ணத்தை உணர்ந்து செயல்படுவீர்கள். சிரமம் அணுகாத வாழ்வு உருவாகும். இல்லறத் துணை, கூடுதல் பாசம் கொள்வார். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும்.

**மகரம்** : எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தாய்வழி உறவினருடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். பயணத்தின் மூலம் இனிய அனுபவம் காண்பீர்கள்.

**கும்பம்** : தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வருவீர்கள். குடும்பம், முன்னேற்ற பாதையில் வெற்றிநடை போடும். உறவினர் கேட்ட உதவியை செய்து மகிழ்வீர்கள்.

**மீனம்** : சாதுரியத்துடன் செயல்பட்டு வருவீர்கள். திட்டமிட்டு பணிகளை செய்து முடிப்பீர்கள். ஆடம்பர எண்ணத்தை தவிர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சமையல் சமையல்



### இஞ்சியுடன் குழம்பு

**தேவையான பொருட்கள்**

புளி - 2 எலுமிச்சம்பழம் அளவு உருண்டை, இளசான இஞ்சி - 50 கிராம், காய்ந்த மிளகாய் - 5, வெந்தயம் - 1 மே.கரண்டி, தேங்காய் துருவல் - 1 மே.கரண்டி, பெரிய வெங்காயம் - 1, பச்சை மிளகாய் - 2, கறிவேப்பிலை – சிறிதளவு, வெல்லம் - ஒரு சிறிய கட்டி, கடுகு - 1 தே.கரண்டி, உப்பு - தேவையான அளவு, பெருங்காயம் - தேவையான அளவு, எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை**

இஞ்சியைக் கழுவி தோல் சீவி, பொடியாக நறுக்கவும். பின்னர் வெங்காயம், பச்சை மிளகாயை பொடியாக நறுக்கவும். புளியை வெந்நீரில் ஊறப் போடவும். தாச்சியில் எண்ணெய் விட்டு, இஞ்சித் துண்டுகளை வதக்கி எடுத்துக் கொள்ளவும். பிறகு தாச்சியில் எண்ணெய் விடாமல் தேங்காய் துருவலை வறுத்து எடுத்து, அதே தாச்சியில் காய்ந்த மிளகாய், வெந்தயத்தை வறுத்துக் கொள்ளவும்.

வறுத்த மிளகாய், வெந்தயம், தேங்காய் துருவல் இந்த மூன்றையும் மிக்ஸியில் அரைக்கவும். அத்துடன் சிறிது எண்ணெயில் வெங்காயம், பச்சை மிளகாயை வதக்கிக் கொள்ளவும். புளியைத் தேவையான தண்ணீர் விட்டுக் கரைத்து, அதில் அரைத்த விழுது, உப்பு, பெருங்காயம், வெல்லம் சேர்த்துக் கொதிக்கவிடவும். ஒரு கொதி வந்ததும் வதக்கிய இஞ்சித் துண்டுகள், வெங்காயம், பச்சை மிளகாய் சேர்த்து மேலும் கொதிக்கவிடவும். நன்றாகக் கொதித்ததும் இறக்கி, கடுகு, கறிவேப்பிலை தாளித்துக் கொட்டவும்.

## ஆரோக்கிய வாழ்வு



வீட்டில் தினந்தோறும் பயன்படுத்தும் உணவுப் பொருட்கள் மூலம் எளிதாக செய்யும் சில மருத்துவ முறைகளை தெரிந்துகொள்வோம்.

1.சுக்கு, பால், மிளகு, திப்பிலி, ஏலரிசி ஆகியவற்றை நன்கு வறுத்துப் பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட்டால் தொண்டை கரகரப்பு குணமாகும்.

2. நெல்லிக்காய் இடித்துச் சாறு பிழிந்து, தேன் சேர்த்துச் சாப்பிட்டால் தொடர் விக்கல் தீரும்.

3. ஒரு டம்ளர் தண்ணீரில் கருவேப்பிலை, இஞ்சி, சீரகம் ஆகிய மூன்றையும் கொதிக்க வைத்து ஆறவைத்து வடிகட்டி குடித்தால் அஜீரணம் சரியாகும்.

4. ஒரு துண்டு சுக்கை தோல் நீக்கி அரை லிட்டர் நீரில் போட்டு சுண்டக் காய்ச்சி, பால், சர்க்கரை சேர்த்துக் காலை, மாலை சாப்பிட்டு வந்தால் மூக்கடைப்பு விரைவில் நீங்கும்.

5. வெந்தயத்தை நெய்யில் வறுத்து பொடி செய்து மோரில் குடித்தால் வயிற்று வலி நீங்கும்.

6. வெள்ளை பூண்டை வெற்றிலை சேர்த்து மசிய அரைத்து தினமும் தோலில் தேய்த்து குளித்து வந்தால் தேமல் குணமாகும்.

7. எலுமிச்சம்பழச்சாறு, தேனில் கலந்து குடித்தால் வறட்டு இருமல் குணமாகும்.

8. தேங்காய் எண்ணையில் கற்பூரம் சேர்த்து நன்கு சுடவைத்து ஆற வைத்து நெஞ்சில் தடவினால் சளி குணமாகும்.

9. செம்பருத்தி இலைகளை பொடியாக்கி, தினமும் இருவேளை சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் தீரும்.

## முக சருமம் பொலிவாக மாறி அழகு தோற்றமளிக்க டிப்ஸ்:

**அழகு குறிப்பு**

**உங்கள் சரும அழகை ஆரோக்கியமான முறையில் அதிகரிக்க பயன்படும் பொருட்களில் ஒன்று ரோஸ் வாட்டர். இதில் அதிக சத்துக்கள் நிறைந்துள்ளதால் சரும பிரச்சனைகளை தீர்க்கிறது. அதுமட்டுமல்ல முடியின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.**

ரோஸ் வாட்டர் மூலம் அழகை அதிகரிக்கும் வழிமுறைகள்:-

1) தினமும் குளிக்கும் போது நீரில் சிறிது ரோஸ் வாட்டரை சேர்த்து கலந்து குளித்தால், சருமம் மென்மையாகவும், புத்துணர்ச்சியுடனும் இருக்கும்.





2) வறட்சியான சருமம் உள்ளவர்கள், ரோஸ் வாட்டரை சருமத்திற்கு பயன்படுத்தி வந்தால், சருமம் வறட்சியின்றி, மென்மையோடு அழகாக இருக்கும்.

3) ரோஸ் வாட்டர் உள்ள பாட்டிலை அரை மணிநேரம் குளிர்சாதன பெட்டியில் வைத்து, பின் அதனை காட்டனில் நனைத்து கண்களின் மேல் வைத்து சிறிது நேரம் ஊற வைத்தால், கண்களில் உள்ள வீக்கம் குறைந்து, கண்கள் அழகாக மாறும்.

4) இரவில் படுக்கும் போது ரோஸ் வாட்டரை காட்டனில் நனைத்து முகத்தை துடைத்து எடுத்தால் மேக்கப் நீங்குவதோடு சருமமும் மென்மையோடு இருக்கும்.

5) ரோஸ் வாட்டர் சருமத்தின் நிறத்தையும் அதிகரிக்க உதவும். இது சருமத்தில் உள்ள சுருக்கங்களைப் போக்கி, சருமத்தை இளமையாக வெளிக்காட்டும்.

6) பொதுவாக வெளியே சென்று வீட்டிற்கு வந்தவுடன் ரோஸ் வாட்டரை காட்டனில் நனைத்து, முகம் மற்றும் கழுத்தை துடைத்து எடுங்கள். இதனால் முகத்தில் அழுக்குகள் முற்றிலும் வெளியேறி, முகம் புத்துணர்ச்சியுடன் பொலிவோடு காணப்படும்.

7) கோடையில் முகம் விரைவில் சோர்ந்து, பொலிவிழந்து காணப்படும். அப்போது ரோஸ் வாட்டரை காட்டனில் நனைத்து முகத்தை துடைத்து எடுத்தால் முகம் உடனே புத்துணர்ச்சியுடன் காணப்படும்.

## டிசைன்ஸ்












**சிறுவர்களுக்கான குட்டிக் கதை**

### பாம்பும் விவசாயியும்



அந்தக் கிராமம் ஓர் அழகானது. மிகுந்த குளிர் காலம் நிலவியது. ஒரு நாள் பாம்பு ஒன்று பனியில் விறைத்து உயிர் போய்விடுமோ என்ற நிலையில் சுருண்டு கிடந்தது.

அந்த நேரத்தில் அவ்வழியே வந்த விவசாயி ஒருவன் அந்த பாம்பினைப் பார்த்தான். இரக்க குணமுள்ள அந்த விவசாயி அப்பாம்புக்கு உதவி செய்திட நினைத்தான்.

உடனே குனிந்து அப்பாம்பி-னைத் தூக்கி தன் மார்போடு அணைத்து அதனைச் சூடேற்றினான். விவசாயியின் உடல் சூடு பட்டதும் சற்று நேரத்தில் அப்பாம்பு பழைய நிலைக்கு மெல்ல மெல்ல உணர்வு பெற்றது.

அதற்கு நன்றாக உணர்வு வந்ததும் அது தன்னைக் காப்பாற்றிய விவசாயியை பலமாகக் கடித்துவிட்டது. கடித்ததும் விவசாயி கையை உதறியதும் பாம்பு கீழே விழுந்து ஓடிச்சென்றது. பாம்பின் நஞ்சு ஏறி உயிர் போகும் நிலையில் இருந்த அந்த விவசாயி தன் செய்கைக்காக வருந்தினான்.

பேசாமல் விட்டுவிட்டு போயிருக்கலாமே என தன்னை நொந்து கொண்டான். பின்னர் பாம்பைப் பார்த்து ஏய் நன்றி கெட்ட நாகமே! உன்னைக் காப்பாற்றிய என்னையையே கடித்து விட்டாயே!

உன் குணம் தெரிந்தும் நான் உனக்கு உதவி செய்தேன் அல்லவா? அதற்கு இது சரியான தண்டனை தான் என தன் ஆத்திரம் தீரும் மட்டும் திட்டித் தீர்த்தான்.

அவனுக்கு மயக்கம் வரத்தொடங்கியது. நடந்தவற்றை தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெரியவர் தக்க சமயத்தில் அவருக்கு மூளிகை மருந்தளித்து காப்பாற்றினார்.

**- பாத்திரமறிந்தே பிச்சை இடவேண்டும் -**


### ஒரு மழை நாள்

அன்று ஞாயிற்றுக்கிழமை. மாலைப் பொழுது நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த வேளை தீடீரென மழை பொழிய ஆரம்பித்தது. நாங்கள் விளையாட்டை இடைநிறுத்தி விட்டு ஓடிச்சென்று ஓரிடத்தில் ஒழிந்து கொண்டோம். மிகவும் மெல்லிய குளிர்மையான காற்றுடன் மழை விடாமல் பெய்து கொண்டிருந்தது. பறவைகள் மழையில் நனைந்த வண்ணம் தத்தம் இருப்பிடங்களை நோக்கி நகர்ந்தன. மிகவும் குளிர்மையான காற்று மேனியில் பட்டு குளிரை உணர்த்திற்று. சற்று நேரத்தில் எனது அம்மா பெரிய குடை ஒன்றுடன் வந்து எம்மை வீட்டிற்குள் அழைத்துச் சென்று சுடச்சுட பால்கோப்பி தந்தார். பருகிய ஒவ்வொரு முடக்கும் இதமாக இருந்தது.

*செல்வன். கே. நிமலேஷ்*

**சிந்திக்க .. ..**

**நீ சுமக்கின்ற நம்பிக்கை நீ கீழே விழும் போது : உன்னை சுமக்கும்!!**



*செல்வி. பி. ஜெயதீபா*
*32, மத்தியவீதி,*
*உவர்மலை, திருமலை.*



*செல்வி. ம. தனுசா,*
*4ம் குறுக்குத் தெரு,*
*திருமலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. மூவர் ஒரு குறித்த வேலையை செய்வதற்கு 6 நாட்கள் எடுக்கின்றன. அவர்களில் ஒருவர் 3 நாட்களுக்கு மாத்திரம் வேலைக்கு வராவிட்டால், அவர்கள் மூவரும் அவ்வேலையை செய்து முடிப்பதற்கு எடுக்கும் நாட்களின் மொத்த எண்ணிக்கை யாது?

02. A, B என்பன ஒன்றிலிருந்து ஒன்று 10செ.மீ தூரத்தில் இருக்கும் இரு புள்ளிகளாகும். கேத்திர கணித அறிவைப் பயன்படுத்தி

1. A யிலிருந்தும் Bயிலிருந்தும் சம தூரத்தில் இயங்குகின்ற ஒரு புள்ளியின் ஒழுக்கையும்

2. அவ்வொழுக்கின் மீது புள்ளி யுயிலிருந்து 7செ.மீ தூரத்தில் உள்ள P, Q எனும் இரு புள்ளிகளினதும் அமைவுகளைப் பெறும் விதத்தை உரிய அளவீடுகளுடன் ஒரு பரும்படிப் படத்தில் காட்டுக.

03. ஒரு மைய வட்டங்கள் இரண்டின் ஆரைகள் 5செமீ, 13செமீ ஆகும். சிறிய வட்டத்தை தொடுமாறு பெரிய வட்டத்தின் உள்ளே வரையத்தக்க நாணின் நீளம் யாது?

**பகுதி 02**

01. சங்கரன் ரூபா 75000த்தை எளிய வட்டிப்படி 15% ஆண்டுவட்டி வழங்கும் வங்கி ஒன்றில் சேமிப்பில் இடுகிறார்.

1. இரண்டு வருடத்தின் பின்னர் சங்கரனின் கணக்கில் வட்டியாக சேர்ந்திருக்கும் பணத்தொகை யாது?
2. அவர் 6 மாதத்திற்கு ஒருமுறை வட்டியை அவர் கணக்கில் இருந்து எடுப்பார். எனின், எவ்வளவு தொகையை எடுப்பார்?
3. சங்கரன் இரண்டு ஆண்டிற்கு இதே வட்டிவீதத்தில் கூட்டு வட்டியில் வைப்புச் செய்தால் எவ்வளவு பணம் கூடுதலாக சேர்க்கலாம்?
4. ரூபா P யை 15% எளிய வட்டிப்படி 2வருடம் சேமிப்பில் இட்டால், கிடைக்கும் மொத்தத் தொகை 13P/ 10 எனக் காட்டுக.
5. மேலே உள்ள சமன்பாட்டில் பிரதியிடுவதன் மூலம் ரூபா 65000த்தை வைப்பிலிட்டால் கிடைக்கும் மொத்தத் தொகையைக் காண்க

## பாடம் : வரலாறு

01. 1ம் விஜயபாகு மன்னனை இலங்கையின் மிகச்சிறந் மன்னனாக கொள்வதற்கான காரணம்?

1. அழிவடைந்திருந்த சமயத்தலங்களை புனரமைத்து பராமரித்தமையினாலாகும்
2. பழம் வாய்ந்த சோழ நிர்வாகத்திடமிருந்து இராஜரட்டை பிரதேசத்தை விடுவித்துக் கொண்டு சுய ஆட்சியை உருவாக்கியமையினாலாகும்
3. அண்டை இராச்சியமாகிய இந்தியாவுடன் நட்புறவான கொள்கையினை பின்பற்றியமையினாலாகும்.
4. அதுவரை செயலாற்றி இருந்த பெரும்பாலான நீர்ப்பாசன அமைப்புகளைச் சீர்திருத்தம் செய்தமையினாலாகும்

02. இலங்கையில் அமைந்துள்ள பொலநறுவை இராசதானிக்கு ஜனநாபுரம் எனப் பெயர் சூட்டியோர் யார்?

1. சோழர் 2. சேரர் 3. பாண்டியர் 4. நாயக்கர்

03. அமெரிக்காவின் இரு கண்டங்களிலும் 16ம் நூற்றாண்டில் மிகக் கூடிய குடியேற்றங்களை அமைத்த ஐரோப்பிய தேசம்?

1. ஸ்பானியா 2. பிரான்ஸ் 3. போர்த்துக்கல் 4. ஒல்லாந்து

04. மக்கள் நேரடியாக சட்டமியற்றும் நடவடிக்கையில் பங்குபற்றும் சந்தர்ப்பத்தைக் காணமுடிவது

1. பொதுத் தேர்தல் ஒன்றின் போது
2. மாகாண சபைத் தேர்தலொன்றின் போது
3. பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பின் போது
4. பிரதேச சபை வாக்கெடுப்பின் போது

05. மேல்வரும் அரசியல் சீர்திருத்தங்களில் எது இலங்கையில் ஒரு மத்தியதரை வகுப்பு எழிச்சி பெறுவதற்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்கியது?

1. 1833 கோல்புறுக்கமரன் 2. 1910 குறூம்க்கலம்
3. 1920 மானிங் 4. 1931 டொனமூர்

## பாடம் : விஞ்ஞானம்

01. பின்வரும் கைத்தொழில்களை கருதுக.
அ. பேக்கரி தொழில்
ஆ. நுண்ணுயிர் கொல்லிகளை உற்பத்தி செய்தல்
இ. யோகட் உற்பத்தி செய்தல்
இவற்றில் பங்கசு பயன்படுவது?

1. அ, ஆ வில் மாத்திரம் 2. அ, இ யிலும் மாத்திரம்
3. ஆ, இ யிலும் மாத்திரம் 4. மூன்றிலும்

02. தன் வெப்பக் கொள்ளளவு வேறுபட்ட திரவியங்களினால் ஆக்கப்பட்ட சமதிணிவுகளைக் கொண்ட இரு பொருட்களுக்குச் சம அளவு வெப்பம் வழங்கப்படுகின்றது. அப்பொருள்கள் அடையும் இறுதி வெப்பநிலை பற்றிய பின்வரும் கூற்றுக்களில் உண்மையானது யாது?

1. கூடிய தன்வெப்பக் கொள்ளளவு உடைய திரவியத்தினாலான பொருளின் வெப்பநிலை மிக உயர்ந்த பெறுமானத்தை எடுக்கும்
2. குறைந்த தன் வெப்பக் கொள்ளளவு உடைய திரவியத்தினாலான பொருளின் வெப்பநிலை மிக உயர்ந்த பெறுமானத்தை எடுக்கும்
3. இரு பொருள்களினதும் இறுதி வெப்பநிலைகள் சமம்
4. பொருள்களின் கனவளவுகளை அறியாமல் ஒன்றும் கூற முடியாது

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

மரபுத்தொடர்கள்.

**சொற்கள் சேர்ந்து நின்று தமக்குரிய நேர்பொருளை உணர்த்தாமல் குறிப்பான வேறு ஒரு பொருளை உணர்த்திவருவது இலக்கணத்தொடர் எனப்படும். அத்தகைய குறிப்புப் பொருள் பரம்பரை பரம்பரையாக மக்கள் மத்தியில் வழங்கி வருவதலால் அதனை மரபுத்தொடர் என்றும் கூறுவதும் வழக்கம்.**

95.காலூன்றுதல் - நிலைத்திருத்தல்
96.காற்றாய் பறத்தல் - விரைந்து செல்லுதல்
97.குட்டிச் சுவராகுதல் - கெட்ழிந்து போதல்
98.குடிமுழுகிப் போதல் - முற்றாய் அழிதல்
100.கை கண்ட மருந்து - சிறந்த வழி
101.கொள்ளி செருகுதல் - கேடு செய்தல்
102.கொள்ளை கொள்ளுதல் - உள்ளத்தை பெரிதும் கவருதல்
103.கொடுக்கு கட்டுதல் - குறித்த விடயத்தை செய்ய முனைந்து நிற்றல்
104.சந்திக்கு இழுத்தல் - ஒருவரது குற்றங் குறைகளை பகிரங்கப்படுத்தல்
105.சந்தியில் நிற்றல் - ஆதரவின்றி நிற்றல்
106.சிறகுக் கட்டிப் பறத்தல் - கற்பனை செய்தல்
107.சிட்டாய்ப் பறத்தல் - விரைந்தோடிப் போகுதல்
108.சீட்டுக் கிழித்தல் - வேலையிலிருந்து நீக்குதல்
109.துண்டு விழுதல் - பற்றாக் குறை ஏற்படுதல்
110.தூண்டில் போடுதல் - தன்வயப்படுத்தல்
111.தோப்புக் கரணம் போடுதல் - சொன்னபடியெல்லாம் செய்தல்
112.பம்பரமாட்டுதல் - அலைக்கழித்தல்
113.பிஞ்சிற் பழுத்தல் - வயதுக்கு மீறிய செயற்பாடு
114.புண்படுதல் - மனம் நோகப் பேசுதல்
115.பூசி மெழுகுதல் - குற்றத்தை மறைத்தல்
116.பொடி வைத்தல் - தந்திரமாக பேசுதல்



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

**Complete the following dialogue selecting the most suitable words from the boxes.**

1. The sea is deep here beware of big waves........................................
2. Yala Sanctuary ........................................ reduce speed now.
3. Sinharaja rain forest our heritage ........................................
4. Mahaweli our life blood ........................................
5. Public library ........................................ switch off mobile phones.
6. Central park ........................................ they look prettier on trees.

a. Do not pick flowers d. Keep the river clean
b. Leave only your foot prints. e Elephant crossing ahead

03. பழங்களுக்கு விசிறி வெட்டுப்படை உண்டாவது தாமதப்படுத்தப்படுவதன் மூலம் பழுப்பதைத் தாமதப்படுத்தும் ஓமோன் எது?

1. IAA 2. NAA 3. 2,4-D 4. BST

04. நிலை மின்னேற்றங்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருதுக
அ. பெற்றோல் பவுசர்களில் நிலை மின்னேற்றங்கள் திரள்வதை தடுப்பதற்கு பவுசர்கள் உலோகச் சங்கிலியினால் புவியில் தொடுக்கப்பட்டிருக்கும்

ஆ. நீர் மின்னை உற்பத்தி செய்யும் போது நீரிலுள்ள நிலைமின்னேற்றங்கள் டைனமோவினால் ஓட்ட மின்னாக மாற்றப்படும்

இ. மின்னலின் போது முகிலிலுள்ள நிலைமின்னேற்றங்கள் புவியுடன் அல்லது வேறொரு முகிலுடன் மின்னிறக்கத்தை உண்டாக்கும்
மேற்குறித்த கூற்றுக்களுள் உண்மையானது யாது?

1. அ, ஆ ஆகியன 2. அ, இ ஆகியன
3. ஆ, இ ஆகியன 4. அ, ஆ, இ எல்லாம்

05. சுற்றாடலில் உள்ள இறந்த சேதனப் பொருட்களை பிரிகையுறச் செய்யும் அங்கிகளுக்கு வழங்கும் பெயர்

1. தாவர உண்ணிகள் 2. ஒட்டுண்ணிகள்
3. உற்பத்தியாக்கிகள் 4. பிரிகையாக்கிகள்

06. கடற்கரைப் பிரதேசத்தில் காணப்படும் ஒரு தாவரம் எது?

1. இரைசே போரா 2. ஐப்போமியா பைலேரியா
3. ஐக்கோணியா 4 நெலும்பியம்

07. உட்சியாட்சி எனும் தோற்ப்ட்டை துணையாகக்கொண்டு

1. சிறந்த புதர்வேலி ஒன்றை அமைத்துக் கொள்ளலாம்
2. மிக உயரமான தாவரம் ஒன்றை ஆக்கிக் கொள்ளலாம்
3. காய்த்தலை விரைவு படுத்திக் கொள்ளலாம்
4. பெருமளவுக்கு தாய்த்தாவரத்தை ஒத்த சில தாவரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனல் மின்...

தெரிவித்தார்.

அவரது ஆதரவாளர்களால் முன்னெடுக்கப்பட்ட வெற்றிக் கொண்டாட்டங்களின் பின் ஊடகங்களுக்கு கருத்தைத் தெரிவித்த அவர் "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பதை நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றன. தேர்தலின் முன்னர் சில சக்திகள் மக்களை குழப்பும் வகையில் பிரசாரங்களை மேற்கொண்டிருந்தன. இதனால், மக்கள் மத்தியில் குழப்பமான நிலை ஏற்பட்டிருந்தது. இதனால், எமது வெற்றியும் தடுக்கப்பட்டது. இருந்தபோதிலும், பெரும்பாலான மக்கள் எம்மை ஆதரித்துள்ளனர்.

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருப்பது போன்று உடனடியாக அரசியல் தீர்வு சம்பந்தமாகவும் மக்களின் உடனடித் தேவைகள் சம்பந்தமாகவும் நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்கள் சம்பந்தமாகவும் தாமதம் இல்லாமல் நாம் செய்யவுள்ளோம்.

ஆட்சி அமைப்பைப் பொறுத்த - வரையில் எமது நிலைப்பாடானது, கடந்த ஜனவரி மாதம் எட்டாம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த மக்களினால் முன்னாள் ஜனாதிபதியை நீக்கவும் புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கும் இந்த நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கும் புதிய ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை வழங்கியிருந்தனர். இந்த ஆணை தொடர வேண்டும். இனி அமைக்கப்படும் அரசாங்கம் அந்த ஆணையை நிறைவேற்றத்தக்கவாறு செயற்பட வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம்" எனத் தெரிவித்துள்ளார்

## சம்பூருக்கு...

ருக்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதியுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோரும் வருகை தரவுள்ளனர்.

சம்பூர் பத்திரகாளியம்மன் ஆலய முன்றலில் சம்பிரதாயபூர்வமாக சனிக்கிழமை மாலை சம்பூர் மக்களுக்கான காணி உறுதிப்பத்திர கையளிப்பு வைபவம் இடம்பெறவுள்ளது.

2006ஆம் ஆண்டு சம்பூர் மக்கள் குடி பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்ந்து வந்த நிலையில் சம்பூரில் உள்ள 818 ஏக்கர் காணிகளும் முதலீட்டு வலயத்துக்கென வர்த்தமானி பிரசுரத்தின் மூலம் சுவீகரிக்கப்பட்டதுடன் இன்னுமொரு வர்த்தமானி அறிவித்தல் மூலம் கேற்வே என்ற பல்தேசியக் கம்பனிக்கு பொருளாதார வர்த்தக வலய அபிவிருத்திக்கென முன்னாள் ஜனாதிபதி மஹிந்த 2012ஆம் ஆண்டு வர்த்தமானி பிரகடனமொன்றை செய்திருந்தார். இதற்கு எதிராக சம்பூர் மக்கள் ஏழு பேரினால் உயர் நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. புதிய ஆட்சி மாற்றம் காரணமாக, கடந்த ஆடி மாதம் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதைத் தொடர்ந்து சம்பூர் மக்களின் மீள் குடியேற்றம் உறுதி செய்யப்பட்டது.

பொதுத் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து சம்பூர் மீள்குடியேற்றத்தை உத்தியோகபூர்வமாக இன்று சனிக்கிழமை ஆரம்பித்து வைப்பதற்கென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சம்பூருக்கு வருகை தரவுள்ளார்.

## தனித்தேசம்....

இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டமை தெரிந்ததே.

ஒரு நாடு இரு தேசம் என்ற கொள்கையானது தமிழ் மக்களிடையே பரவி அத் தீர்வின் சாத்தியப்பாடுகள் தொடர்பான விவாதங்கள் ஆங்காங்கே நடைபெற ஆரம்பித்துள்ள நிலையிலேயே பிரதமரின் இவ்வறிவிப்பு வெளியாகியுள்ளது.

இலங்கைக்குள் வேறு தேசத்தை உருவாக்குவதற்கோ அல்லது அதற்காக முயற்சிக்கும் எந்தவொரு சக்திக்கும் இடமளிக்கப்போவதில்லை என த் தனது சத்தியப்பிரமாணக் கடிதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் வாசிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார்.

தமிழ்மக்களின் தீர்வுக்காக முன்வைக்கப்பட்ட "இரு தேசம் ஒரு நாடு" என்ற தீர்வை மறுதலித்தள்ள அதேவேளை தமிழ்த் தெசியக் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்டிருந்த சமஷ்டி என்ற தீர்வையும் தாம் வழங்கப் போவதில்லை என முன்னரே ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தமது தேர்தல் பரப்புரைகளில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 6 கோடி....

முடியவில்லை.

இம்முறை தேர்தலில் பெருமளவில் மதுப் போத்தல்களும் அபிவிருத்தி நிதி என்ற பெயரில் பெருமளவு பணமும் தமிழ்க் கட்சிகளால் வழங்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. விளையாட்டுக் கழகங்களுக்கும், கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கும் நிதி வழங்கப்பட்டுள்ளதுடன் கோவில்களுக்கும், தேவாலயங்களுக்கும் நிதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தேர்தல் பிரச்சாரமானது கடந்த 15ம் திகதியுடன் நிறைவடைந்த போதும் தனிப்பட்ட பயணங்கள் என்ற போர்வையில் தமிழ் வேட்பாளர்கள் கோவில்களுக்கும் தேவாலயங்களுக்கும் வருகை தந்து அவற்றிற்கு தெர்தலின் பின்னர் மூன்று தொடக்கம் ஐந்து லட்சங்கள் வரை நிதி வழங்க உறுதியளித்ததும் தெரியவந்துள்ளது.

## விகாரைக்கு...

தோப்பூர் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விவசாய அமைப்புக்கள், சமூக நலன்புரி அமைப்புக்கள் ஆகியவை இணைந்து முன்னெடுத்திருந்திருந்தன.

சேருவில விகாரைக்கு சுவிகரிப்பு செய்வதற்காக அளவை மேற்கொள்ளப்பட்ட இந்த ஆயிரம் ஏக்கர் காணிக்கான உறுதிப்பத்திரங்கள் காணப்படுவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.

இந்தக் காணி விடயத்தில் நிரந்தர தீர்வு எட்டப்படாதுவிடின், இதுபோன்ற எதிர்ப்பு தொடர்ந்து வெளிப்படுத்தப் - படும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கூறினர்.

தங்க்ளின் பரம்பரைக் காணிகளை மீட்டுத்தருவதற்கான முயற்சிகளை உரிய அரசியல்வாதிகள் மேற்கொள்ள வேண்டும் என்று காணிச் சொந்தக்காரர்கள் தெரிவித்தனர்.

"முஸ்லிம்களின் காணிகளை சுவீகரிக்காதே, நல்லாட்சிக்கு பங்கம் விளைவிக்காதே", போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு மக்கள் ஆரப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## தமிழ் மக்கள்....

இரா.ஸ்ரீஞானேஸ்வரன் ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் மாற்றத்தை ஆதரித்து வாக்களித்திருப்பதுடன் அவ்வாறு வாக்களித்த மக்கள் தமிழர்களுக்கான தீர்வாகத் தனித்தமிழ்த் தேசமொன்றைப் பெறுவதே சிறந்தது என்பதை ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

"எமக்கு எதிராகக் கடுமையான சேறுபூசும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மஹிந்த ராசபக்சவிடம், ரணிலிடம் பணம் பெற்றுக்கொண்டே தேர்தலில் குதித்தாக பொய் வதந்திகள் பரப்பப்பட்டன.

ஆனால் அறிவுநிறை மக்கள் அதனை ஆய்ந்து அத்தகவல்களைப் பொய்யென அறிந்து கொண்டார்கள். நாம் தமிழர்களுக்காகக் கேட்பது தனித்தமிழ்த் தேசம். அதனை அடைந்து கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் பல வாய்ப்புக்களாக எம்மிடம் வந்து செல்கின்றன.

இந்த அரிய வாய்ப்புக்களைப் பற்றிக்கொண்டு தனித் தமிழ்த் தேசத்தை அடைவதற்கு வழிகோலும் அரசியல் தலைமையாகவே தாம் இருக்கப் போவதாக அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கைகளையும் இறுதித் தீர்வையும் தமிழ் மக்கள் முற்று முழுதாகத் தெரிந்து கொள்ளவில்லை என்பதனையே தற்போதைய தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

எனவே தமது கட்சியின் கருத்துக்களைக் கிராமங்கள் தோறும் எடுத்துச் செல்லும் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கப் போவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## விருப்பு வாக்கை...

துரைரெட்ணசிங்கம் இரண்டாம் இடத்திலும், 12,788 வாக்குகளைப் பெற்றுக்கொண்ட சரா புவனேஸ்வரன் மூன்றாம் இடத்திலும் நிலைப்படுத்தப் பட்டுள்ள நிலையில் துரைரெட்ணசிங்கத்தினை....

விட தமக்கே அதிகளவான விருப்பு வாக்குகள் கிடைத்திருக்க வேண்டும் என்ற உறுதியில் விருப்பு - வாக்குகளை மீள எண்ணுமாறு சரா புவனேஸ்வரன் வேண்டுகோள் விடுத்திருந்தார். எனினும் இவ் வேண்டுகோளை கட்சித்தலைவர் சம்பந்தன் மறுத்துவிட்டதாகத் தெரிகின்றது.

மூதூர் மற்றும் சேருவிலைத் தொகுதி வாக்குகள் எண்ணப்பட்ட போது தமிழத் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகளில் கூடியளவு விருப்புவாக்குகளைச் சராபுவனேஸ்வரனே பெற்றிருந்ததாக வாக்கெண்ணும் நிலையத்திலிருந்து நம்பத்தகு தகவல்கள் வெளியாகியிருந்ததாக சரா புவனேஸ்வரனின் ஆதரவாளர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்திருந்தனர்.

எனினும் திருகோணமலைத் தேர்தல் தொகுதிக்கான வாக்குகள் எண்ணப்பட்ட போதே விருப்பு வாக்ககளின் அடிப்படையில் சரா மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டிருந்தார் என்றும் அந்த ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

## சுயநிர்ணயத்துடன்...

வாழ்க்கைக்கு அடையாளம் கொடுப்பது நாங்கள் மனிதர்கள் மட்டுமல்ல எமக்கு என்று அடையாளம் இருக்கிறது அவை பாதுக்காக படவேண்டும்

அதை விரும்புவது தீவிரவாதம் அல்ல எந்த ஒரு கட்டத்திலும் நாங்கள் வேறு இனத்தின் அடையாளத்தை அழிக்கவோ அவை தம்முடைய அடையாளத்தை முன்னிறுத்தி தமது கலாச்சாரத்தை வளர்த்து கொள்வதற்கு நாங்கள் ஒரு போதும் எதிர்க்க போவதில்லை

அவர்கள் எந்த வகையில் தம்முடைய கலாசாரங்களை அடையாளங்களை வளர்த்து கொள்கின்றார்களோ அதே வகையிலே எங்களுடைய காலாச்சார அடையாளங்கள் பாதுக்காக்க பட வேண்டும்

இன்றைக்கு இங்கே நடைபெற்று கொண்டு இருப்பது தமிழின அழிப்பு என்பதில் எமக்கு எந்தவிதமான சந்தேகமும் கிடையாது அந்த தமிழ் தேசத்தை பாதுக்காக வேண்டும் என்ற ஒரே நோக்கமே எம்முடையது

எந்த விதத்திலும் தமிழ் தேசத்தின் நலன்கள் பாதிப்படையாத வகையிலே தமிழ் தேசிய கூட்டமைப்பு சுயநிர்ணய அடிப்படையில் தேசம் அங்கீகரிக்கப்பட கூடிய சம்'டி தீர்வை எட்டுவதற்கு எடுக்கும் எந்த முயற்சிக்கும் எங்களுடைய ஒத்துழைப்பு அவர்களுக்கு இருக்கும்

அதேவேளை நடைபெற்ற இனப்படுகொலைக்கு நீதியான சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் விசாரணை நடத்தப்பட வேண்டும் இந்த விடயம் பேரம் பேசுவதற்கு அப்பாற்பட்ட விடயம் இந்த விடயங்களை ஏற்று கொள்ளும் எந்த ஒரு தரப்போடும் நாங்கள் ஒத்துழைக்க தயார் அது கூட்டமைப்பாக இருந்தாலும் எமது ஒத்துழைப்பு இருக்கும்.

எமது நிலைப்பாடு விட்டு கொடுக்க முடியாத நிலைப்பாடு ஏனெனில் அது எமது தேசத்தின் இருப்போட சம்பந்தப்பட்ட நிலைப்பாடு அந்த நிலைப்பாட்டு உடன் எந்த தரப்பும் ஒத்துழைக்க தயாராக இல்லை என்பதனாலையே நாம் எமது அமைப்ப உருவாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது

இந்த நிலைப்பாட்டை ஏற்க தயார் என எந்த தரப்பினராவது இணங்கினால் நாம் அவர்களுடன் சேர்ந்து இயங்க தயாராக இருக்கின்றோம்

கொள்கை ரீதியாக எமக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றசாட்டுகளை நாங்கள் ஏற்க தயாரில்லை. எமது கொள்கை விடயங்கள் சரியான விதத்தில் மக்கள் மத்தியில் சென்றடையவில்லை என்ற குற்றசாட்டை முன்வைத்தால் அதனை ஏற்க தயார். செயற்பாட்டு ரீதியாக நாம் மக்கள் மத்தியில் சென்றடைய வில்லை என்றால் அதனை ஏற்று கொள்கின்றோம் அதேவேளை எங்களுடைய கருத்துகள் மக்கள் மத்தியில் போய் சேர பல சாவல்கள் இருந்தன.

நாங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பை விட்டு விலக காரணம் கொள்கை. அந்த கொள்கையைக் கைவிட நாம் எப்போதும் தயாரில்லை என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வருடாந்த உற்சவம்

கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு, இருதயபுரம் அருள்மிகு ஸ்ரீகுமாரத்தன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

மிகவும் பண்டைய ஆலயங்களுல் ஒன்றாக காணப்படும் இந்த முருகன் ஆலயம் வேடுவர்களினால் பண்டைய காலத்தில் வழிபட்டதாக வரலாறுகள் கூறுகின்றன.

பத்து தினங்கள் நடைபெறவுள்ள ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் தினமும் ஸ்தம்ப பூஜை,வசந்த மண்டபபூஜை,சுவாமி உள்வீதியுலா, வெளிவீதியுலா என்பன நடைபெறவுள்ளது.






## கவிதை நூல் வெளியீடு

செந்தணல் வெளியீட்டகத்தின் 13வது வெளியீடான கவிச்சுடர் சிவரமணியின் "தொடுவானின் சிதறல்கள்" கவிதைநூல் 15.08.2015 அன்று திருகோணமலை நகரின் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய சோமஸ்கந்தா மண்டபத்தில் பி.ப 3.00 மணிக்கு வெளியீட்டு நிகழ்வுகள் தமிழருவி சிவகுமாரன் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

திருமலை ரேணு கமல நடனாலய மாணவிகளின் வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமான நிகழ்வில் வரவேற்புரையினை செல்வி அகிலா தனபாலசிங்கம் நிகழ்த்தினார்.



வெளியீட்டுரையினை செந்தணல் வெளியீட்டகம் மற்றும் பதிப்பக இயக்குனர் "வன்னியூர் செந்தூரன்" நிகழ்த்தினார். படைப்பாளிகள் உலகம் சார்பில் சங்கீதா உரையாற்றினார். நூலினை சிவஸ்ரீ ரவிச்சந்திரக்குருக்கள் வெளியிட்டு வைக்க திரு, திருமதி சிவஞானராஜ் சுகந்தி தம்பதியினர் பெற்றுக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து ஏற்புரையினை நூலாசிரியர் கவிச்சுடர் சிவரமணி அவர்கள் நிகழ்த்தினார். தாயத்தேசக் கலைஞர்கள் அமைப்பினர், மற்றும்படைப்பாளிகள் உலக அமைப்பினரின் ஒத்துழைப்புடனும் நிகழ்வு சிறப்புற நடைபெற்றது.



( கீதாஞ்சலி )

## தேடி வரும் உறவு

பொன்னம்மாள் தன் கடைசி நாட்களை எண்ணிக் கொண்டிருந்தாள். பத்துப் பிள்ளைகளைப் பெற்றெடுத்த அந்த மகராசிக்கு, வாழ்நாளின் கடைசி நாட்களில் தன்னை கவனித்துக் கொள்ள யாருமில்லாத அநாதையாகப் படுத்த .படுக்கையில் கிடந்த வண்ணம் புலம்பிக் கொண்டிருந்தாள். கணவர் இறந்த பிறகு அவள் தனி மரமானாள். கணவர் உயிரோடிருக்கும் வரை பெற்ற பிள்ளைகள் வீட்டிற்கு வந்து போனார்கள். கணவர் இறந்த பிறகு எந்தப் பிள்ளைக்கும் தன்னுடைய தாயை உடன் வைத்திருக்க மனம் வரவில்லை.

கடந்த பத்து நாட்களாக உடல்நலமில்லாமல் படுக்கையில் படுத்துவிட்டாள். டாக்டர் ஒருவர் தினமும் வந்து சிகிச்சையளித்து சென்றார். அவளுடைய சிந்தனையில் தன்னுடைய மக்கள் பக்கத்தில் இல்லாமலிருக்கும் போது, தன்னுடைய உயிர் பிரிந்து விடுமோ என்ற அச்சம் தோன்ற ஆரம்பித்தது. அவளையறியாமலே கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாக வழிந்தோடின.

கடந்த கால வாழ்க்கையின் அத்தியாயங்கள் அவளுடைய நினைவில் வந்து போயின.

பொன்னம்மாள் கணவர் மேலப்பட்டி மிராசு மீனாட்சி சுந்தரம் பெயர் சொன்னால், அப்பகுதி மக்கள் முதல்மரியாதை செலுத்த முந்திக்கொண்டு வருவார்கள். அக்கிராமத்தில் உள்ள தஞ்சை புஞ்சை நிலங்கள், தோட்டத்துரவுகள் முக்கால்வாசி மிராசுக்கு பாத்யதையாக இருந்தது. மிராசு நல்லவர் இனியவர். அதர்மத்துக்கு துணை போகாதவர். கிராமத்திலிருந்து எந்த வழக்கும் காவல் துறைக்கோ, நீதிமன்றத்துக்கோ செல்லாது. மிராசு வழங்கும் தீர்ப்பை அந்தக் கிராம மக்கள் நீதிதேவனின் தீர்ப்பாக ஏற்றுக் கொள்வார்கள்.

மூதாதையர் விட்டுச்சென்ற சொத்துக்களின் பேரில் புதுப்பட்டி மிராசுக்கும், மேலப்பட்டி மிராசுக்கும் ஏற்பட்ட வழக்கு உச்சநீதிமன்றம் வரையில் சென்று முடிவடையாமல் நீண்டு கொண்டே சென்று கொண்டிருந்தது. வழக்கு தொடர்பாக மேலப்பட்டி மிராசின் சொத்துக்கள் கரையத் தொடங்கியது. இறுதியில் பிறந்த ஊரைவிட்டு வெளியேறி, வைகை கரையோரம் அமைந்துள்ள மானாமதுரையில் சொந்த வீடு வாங்கி குடும்பத்துடன் குடியேறினார்.

மீனாட்சிசுந்தரம்-பொன்னம்மாள் தம்பதியருக்கு பத்து பிள்ளைகள். பத்தாவது பிள்ளைக்கு பாக்யவான் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர். ஐந்து ஆண்மக்களும், ஐந்து பெண்மக்களும் அவர்களிடையே உலாவந்தனர்.

எல்லா குழந்தை களுக்கும் கல்விச் செல்வத்தை உரிய முறையில் தந்து பெரியவர்களாக்கினார்கள். ஆண் மக்களுக்கும், பெண் மக்களுக்கும் சம்பந்தம் பேசி, அவர்களை சீரும் சிறப்புமான வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தார்கள். திருமணங்கள். முடிந்த பிறகு, அவரவர்கள் தனிக்குடித்தனமும் சென்று விட்டனர். தங்களை வளர்த்து ஆளாக்கி, வாழ்க்கையில் ஏற்றத்தை தந்த தாய்-தந்தையரை எந்தப் பிள்ளையும் தேடவில்லை. எல்லோருக்கும் தனது பொறுப்பை முடித்த நிம்மதியில் மீனாட்சி சுந்தரம் கண்மூடினார்.

தன் கைகால் சுகத்துடன் இருக்கும் வரையில், தான் பெற்ற பிள்ளைகள் தன்னைத் தேடி வராதது பற்றி சிறிது கூட கவலை பொன்னம்மாள் உள்ளத்தில் தோன்றவில்லை. ஆனால் இப்போது-

அவள் உள்ளத்தில் பாசத்தின் பிணைப்பு வளையமாக பின்னிக் கொண்டிருந்தது. அந்த வளையத்திற்குள் அகப்பட்டு திக்குமுக்காடிக் கொண்டிருந்தாள்.

ஆண் மக்களோ தங்கள் மனைவிமார்களை எதிர்த்து பெற்ற தாயைப் பேணிக்காக்க தங்களுடனே வைத்திருக்க துணிவில்லை. பெண் மக்கள் தங்களின் கணவர்மார்களை எதிர்த்து, தங்களின் இல்லங்களில் பொன்னம்மாளை அந்திமக்காலத்தில் காப்பாற்ற அவர்களும் எண்ணவில்லை. நான் மட்டும் தான் பிள்ளையா? மற்றவர்கள் பிள்ளையாகப் பிறக்கவில்லையா? என்று ஒருவருக்கொருவர் கேள்விகள் கேட்டுக் கொண்டனர். பொன்னம்மாளைத் தேடவில்லை.

பொன்னம்மாள் தனது கணவன் வாங்கிய வீட்டின் ஒரு பகுதியிலிருந்து வரும் வாடகைப் பணத்தில் தன்னுடைய ஜீவனை நகர்த்திக் கொண்டிருந்தாள். அவளிடம் தங்க நகைகளோ, ரொக்கப் பணமோ இல்லை. பத்துப் பிள்ளைகளைப் பெற்றெடுத்த அந்த மாபெரும் இந்தியத்தாய் பொன்னம்மாளின் கதியைப் பற்றி அந்த தெருவில் பேசாதவர்கள் இல்லை.

ஒருநாள்-

பொன்னம்மாள் மயக்கமுற்ற நிலையில் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் எல்லா பிள்ளைகளுக்கும் தகவல் தெரிவித்ததின் பேரில் எல்லாருமே குடும்பத்துடன் கார்களிலும், வேன்களிலும் வந்து கூடினார்கள். அந்தப் பெரிய கும்பல் பொன்னம்மாளுக்கு ஆறுதல் தரவில்லை. அவர்களும் பறந்து, பறந்து பணிவிடைகள் செய்யவில்லை.

உடல் நலமின்றிக் கிடந்த பொன்னம்மாள் மயக்கம் தெளிந்து எழுந்து உட்கார்ந்தாள். எந்தப் பிள்ளைகளைப் பாலூட்டி வளர்த்து ஆளாக்கினாளோ, அந்தப் பிள்ளைகள் குடும்பத்துடன் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். வெளியேறிச் சென்றவர்கள், அவளது படுக்கையின் மீது ஐம்பது, நூறு 'ரூபாய் நோட்டுக்களை இட்டுச் சென்றனர். இதுதான் அவர்களின் நன்றிக் கடன்! இதன் மூலம் பிள்ளைகளின் பாசத்தின் விலையை பொன்னம்மாள் நன்றாகப் புரிந்து கொண்டாள்.

எதற்கும் கலங்காத அவள் அன்று சற்று அதிகமாகவே சித்தம் தடுமாறினாள். கண்களிலிருந்து அவளையுமறியாமல் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. எந்தப் பிள்ளைக்கும் தொந்தரவு கொடுக்காமல் திடீரென்று இறைவனடி சேர தோத்திரங்கள் செய்ய ஆரம்பித்தாள். ஆனால் இறுதிநாளுக்கு இன்னும் நாட்கள் இருப்பது போல, பொன்னம்மாள் எழுந்து உட்கார்ந்து விட்டாள்.

அவசரப்பட்டு தகவல் கொடுத்து விட்டதால் பிள்ளைகளோடு வந்து, இங்கு பலநாட்கள் தங்க எங்களுக்கு தோதில்லையென்று அண்டை வீட்டுக்காரர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தது அவளது இதயத்தில் பல சம்மட்டிகள் ஒன்றாகச் சேர்ந்து அடித்தது போன்ற உணர்வினைப் பெற்று, அவள் இதயம் கனத்தது.

தான் உயிரோடிருக்கும் போது வந்து பார்க்காத மக்கள், இறந்தபிறகு ஊர்மெச்ச சம்பிரதாய சடங்குகள் செய்வதற்கு வந்தாலென்ன

## குட்டிக் கதை

வராவிட்டாலென்ன என்று அவளது உள்ளுணர்வுகள் அவளது சித்தத்திற்கு சோதனை செய்தன.

"வயதோ அதிகம் ஆகிவிட்டது. இனிமேல் உயிரோடிருந்து எந்தக் கோட்டையைப் பிடிக்க! பிள்ளைகளைக் கரையேத்தியாச்சு, அவரும் போயிட்டாரு பெற்ற பிள்ளைகள் யாரும் தன்னுடனே வைத்து அந்திமகாலத்தை பார்க்கப் பிரியப்படலே இனிமேல் இது இழுத்துக்கிட்டு கிடக்கிறது பெரிய பாவம்" தெருவில் உள்ளவரில் ஒருவர் முணுமுணுத்தார்.

"அட என்னய்யா! நீ பாட்டுக்கு பேசறே அந்த அம்மாளுக்கு சீக்கிரம் மேலே போய்ச் சேரணும்தான் ஆசை! சாவை எதிர் பார்த்தா வராது எதிர்பாராம இருந்தா திடீர்னு சாவு வந்து அணைச்சிடும்" எதிர்வீட்டுக்காரர் அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பொன்னம்மாளுக்கு உயிர் உடனே போகவேண்டுமென ஏக்கப் பெருமூச்சு விட்டாள்.

அன்று காலைப்பொழுது நல்ல பொழுதாக விடிந்து அவளைத் தேடி அட்வகேட் ஒருவர் க[illegible] வந்திறங்கினார்.

"அம்மா! உங்கள் கணவர் தொடர்ந்த வழக்கு உங்களுக்கு அனுகூலமாகி விட்டது. வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்துக்களின் தற்போதைய மதிப்பு சுமார் ஐம்பது லட்சங்கள் பெறும். அதற்கான பத்திரங்கள் இந்தாருங்கள்." அட்வகேட் மகிழ்ச்சி பொங்க கூறினார்.

இதைக் கேட்ட பொன்னம்மாளின் இதயம் படபடத்தது. செய்வதறியாது திகைத்து உட்கார்ந்து விட்டாள்.

இரண்டு நாட்களில் செய்தியறிந்து பத்துப்பிள்ளைகளும் குடும்பத்துடன் வந்து பொன்னம்மாளைச் சுற்றி உட்கார்ந்து நலம் விசாரிக்கத் தொடங்கினர். தங்களுக்கு சேரவேண்டிய பங்குத் தொகையை யாரும் அபகரித்து விடாமலிருக்க அங்கேயே மாதக்கணக்கில் தங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்




## மெய்வல்லுநர் சம்பியன் சுற்றுப் போட்டி

இவ்வாண்டுக்கான வர்த்தக மெய்வல்லுநர் சம்பியன்ிப் போட்டிகள், நாளையும் நாளை மறுதினதும், பியகமவிலுள்ள மஹிந்த ராஜபக்' விளையாட்டுத் தொகுதியில் இடம்பெறவுள்ளன. இப்போட்டிகள், 32ஆவது வருடமாக இம்முறை இடம்பெறவுள்ளன.

இலங்கை வர்த்தக மெய்வல்லுநர் சங்கத்தினால் நடாத்தப்படும் இத்தொடரில், இம்முறை 51 வர்த்தக அணிகளிலிருந்து ஆண்களும் பெண்களுமாக 1,500 பேர் பங்குபற்றுகின்றனர்.

"மொத்தமாக, 380 தட, களப் போட்டிகள் இந்த இரண்டு நாள் போட்டிகளில் நடாத்தப்படவுள்ளன" என, வர்த்தக மெய்வல்லுநர் சங்கத்தின் செயலாளர் டொரன்டோ ஜெயசுந்தர தெரிவித்தார். சர்வதேச நியமங்களுக்கு ஏற்றவாறு நடாத்தப்படும் இப்போட்டிகளில், சர்வதேசத் தகுதிபெற்ற அதிகாரிகளும் நடுவர்களும் கடமையில் ஈடுபடுகின்றனர்.

இப்போட்டிகளின் முடிவில், இவ்வருடம் இடம்பெறவுள்ள இரண்டு வெளிநாட்டுப் போட்டித் தொடர்களில் பங்குபற்றுவதற்கான வர்த்தக மெய்வல்லுநர் குழாமொன்று உருவாக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதில், முதலாவது தொடராக சிங்கப்பூர் தொடரும், இரண்டாவது தொடராக இந்தியத் தொடரும் இடம்பெறவுள்ளது.

## முன்னணி வீரர்கள் அரையிறுதிக்குள்

இடம்பெற்றுவந்த ஜூனியர் தேசிய டென்னிஸ் சம்பியன்ிப் போட்டிகள் நிறைவடைந்ததையடுத்து, 100ஆவது தேசிய டென்னிஸ் சம்பியன்ஷிப் பகிரங்கப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இலங்கை டென்னிஸ் சங்கத்தினால் நடாத்தப்படும் இப்போட்டிகள், அச்சங்க ஆடுகளங்களில் இடம்பெற்று வருகின்றன.

இதில், ஆண்களுக்கான ஒற்றையர் போட்டிகளில் முதலிடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ள ஷர்மால் திஸாநாயக்க, அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார். யசித்த டி சில்வாவுக்கு எதிரான காலிறுதிப் போட்டியில் அவர், 6-3, 6-1, 6-4 என்ற நேர் செட் கணக்கில் இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டார்.



இரண்டாம் நிலையில் தரப்படுத்தப்பட்டுள்ள தங்கராஜா டினேஷ்காந்தன், ஐந்தாவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ள ஹீரா ஆஷிக்குக்கு எதிரான காலிறுதிப் போட்டியில் அவர், 6-2, 5-7, 6-7 (2), 6-3, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றார்.

## நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

நீதியரசர் லோதா தலைமையிலான குழுவினரின் விசாரணைகளின் பின்னரான பரிந்துரைகளையடுத்து ஐ.பி.எல் போட்டிகளில் விளையாட சென்னை சுப்பர் கிங்க்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகளுக்கு இரண்டு வருடங்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், அந்த இரு அணிகளதும் இடங்களுக்கு புதிய வேறு இரு அணிகளைக் கொண்டுவருவதில் காணப்படும் நடைமுறைச் சிக்கல்களைக் கருத்தில்கொண்டு, புதிய நிர்வாகத்தின் கீழாக அந்த இரு அணிகளையுமே அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஐ.பி.எல் தொடரில் விளையாட அனுமதிக்கும் முடிவுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை வரவிருப்பதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையிலேயே, சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் உரிமையாளர்கள் சார்பில் முறையீட்டு மனு சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## திருமண பந்தத்தில் தினேஷ் + தீபிகா

இந்திய கிரிக்கெட் வீரர் தினேஷ் கார்த்திக், ஸ்குவாஷ் வீராங்கனை தீபிகா பல்லிகல் ஆகிய இருவருக்கும் கடந்த 18.08.2015 அன்று கிறிஸ்தவ முறைப்படி திருமணம் நடைபெற்றுள்ளது. அவரவர் தொழிலில் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக, 2013 நவம்பரில் நிச்சயதார்த்தம் நடந்தாலும் 2015 இல் தான் திருமணம் என்று அப்போது முடிவெடுக்கப்பட்டது.



அதன்படி, ஆகஸ்ட் 18 அன்று இருவருக்கும் கிறிஸ்தவ முறைப்படியும் ஆகஸ்ட் 20 அன்று தெலுங்கு நாயுடு முறைப்படியும் திருமணம் நடக்க திட்டமிடப்பட்டது. திட்டமிடப்பட்டாறே அவர்களின் திருமணம் மிக சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## டென்னீஸ் 2ம் சுற்றுப்போட்டி



இடம்பெற்றுவரும் சின்சினாட்டி டென்னிஸ் தொடரின் இரண்டாம் சுற்றுப் போட்டிகளில், முன்னணி வீர, வீராங்கனைகள் வெற்றிபெற்றுள்ளனர். முதல்நிலை வீரர் நொவக் ஜோக்கோவிச்சுக்கும் பிரான்ஸின் பெனாய்ட் பெயைருக்குமிடையிலான போட்டியில், 7-5, 6-2 என்ற செட் கணக்கில் ஜோக்கோவிச் வெற்றிபெற்றார்.

அன்டி மரேக்கும் மார்ட்டி ஃபிஷ்-க்குமிடையிலான போட்டியில், 6-4, 7-6 என்ற செட் கணக்கில் மரே வெற்றிபெற்றார். பெண்களுக்கான ஒற்றையர் போட்டிகளில், முதல் நிலை வீராங்கனை செரினா வில்லியம்ஸுக்கும் வெட்டனா பிரொங்கோவுக்குமிடையிலான போட்டியில், 7-5, 6-3 என்ற செட் கணக்கில் செரினா வெற்றிபெற்றார்.

முன்னணி வீராங்கனைகளான விக்டோரியா அஸரெங்கா, சைமோனா ஹாலெப், கரோலின் கார்சியா ஆகியோரும் இதன்போது 2ஆம் சுற்றுப் போட்டிகளில் வெற்றிபெற்றனர்.

## துடுப்பாட்ட ஆலோசகராக மஹேல

இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் தலைசிறந்த நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான மஹேல ஜயவர்த்தன எதிர்வரும் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரிலிருந்து இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட ஆலோசகராக நியமனம் பெற்றுள்ளார்.

எனினும் முழுநேர ஆலோசகராக இவர் செயற்படமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் வருடத்தின் அதிகளவான காலப்பகுதியை இதற்காக செலவிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.


18 வருடங்களாக சர்வதேச கிரிக்கெட்டில் மிகச் சிறந்த வீரராக இனங்காணப்பட்டுள்ள மஹேல ஜயவர்த்தன பல்வேறு சாதனைகளுக்குச் சொந்தக்காரராவார்.

குறிப்பாக ஆசிய ஆடுகளங்களில் இவரது அனுபவமானது எதிர்வரும் 18 மாதங்களுக்கு மேலாக ஆசிய ஆடுகளங்களில் போட்டிகளில் பங்குபற்றவுள்ள இங்கிலாந்து அணிக்கு மிகச்சிறப்பான முறையில் விளையாடுவதற்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

## தடைவிதிக்கப்பட்டிருந்த வீரர்கள் மீண்டும் களத்தில்

பாகிஸ்தான் அணியின் முன்னாள் டெஸ்ட் வீரர்களான சல்மான் பட் மற்றும் மொஹமட் ஆசிப் ஆகியோர் சர்வதேச கிரிக்கெட்டிற்கு திரும்பவுள்ளனர். ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டமை தொடர்பில் 2011 ஆம் ஆண்டு இருவருக்கும் ஐந்தாண்டு-களுக்கு போட்டிகளில் விளையாட தடைவிதிக்கப்பட்டிருந்தது. எனினும் இருவருக்குமான போட்டித் தடைக்காலம் குறைக்கப்பட்டி-ருந்ததுடன் எதிர்வரும் முதலாம் திகதி முதல் அவர்கள் சர்வதேச கிரிக்கட் போட்டிகளில் விளையாடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010ம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் ஆட்டநிர்ணயத்தில் ஈடுபட்டமை தொடர்பில் 23 வயதான ஆமீர் 32 வயதான ஆசீப் மற்றும் 30 வயதான சல்மான் பட் ஆகியோர் குற்றவாளிகளாக காணப்பட்டிருந்தனர்.



## சங்ககார விலகுவது பெரும் இழப்பு

உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் சங்ககார டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்களில் 5ஆவது இடத்திலும், அதிக சதம் அடித்தவர்களில் 4ஆவது இடத்திலும், அதிக இரட்டை சதம் எடுத்தவர்களில் 2ஆவது இடத்திலும் உள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக நேற்று தொடங்கிய 2ஆவது டெஸ்ட்போட்டியோடு அவர் ஓய்வு பெறுகிறார். சங்ககாரவின் ஓய்வு இலங்கை அணிக்கு மிகப்பெரிய இழப்பு என்று இந்திய அணியின் முன்னாள் தலைவரும், இந்திய 'ஏ' அணியின் பயிற்சியாளருமான ராகுல் டிராவிட் தெரிவித்துள்ளார்.



## டிராவிட்டை சமன் செய்த ராகுல்

இந்திய அணியின் இளம் வீரர் லோகேஷ் ராகுல் நடந்த 2வது டெஸ்டில் சதமடித்தார். இது இவரது இரண்டாவது சதமாகும். கடந்த ஜனவரி மாதம் அவுஸ்திரேலியாவுக்கெதிராக சிட்னியில் நடந்த டெஸ்டில் 110 ஓட்டங்கள் எடுத்திருந்தார். 5 இன்னிங்சில் தொடக்க ஆட்டக்காரராக ஆடியிருக்கிறார். இதன் மூலம் தொடக்க வீரராக தங்களது முதல் 5 வெளிநாட்டு இன்னிங்சில் இரண்டு சதமடித்த 2வது இந்திய தொடக்க ஆட்டக்காரர் என்ற பெருமையை அவர் பெற்றார். இதற்கு முன்பு ராகுல் டிராவிட் இச்சிறப்பை பெற்றிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விகாரைக்கு ஆயிரம் ஏக்கர்கள் மக்கள் போராட்டம் ஆரம்பம்



திருகோணமலை, சேருவில பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தோப்பூர், செல்வநகர் பிரதேசத்திலுள்ள முஸ்லிம்களுக்கு சொந்தமான 1,000 ஏக்கர் காணி சேருவில பௌத்த விகாரைக்குரியதாகக் கூறி நேற்று வியாழக்கிழமை அளவை மேற்கொள்ளப் பட்டமையைக் கண்டித்து அப்பிரதேச மக்கள் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜும்மா தொழுகையின் பின்னர் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை 17

## 5 வது கப்பலை இணைக்கும் டோக்கியோ சீமெந்துக் கம்பனி



டோக்கியோ சீமெந்துக் கம்பனியானது கிளிங்கர்களைக் கொண்டுவருவதற்கான போக்கு - வரத்திற்காகப் புதிய கப்பலொன்றைக் கொள்வனவு செய்துள்ளது.

இக்கப்பலுடன் கோர்த்து கம்பனிக்குச் சொந்தமான ஐந்து கப்பல்கள் பணியில் ஈடுபடவுள்ளன.

கடந்த 11ம்திகதி இணைக்கப்பட்ட இக்கப்பலானது எம்வி மோஹர் என்ற பெயர் தாங்கிய இருபத்தியிரண்டாயிரம் மெட்றிக் தொன் நிறை கொண்டது.

## விருப்பு வாக்கை மீள எண்ணும் "சராவின் வேண்டுகோளைச் சம்பந்தர் மறுத்தாரா?"

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்ட சரா புவனேஸ்வரன் பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகளை மீள எண்ண வேண்டும் என்ற கோரிக்கையை கட்சித் தலைவர் சம்பந்தன் மறுத்துள்ளதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விருப்பு வாக்கு 5 களுக்கு அமைய முதலாமிடத்தில் 33,838 விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்ட சம்பந்தர் முதலாம் இடத்திலும், 14,779 வாக்குகளைப் பெற்றுக்கொண்ட..... 17



"தேசிய இனமொன்று தான் வாழும் பிரதேசத்தைத் தனக்கான தேசம் என வரையறுத்துக்கொள்ள முடியும்"

தமிழ்த் தேசம் நோக்கிப் பயணிப்போம்

## சம்பூருக்கு வருகைதருகின்றார் சனாதிபதி



சம்பூர் மக்களுக்கு நாளை சனிக்கிழமை மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வினால் காணிப் பத்திரங்கள் கையளிக்கப் படவுள்ளன.

இவ் வைபவத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதா வது

சம்பூர் மக்களுக்கு உத்தியோகபூர்வமாக காணிப் பத்திரங்களை கையளித்து மீள்குடியேற்றத்தை ஆரம்பித்து வைக்க வருகை தரவிருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,

சனிக்கிழமை மாலை சம்பூ- 17

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் நால்வர் நாடாளுமன்றில்

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் கிழக்கு மாகாணசபையிலிருந்து நான்கு உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

விமலவீர திஸாநாயக்க, தயாகமகே, எம்.எம். மன்சூர் மற்றும் இம்ரான் மஹ்ரூப் ஆகியோர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மாகாணசபைகளில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் 46 பேர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது



முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி. திருகோணமலை. 0777 555 738

இவ்வாராந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 22.08.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org